D
V2-11,31'N91
N91·36·2
144895

வெளியீடு 3-6-1991 Issued 3-6-199

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, சனவரி 21, 1991-தொகுதி 36-எண் 2**

Monday, the 21st January 1991-Volume 36-No. 2


**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.**
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

**21—1—1991.**


பக்கங்கள்.

1. **வினாக்கள்—விடைகள் —**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 31—39

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 69—151

2. **தகவல் கோரல்—**

(அ) அ.இ.அ.தி.மு.க. விலிருந்து மூன்று உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்று அக்கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் பேரவைத் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு 151—169

(ஆ) அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின்கீழ் உறுப்பினர் பதவித் தகுதியின்மைக்கு ஆளாகியிருப்பதாகச் சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு 19-1-1991 ஆம் நாளன்று அளித்த மனு—பேரவைத் தலைவரின் தீர்ப்பு 172—178

3. **அறிவிப்புகள்—**

(அ) உறுப்பினர்கள் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் மற்றும் திரு. கொ. மாதப்பன் ஆகியோரின் பதவி விலகல்களை ஏற்றுள்ளது குறித்து 169

(ஆ) இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி பிரதான எதிர்க்கட்சியாகவும் சட்டமன்றப் பேரவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது குறித்து 169—170

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 172

பக்கங்கள்

. உரிமைப் பிரச்சினைகள் —

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி மீது—

பேரவைத் தலைவருடைய செயல்பாடுகள் பற்றி பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளது குறித்து .. .. 170—172

(ஆ) உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் மீது—

விடுதலைப்புலிகள் நடவடிக்கைகள் பற்றி முரண்பட்ட தகவல்கள் தெரிவித்துள்ளது குறித்து 216—225

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 178

(ஆ) பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 179

(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1991 179—180

(ஈ) மாநகராட்சி சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 180

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள நியமன) சட்ட முன்வடிவு, 1991. 180

(ஊ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்ட முன்வடிவு, 1991 181

(எ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1991 181


144895




பக்கங்கள்

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஏ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 182

(ஐ) நகர் - ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 182

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் —விவாதம். 182—216, 225—232

*திரு. இரா. சின்னசாமி .. .. 182—207

*திரு. இரா. சிங்காரம் .. .. .. 209—210, 225—232

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 232—234

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 8, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991, சனவரி 21, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முன்னவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை."

மற்றொரு உயிருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தம் உயிருக்கு ஏற்பட்டது போல் கருதி வருந்தும் மனப்போக்கு இல்லை யென்றால் அந்த மனப் போக்கு இல்லாதவர் பெற்ற அறிவினால் ஆகக் கூடிய பயன் என்ன ?

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 9320 சற்றுப் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நன்கொடை வசூலித்தல்.

* 12028—திரு. கே. ரமணி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் துறையில் உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்குப் பல கல்லூரிகளில் நன்கொடை கொடுத்தால் மட்டும் சேர்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இதைத் தடுக்க மத்திய அரசு மாநிலங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1991 சனவரி 21

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தனியார் துறையிலே கல்லூரிகளில் சேர்வதற்கு மாணவர்களிடமிருந்து ஏராளமாக நன்கொடை என்ற பெயரால் அநியாயமாக பணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிற செய்தி அரசுக்குத் தெரியாது என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. இது ஒரு ஜுடிசியல் நோட்டீஸ் மாதிரி. இது தெரியாதவர்கள் யாருமே இல்லை. இன்றைக்கு நான் ஏன் இந்தக் கேள்விகளைக் கேட்கிறேன் என்றால் இது தவறு, தவறு என்று நமது அரசு உட்பட, மத்திய அரசு உட்பட, அத்தனை பேரும் பேசிக்கொண்டிருக்கிறோம். இதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசினுடைய கருத்தில் உள்ளது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே தனியார் கல்வி நிலையங்கள் என்பது பலவகைப்பட்டதாகும். ஒரே வகையாக அமைந்தது இல்லை. அப்படி அமைக்கப்பட்டிருக்கிற அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கிற தனியார் கல்வி நிலையங்களில் சில கல்லூரிகளில் நன்கொடை வாங்கி, அதன் மூலமாக கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுகிற நிலை இருக்கிறது. அதேபோல சிறுவர்களுக்கான தனியார் பள்ளிகள் நன்கொடைகளைப் பெறுகின்றன. ஆனால் நன்கொடை தருகிற யாரும் எங்களிடத்திலே நன்கொடை கேட்கப்பட்டு, கொடுக்கப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்டோம் என்றோ, அல்லது இவ்வளவு நன்கொடை கொடுத்தோம் என்றோ இதுவரை அரசுக்குத் தெரிவித்து, தனிப்பட்ட புகார் எதுவும் கிடைக்கவில்லை. தனிப்பட்ட புகார் இல்லாமல் அரசினுடைய அதிகாரிக்கு சட்டப்படி தெரிகிற ஒரு வாய்ப்பு இல்லை. தெரிந்து நடவடிக்கை எடுக்கிற ஒரு நிலை ஏற்படவில்லை. மாறாக, தனியார் பள்ளிகளில் சேர்வதற்கு 50 இடங்கள் இருக்குமானால் 500 பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து எப்படியாவது சிபாரிசு செய்து, இடத்தைப் பெறவேண்டுமென்ற முறையில், விருப்பத்தின் மீது நன்கொடை செலுத்துபவர்களை நாம் குற்றம் சாட்டவியலாது. இந்தச் சூழ்நிலையைக் கருதி மேலும், மேலும் கல்வித்துறையில் தகுந்த மாற்றம் கொண்டுவரவேண்டும் என்று அமைச்சர் எண்ணிக்கொண்டிருக்கிறார், அரசுக்கு ஆலோசனை தருவார்.



1991 சனவரி 21]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, பல பேர்கள் சாதாரணமாக குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு கல்லூரிகளை அவர்கள் ஏற்படுத்தும்போது அதற்கான மூலதனம் போடுவதற்கு அவர்களுக்கு சக்தி இல்லாததால் அவர்கள் கொஞ்சம் நன்கொடை பெற்று, அந்த மாதிரிக் காரியங்களைச் செய்கிறார்கள். அந்த நன்கொடை கொடுப்பவர்கள் எங்களுக்கு ஆதாரப்பூர்வமாகத் தெரிவிக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆதாரப்பூர்வமாகத் தராமல் இருப்பதற்குக் காரணம் அமைச்சருக்கே தெரியும். அதைச் செய்தால் அந்த மாணவர்கள் அங்கே இருக்கமுடியாது. வேறு இடத்திலே அந்த மாணவனைச் சேர்க்கவும் முடியாது. பி.எஸ்.ஜி. விஞ்ஞான-மருத்துவக் கல்லூரியில் ரூ. 4 இலட்சம் ஒரு சீட்டிற்கு வாங்குகிறார்கள். அதில் ரகசியம் இல்லை. இன்ஜினியரிங் கல்லூரியில் வாங்கிய பணத்திற்கு, பணத்தைத் திரும்பக் கொடுக்கிறோம் என்று சொல்லி, ரசீது கொடுக்கிறார்கள். அதிலே கீழ் மட்டத்தில் இருக்கின்றவர்கள், தொழிலாளர்களுடைய குடும்பங்களில் நன்கொடை கொடுக்க முடியாமல் கல்லூரிகளிலே சேர முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. எம்.எல்.ஏ.க்களும் 100 பேர்கள் வரும்போது சிபாரிசு செய்ய வேண்டியிருக்கிறது. ஏனென்று சொன்னால் சென்ற முறை, என் மகனுக்கே இடம் தரவில்லை. அவன் 4 வருடமாக எதிலும் சேராமல் தான் இருக்கிறான். இது தொடர்பான பிரச்சினையாக அதை நான் சொல்லவில்லை.

9–05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் வினாவாகத் தான் கேட்க வேண்டும்.

திரு. கே. ரமணி : வினாவாகத்தான் கேட்பேன், கடைசியில் வருவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலேயே வந்து விட வேண்டும்.

திரு. கே. ரமணி : சில விஷயங்கள் அவருக்குத் தெரிவதற்காக, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தனியார் துறைக்கு அனுமதி கொடுக்கும்போதே சில கண்டிஷன்களைப் போட வேண்டும். அவர்களுடைய அநீதிகளைத் தடுத்து நிறுத்துவதற்கான முறையிலே ஒரு உறுதியான சட்டமாகக் கொண்டு வர வேண்டும். அந்தச் சட்டத்திற்குக் கொஞ்சம் பல் இருக்க வேண்டும், அவர்களைக் கடிப்பதற்கு, அவர்களுடைய அநீதிகளை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும். இல்லை என்று சொன்னால் ஒரு கெட்ட பெயரை அரசாங்கத்திற்கு அது கொண்டு வந்து சேர்க்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, அதற்கு அரசின் சார்பில் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[1991 சனவரி 21

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய மகனுக்கு இடம் கிடைக்காத அளவுக்கு ஒரு நிலைமை இருந்தது என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை தெரிந்திருக்குமானால் அது வேறு. ஆனால் கல்வி நிலையங்கள் நிதி பெறுவதைப் பொறுத்து சரியான சான்றுகள் இல்லாமல் அரசாகவே நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை. சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதை முற்றிலுமாகத் தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வாய்ப்பு அமையவில்லை. மற்றொன்று, பல பேர் நீதிமன்றங்களுக்குச் சென்று அரசு ஏற்றுக்கொள்ள முடியாத பள்ளிக் கூடங்களுக்கும், சட்டப்படி தீர்ப்பு பெற்று உரிமை பெற்று வந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக தனியார் கல்வித் துறையில் ஈடுபடுவதைக் குறைக்க வேண்டும் என்று பொறியியல் கல்லூரியினையும், மருத்துவக் கல்லூரியினையும் ஆரம்பிக்க அவர்களுக்கு அனுமதி தருவது நிறுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை அது. இருந்தாலும் மேலும் பரிசீலிக்கப்படும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் மற்றும் பள்ளிகளிலே மாணவர்கள் சேரும் போது லஞ்சம் வாங்குவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் தகவல் ஏதும் இல்லை என்று சொல்லுகிறார்கள். .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவில் ‘‘ நன்கொடை ’’ என்றுதான் போடப்பட்டிருக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பகிரங்கமாகச் சொல்லுகிறோம். நாங்கள் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா ? இரண்டாவது, யாரும் லஞ்சம் வாங்கும்போது சொல்லி விட்டு வாங்குவது இல்லை. இந்த விஷயம் ஊர் அறிய, உலகம் அறிய நடந்து கொண்டு வருகிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களிடம் கூட லஞ்சம் வாங்குகிறார்கள். இல்லையென்றால் டெஸ்ட் என்ற ஒன்றை வைத்து பெயில் செய்து அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் நழுவிக் கொண்டு போகாமல், அவர்கள் பள்ளிகளை நடத்துவதற்கு நன்கொடை வாங்குகிறார்கள், சிரம நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லாமல், லஞ்சம் வாங்குவதைத் தடுக்க அரசாங்கத்தில் எத்தனையோ துறைகள் இருக்கின்றன. ஆகவே முயற்சி செய்து நடவடிக்கை எடுத்து அதைத் தடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நாடு முழுவதும் தனியார் பள்ளிகளுக்கு என்று சில சலுகைகள் இருக்கின்றன. தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தனியார்கள் பொறுப்பு ஏற்று நடத்துகிறார்கள். அரசுப் பள்ளிக் கூடங்களை விட தனியார் பள்ளிகளில் சேருவதற்குத்தான்



1991 சனவரி 21]

மக்கள் விரும்பி நாடுகிறார்கள் என்று கூறப்படும் காரணத்தினால்தான் அங்கே 100 இடங்கள் இருக்குமானால் 500 பேர்கள் விண்ணப்பித்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சிப் பள்ளிகளில் சேருவதற்கு விண்ணப்பிப்பவர்களை விட தனியார் பள்ளிகளில் சேருவதற்கு விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்றன. தனியார் பள்ளிகளில் சிறப்பாக நடத்துகிறார்கள் என்ற காரணத்தினால், தேவை அதிகமாக இருந்து, வேண்டுகோள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், விரும்பி நன்கொடை கொடுப்பதற்கு, அரசு எதுவும் செய்ய இயலாது. நன்கொடை கொடுப்பது குற்றம் என்று திட்டவட்டமாகச் சொல்லக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், லஞ்சம் என்ற சொல்லுக்கு அது உட்படுமானால், அதற்குச் சான்று கிடைக்குமானால், அரசு நடவடிக்கை எடுக்கும். இல்லை என்றால் நீதிமன்றத்தினுடைய துணையை அவர்கள் நாடுவார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது ஒன்றை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் கல்லூரி, பள்ளிகளை விட தனியார் பள்ளிகள், கல்லூரிகள் சிறப்பாக நடக்கிறது என்று ஒப்புதல் தந்ததற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் இன்னது என்று தெரியவில்லை. அதனால் இந்த நன்கொடை விஷயம் மேற்கொண்டு அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம். இரண்டாவது எல்.கே.ஜி. முதல் புரொபஷனல் கல்லூரி வரைக்கும் சர்க்கார் செய்ய வேண்டியது... ... ..

9-10 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்றம் நீண்ட நாள் கழித்துத் தொடங்குவதால், எடுத்த உடனே உரையாற்றுகிறீர்கள். வினாவிலே தொடங்க வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** தனியார், சர்க்கார், செல்ஃப் பைனான்சிங் என்பது எல்.கே.ஜியிலிருந்து புரொபஷனல் கல்லூரி வரைக்கும் நடக்கிறது. அவைகளில் நன்கொடை வாங்காமல் நடத்த முடியுமா ? அதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே ‘‘ செல்ப் பைனான்சிங் ’’ என்ற அந்தத் தொடர் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, நிதி வாங்குவதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் செல்ப் பைனான்சிங் முறையை நீக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து அன்-எய்டட் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ்—அரசாங்கத்தின் உதவி பெறாத பள்ளி—என்ற அந்தப் பெயர் மட்டும்தான் இருக்கலாம் என்று சொல்லி, பொது

அடிப்படையில் '' கேபிடேஷன் ஃபீ '' வாங்கக்கூடாது என்று அறிவுறுத்தி, வாங்கப்படுமேயானால், இன்னின்ன வகையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், '' கேபிடேஷன் ஃபீ '' கொடுத்தவர்கள் அல்லது வாங்கியவர்கள் என்ற முறையில் அதை நிரூபிப்பதற்கு அரசுக்குப் போதுமான சான்று இல்லை. குற்றச்சாட்டிற்கு இடம் இருக்கிறதே தவிர, குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அரசுக்கு நேரிடையான வாய்ப்பு இல்லை.

**திரு. இரா. சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கின்ற கல்லூரிகளில், எலலாக் கல்லூரிகளிலும், குறிப்பிட்ட ஒன்று இரண்டைத் தவிர, பூண்டி புஷ்பம் கல்லூரி; மதுரை யாதவா கல்லூரி போன்ற சில கல்லூரிகளைத் தவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவை மட்டும் கேளுங்கள். ஏற்கெனவே குளிர் அதிகமாக இருக்கிறது. நீங்கள் வேறு ''Ice'' வைக்காதீர்கள்.

**திரு. இரா. சிங்காரம் :** நிறைய கல்லூரிகளில் வாங்கப்படுகின்றன. இதனால் பல்வேறு மாணவர்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால் ஒட்டுமொத்தமாக ஒரு மாற்றுத் திட்டத்தைத் தயார் செய்து, இந்தக் கல்லூரி மாணவர்கள் கல்லூரியில் சேர்வதற்கும், ''போஸ்ட் கிராஜுவேட் '' பட்டத்தை வாங்குவதற்கு முயற்சி செய்கின்ற மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில், ஏதாவது ஒரு மாற்றுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியினுடைய அடிப்படையே தவறானது. ஏதோ இரண்டு கல்லூரிகளின் பெயர்களைச் சொல்லி, மற்ற கல்லூரிகள் எல்லாம் தவறு செய்வதைப் போல பேசினார்கள். அரசுக் கல்லூரிகள் ஏராளம் இருக்கின்றன. அரசு உதவி செய்கின்ற கல்லூரிகளும் ஏராளமாக இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலே தவறு நடக்குமேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஏற்கனவே அனுமதி வழங்கியபோது செல்ப் பைனான்சிங் என்ற பெயரில் வழங்கி ஒரு அண்டர்ஸ்டாண்டிங் இருந்தது. அந்தக் கல்லூரிக்குத் தேவையான மூலதனத்தை அவர்கள் வசூல் செய்து கொள்ளலாம் என்ற ஒரு கருத்து, அப்படி 10 ஆண்டுக்காலம், 8 ஆண்டுக்காலம், 6 ஆண்டுக்காலம், 4 ஆண்டுக்காலம் நடைபெற்றுவிட்ட



காரணத்தால், கட்டுப்படுத்துகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது. கட்டுப்படுத்துவதற்கு இரண்டு முறைகள் இருக்கின்றன. இன்னும் போட்டி அதிகமாகின்ற அளவிற்குக் கல்லூரிகளை அனுமதிப்பதா, இருக்கின்ற கல்லூரிகளைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, முறையான நடவடிக்கை எடுத்த பிறகு பரிசீலிப்பதா என்ற அந்த முறையில் '' கேபிடேஷன் ஃபீ '' என்ற பெயரில் நிதி வாங்குகின்ற உரிமை அடியோடு தடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி, தவறு நடக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தை, பொதுவான கருத்தாகச் சொல்லாமல், சான்றுகளோடு திட்டவட்டமாகத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. மோகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளிலே நன்கொடை வாங்குவது என்ற பழக்கம் தமிழ்நாட்டிலே திடீரென, இந்த 10, 12 ஆண்டுக் காலத்திலேதான் ஏற்பட்ட ஒரு பழக்கம். அது கல்லூரிகளிலேயிருந்து பள்ளிகளுக்கு மாறி, இப்போது எல்.கே.ஜி., யூ.கே.ஜி.–யில் சேர்க்க வேண்டும் என்று சொன்னால் கூட, நன்கொடை கொடுக்க வேண்டும் என்ற அளவிற்கு நிலைமைகள் விரிந்து வந்திருக்கின்றன. பாரதியார் பல்கலைக்கழக செனேட்டிலே இது பற்றிப் பேசும்போது அங்கே இருக்கக்கூடிய துணை வேந்தர் அவர்கள் இந்த நன்கொடை வாங்குவதைத் தடுப்பதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அங்கே கூறியிருக்கிறார். ஆங்காங்கே பல்கலைக்கழகங்களில் இருக்கக்கூடிய துணை வேந்தர்களுக்கு அதிக அதிகாரத்தைத் தந்து இந்த நன்கொடைப் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என அறிய விரும்புகிறேன்.

9–15 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகம் எடுத்துக்கொள்கிற அந்த முயற்சியை நான் வரவேற்கிறேன். அதே போன்ற முயற்சிகளை மற்ற பல்கலைக்கழகங்களும் எடுத்துக்கொள்ளலாம். ஒரு கல்லூரியை ''அஃபிலியேட் '' செய்வது, ஒரு பல்கலைக் கழகத்திலே இணைத்துக்கொள்வது என்பதில் அந்தக் கல்லூரி முறையாக நடந்தால்தான், இணைப்பு நீடிக்கப்படும் என்ற ஒரு விதிமுறை இருக்கிறது. ஒரு கல்லூரி முறை தவறாக நடக்கிறது என்ற சான்று கிடைத்து, அங்குள்ள ஆசிரியர்களோ, மற்றவர்களோ சான்றுகள் வழங்கி பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுக்குமானால், அது நேரடியாகக் கட்டுப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பாகும்.

[1991 சனவரி 21

## தமிழக அரசின் சார்பில் ''உலமா'' பென்ஷனை உயர்த்தும் திட்டம்.

*10324—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசின் சார்பில் '' உலமா '' பென்ஷனை ரூ. 500 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ''உலமா '' பென்ஷன் பெறுபவர்கள் பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) உலமா பென்ஷனை ரு. 500 ஆக உயர்த்தும் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தற்போது 1,200 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' உலமா '' பென்ஷன் கேட்டு தமிழக அரசுக்கு இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன என்பதையும், இவர்களில் தகுதி உள்ள அனைவருக்கும் பென்ஷன் வழங்கிட உத்தரவு செய்யப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

9–20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுவரையில் எத்தனை மனுக்கள் வந்துள்ளன என்பது பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும், ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. தொடக்கத்தில், இத்திட்டத்தால் பயன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 400 ஆக இருந்தது. தற்போது 1,200 ஆக உயர்ந்து இருக்கிறது. இந்த '' உலமா '' பென்ஷன் பெறும் தகுதி உடையவர்கள் அனைவருக்கும் '' உலமா '' பென்ஷன், நிதிநிலைத் தட்டுப்பாடு காரணமாகக் கொடுக்க முடியவில்லை. இது குறித்து ஏற்கெனவே அரசு பரிசீலித்து இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு 'உறுப்பினருடைய கேள்வியையொட்டி மீண்டும் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1991 சனவரி 21]

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' உலமா '' பெருமக்களுக்கு 500 ரூபாய் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்பதுபோல அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். தற்போது இருக்கின்ற வாழ்க்கைச் சூழ்நிலையிலே 250 ரூபாய் என்பது மிகவும் குறைந்த ஒரு தொகை என்பதை மனதிலே இருத்தி, இனியாவது 500 ரூபாயாகக் கொடுக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபடுமா என்பதையும் பேஷ்மான்கள், மோதிமார்கள் என்று இருக்கக்கூடிய மதகுருமார்களுக்கு பணிப் பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நினைத்தவாக்கில் அவர்களைப் பணி நீக்கம் செய்யக்கூடிய முறையிலே, இன்றைக்கு சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தால், அதை அரசு பரிசீலனை செய்து பேஷ்மான்களுக்கும், மோதிமார்களுக்கும் பிற துறைகளிலே பணி புரிகின்றவர்களுக்கு பணிப் பாதுகாப்பு இருப்பதுபோல் பணிப் பாதுகாப்பு கொடுக்க, அரசு இந்தச் சிக்கலைப் பரிசீலனை செய்து, உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கோவை இராமநாதன் அவர்கள் ஒரு ' உலமா ' வாகவே மாறிவிட்டதற்காக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலமாக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பென்ஷனை 250 ரூபாயிலிருந்து 500 ஆக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை மனுக்கள் வந்திருக்கின்றன. இது குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. தற்போதுள்ள நிதிநிலைமையில் முடியவில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனாலும் அதை மீண்டும் வலியுறுத்துவதற்கான நடவடிக்கை அரசின் சார்பில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பேஷ்மான்கள், மோதிமார்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை என்பது உண்மைதான். சட்டப்படியான பணிப் பாதுகாப்பு அவர்களுக்கு இப்போது இல்லை. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நடவடிக்கை எடுப்பதற்காக வக்ப் வாரியத்தோடு கலந்துகொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படுகின்ற 250 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்தக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கொடுக்கின்ற தொகையை உயர்த்த முடியாவிட்டாலும் வழங்கப்படுகின்ற அந்தத் தொகையினைப் பெறுகின்றவர்களுடைய எண்ணிக்கையை, பயனடைகின்றவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ? ஏறக்குறைய 10 ஆயிரம் மனுக்கள் வக்ப் வாரியத்திலே தேங்கிக் கிடக்கின்றன. அரசு அலுவலகங்களிலேயும் ஏறக்குறைய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் தேங்கியிருப்பதாக அந்தத் துறை

[1991 சனவரி 21

மாவட்ட நீதிமன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுதல்.

* 7988—திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மூன்று மாவட்ட நீதிமன்றங்களில் ஏதாவது ஒன்றை நாமக்கல்லுக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); சேலம் மாவட்டம், நாமக்கல்லில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு, உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் மாவட்ட நீதிமன்றம் அமைய வேண்டியதினுடைய அவசியத்தை சேலம் மாவட்ட முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் ஆய்வு செய்து உயர்நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாமக்கல்லில் இருக்கின்ற 'Senior Advacates' என்று சொல்லப்படுகின்ற வழக்கறிஞர்கள் ஒரு குழுவாகக் கூடி மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களைச் சந்தித்து, நாமக்கல்லில் நீதிமன்றம் அமைய வேண்டியதன் அவசியத்தைச் சொன்னார்கள். அப்போது அரசு உத்தரவு பிறப்பித்தால் சேலம் நகரில் இருக்கின்ற ஏதாவது ஒரு நீதிமன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு எந்த விதத் தடையும் இல்லை; ஆகவே, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மூன்று மாவட்ட நீதிமன்றங்களில் ஏதாவது ஒன்றை நாமக்கல்லுக்கு மாற்றவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல், உயர்நீதிமன்றத்தினுடைய குறிப்புரை அரசுக்கு அனுப்பப்படுமானால் அரசு உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இருக்கின்ற மூன்று நீதிமன்றங்களில் ஒரு நீதி



1991 சனவரி 21]

மன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுவதால் பொருளாதார இழப்பு என்பது அரசுக்கு ஏற்படாது. காரணம், புதிதாக நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை அல்ல. இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்தை '' சிப்ட் '' செய்கின்ற அளவுக்கு அங்கேயிருந்து மாற்றம் செய்தால் அங்கே கட்டிட வசதி இருக்கிறது. ஒரு மாவட்ட நீதிமன்றம் செயல்படுகின்ற அளவுக்கு 'Civil and criminal' வழக்குகளும் அங்கே பதிவாகின்ற நிலை இருப்பதால், அதற்கு முக்கியத்துவம் அளித்து அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், அதிகக் கவனம் செலுத்தி அந்த நீதிமன்றத்தை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவரோடு வாதம் செய்ய நான் விரும்பவில்லை. இறுதியான முடிவு செய்ய வேண்டியது உயர்நீதிமன்றம் தான். உயர்நீதிமன்றத்தினுடைய பதில் கிடைத்த பிறகு தான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பாக உயர்நீதிமன்றம் விரைவில் முடிவைத் தெரிவிப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த முடிவு வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள (சிரிப்பு) மாவட்ட நீதிமன்றம் நீண்ட நாட்களாகப் பிரிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களில், அந்த மாவட்ட நீதிமன்றம் எப்போது பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவேளை தலைவருக்கும் சம்பந்தம் இருப்பதால் (சிரிப்பு)—இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரத்திலும், சிவகங்கையிலும் அமைப்பதற்கு அறிவிப்புகள் கொடுத்தாகி விட்டன. எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கான அந்த ஸ்டாஃப் எல்லாம் போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சொல்கிறது. எனவே அந்த எண்ணிக்கையை உயர்த்தி, தற்போது கொடுக்கப்படுகின்ற அந்த 1,200 என்பதை, 250 ரூபாயாகவே வைத்து மூவாயிரம் பேருக்காவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நிதித்துறையிடம் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிப்பு.

* 9320—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் அருகே உச்சிப்பரம்பு என்ற இடத்திலும், சாயர்புரத்திலும் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அது எக்காலத்தைச் சார்ந்தவை ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகள் கிடைத்திருக்கின்றன என்ற அந்தத் தகவலில் இருந்து பழங்காலத்து மக்கள் அந்தப் பகுதியிலே குடியிருந்திருக்க வேண்டுமென்கின்ற தகவல் நமக்குத் தெரிய வருகிறது. எனவே, அப்படி அவர்கள் இருந்தார்கள் என்பதற்கான, நகர அமைப்பு போன்ற ஏதேனும் சான்று கிடைத்துள்ளதா ? அவ்வாறாயின் அது எவ்வகை நாகரீகச் சிறப்புடையதாக இருந்தது ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிக விரிவான ஆராய்ச்சிக்குப் பின்னால் கண்டறியப்பட வேண்டிய ஒன்று, ஏனென்றால் பல ஆராய்ச்சிகள் பல்வேறு வகையில் வேறுபாடுகளை விளைவிக்கின்றன. இருந்தாலும்கூட, அந்த 3,000 ஆண்டுகள் என்பது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகத் தொன்மையானது அல்ல ; அண்மைக் காலத்து, சங்க காலத்திற்குச் சற்று முற்பட்ட காலம் என்று சொல்லப்படக் கூடிய காலம்





இப்பொழுது கிடைத்திருப்பது அந்த இடத்தில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது, வாழ்ந்திருக்க வேண்டுமென்பது, சாதாரணமாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எல்லாப் பகுதிகளிலும் மக்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், குறிப்பிடத்தக்க வரலாற்றுக் கண்ணோட்டத்திலே சொல்லப்படுகிற நாகரிகம் இந்தப் பகுதியில் 3,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது என்பதற்குத்தான் இந்த ஆய்வுகள் துணை செய்யும். உச்சிப்பரம்பு என்ற இடத்தில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் தாழிகள், கறுப்பு, சிவப்பு வண்ணக் கலயங்கள் ஆகியவை சிதைந்த நிலையில், உடைந்து போன துண்டுகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இரும்பினாலான அம்பு முனைகளும் காணப்படுகின்றன. இது ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சிக்குச் சற்று முற்பட்ட காலத்தைத் தொட்டுக் காட்டுகிறது என்ற வகையிலேதான் கருதப்பட முடியும்.

9–25 மணி

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரு காலத்தில் கடலில் மூழ்கிய துவாரகை நகரத்தைப் பற்றி அகழ்வாராய்வு நடந்தது போலே நம்முடைய முதற் சங்கம் இருந்த கபாடபுரத்தைப் பற்றியும், இரண்டாம் சங்கம் இருந்த தென்மதுரையைப் பற்றியும் அகழ்வாராய்வு செய்வதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவையெல்லாம் நீண்ட நெடுங்காலத்திற்கு முற்பட்டவை. 2,200 அல்லது 2,300 ஆண்டுகளுக்குள் புதைந்து போன ஒரு நகரமாகக் கருதப்படுவது கடற்கரைப் பட்டினமாகிய பூம்புகார். அந்தப் பூம்புகார் ஆய்வுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒரு முறை தொடங்கி, இடையிலே அது தவங்கி நின்று போய்விட்டது. கடல் அகழ்வாராய்ச்சி நடத்துகிற ஒரு துறை மத்திய அரசின் சார்பிலே இருக்கிறது: அந்தத் துறை மூலமாக இந்த ஆய்வினை மறுபடியும் நடத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு ஆலோசனைகள் நிகழ்த்தி, ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவிலே யிருந்து நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் சுல்தான் பேட்டை ஒன்றியம் வேலப்பநாயக்கன்பாளையத்தில் குளம் தூர் எடுக்கப்பட்டபொழுது பண்டு பானைகள் காணப் பட்டனவா ? அது எந்தக் காலத்தைச் சேர்ந்தவை ? சரித்திர முக்கியத்துவம் ஏதேனும் அதற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1991 சனவரி 21

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினைக்கு ஒரு தனிக் கேள்வி எழுப்பியிருக்கலாம் ; அதிலே உறுப்பினர் தவறி விட்டதற்காக நான் வருந்துகிறேன்.

### பெண்களுக்கான தனிப் பேருந்துகள்

*10369—திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மவுன்ட் ரோடு பகுதியிலிருந்து அலுவலகப் பணி நேரங்களில் பெண்களுக்கான தனிப் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) சென்னை அண்ணா சாலைப் பகுதியில் பணி புரிகின்ற மகளிர்களுக்காக தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகம் பல்வேறு இடங்களிலிருந்து அண்ணா சாலை வழியாக காலையில் 15 வழித் தடங்கள் மூலம் 15 பயண நடைகளும், மாலையில் 16 வழித் தடங்களில் 18 பயண நடைகளும் மகளிர் பேருந்தாக இயக்கி வருகின்றது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் கூடுதலாக வேண்டுமென்று கேட்கப் பட்டது. நான் கேள்வி கேட்ட நேரம் நீண்டகாலத்திற்கு முன்பு என்று நினைக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் எனது குடாவைக் காரணம் காட்டாமல், ஓடிக்கொண்டிருப்பதைப் பற்றிச் சொன்னதற்கு மிகவும் நன்றி. ஆனால், வருங்காலத் திலும், பெண்கள், குழந்தைகள், சிறுவர்களுக்கான பேருந்துகள் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் தொடர்ந்து விடப்பட வேண்டு மென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவை விடப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது எந்த நெருக்கடி காரணமாகவும், பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், வார நாட்களில் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. ஏற்கனவே செய்திப் பத்திரிகைகளிலே வந்துள்ளதைப்போல ஞாயிற்றுக்கிழமை மட்டும் தான் பாதியாகப் பேருந்துகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன.



1991 சனவரி 21]

அலுவலகத்திலே பணிபுரிகின்ற மகளிருக்காகவும், அதே போலக் கல்லூரிக்குச் செல்லுகின்ற மாணவியர்களுடைய வசதிக் காகவும், குழந்தைகளுடைய வசதிக்காகவும் தனிப் பேருந்துகள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருப்பது எந்த வகையிலேயும் குறைக்கப் படவில்லை. தொடர்ந்து அவைகள் குறையாமல் நிறைவு பெற நடந்து கொண்டிருக்கும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விடக்கூடிய பேருந்துகளில் பின்பகுதி இருக்கையை எடுத்துவிட்டு, பெண்கள் நிற்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கையிலே பை போன்ற பொருட்களை வைத்துக்கொண்டு, மேலே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக் கின்ற சூழ்நிலையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பின் இருக்கையை வைத்து, நிற்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பயணிகளுடைய நெருக்கடி மிகுந்திருக்கக் கூடிய வழித் தடங்களில் மட்டும்தான் பின்னிருக்கைகள் எடுக்கப் பட்டு, அந்தக் கூட்டத்தைச் சமாளிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மகளிர் பேருந்துகளில் அப்படி பின்னிருக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை. அறிந்து, அதற்கான பதிலைச் சொல்லலாம்.

9-30 மணி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரங்களில் ஓடக்கூடிய பஸ்களில் பின் இருக் கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மஃபஸலில் ஓடக் கூடிய பஸ்கள் இருக்கிறதே, அதிலே அறுபது சீட்டுகள் ; அந்த அறுபது சீட்டுகளிலும் எல்லாவற்றிலும் ஆண்களே உட்கார்ந்து விட்டால், பிறகு பெண்கள் சிறு குழந்தைகளோடு, கர்ப்பஸ்திரீ களோடு வயதானவர்களும், என் மாதிரி உள்ளவர்களும், அந்தப் பைப்பைப் பிடித்துக்கொண்டே நின்று கொண்டிருப்பது நியாயமே இல்லை. ஆகவே, ஒரு பகுதியை அது பெண்கள் சீட் என்று ஒதுக்கி விடுவோமேயானால், பெண்கள் வரும்போது, ஆண்கள் எழுந்து கொள்ளலாம். அப்பேர்ப்பட்ட நடவடிக்கை எடுத்து, பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தனலவர் : எங்களுக்கு வந்த குற்றச் சாட்டு, முற்றிலும் பெண்களே உட்கார்ந்து கொண்டு, ஆண்களை உட்கார விடமாட்டோம் என்கிறார்கள் என்பதுதான். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மகளிருக்கென்று அது மஃபஸல் பஸ் ஆக இருந்தாலும், நகரப் பேருந்தாக இருந்தாலும், இட

ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிகப்படியான மகளிர் பயணம் செய்கின்ற வழித் தடங்களில், நிச்சயமாக ஆண்கள் ஒத்துழைப்பார்கள் என்று கருதுகிறோம்.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில், அந்த இருக்கைகளிலும் 30 சதவிகிதம் என்று அறிவித்து, முடிவு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படியானால், 30 சதவிகிதத்திற்கு அதிகமாக வந்தால் என்ன செய்வது ?

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளிலே, கல்விக் கூடங்களுக்குச் செல்கிறவர்களும், வேலைக்குச் செல்கின்ற பெண்மணிகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, அதிலே பெண்களுக்கான இருக்கைகள் மிகவும் குறைவாக இருப்பதால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அது பட்டணக்கரையில் மட்டுமல்ல, பட்டிக்காட்டுப் பகுதியிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, ஒரு பகுதி ஆண்களுக்கும், ஒரு பகுதி பெண்களுக்கும் என்கிற நிலை வந்தால், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தைகள் வைத்திருப்பவர்கள் எல்லாம் சிரமப்படாமல் பயணம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு சிவபெருமான் திட்டம் என்று பெயர். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி மகளிர் பயணம் செய்யக்கூடிய வழித் தடங்களில் எங்கெங்கு அதிகமாக நெருக்கடி இருக்கின்றதோ, அந்த வழித் தடங்களில் கூடுதல் இருக்கைகள் ஒதுக்கப்படுவதற்கு போக்குவரத்துக் கழகங்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

### சென்னை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

*11895—திரு. செங்கை சிவம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் மிக இட நெருக்கடி உள்ளதால், இதை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா ?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பேருந்து நிலையம் மிக இட நெருக்கடியான சூழ்நிலையில் இருப்பதால், பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அதே நேரத்தில் சென்னைப் புறநகர்ப் பகுதிகளிலே இருந்தும் மக்கள் இப்பேருந்து நிலையத்திற்கு வருகிற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, சென்னைப் புறநகர்ப் பகுதிகளான தாம்பரம், திருவொற்றியூர், மாதவரம் போன்ற பகுதிகளில், இப்பேருந்துகளை நிறுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி பயணிகளினுடைய சௌகரியங்களைக் கவனிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் இருக்கின்ற இட நெருக்கடியைத் தடுப்பதற்கு, பக்கத்திலே இருக்கக்கூடிய திருவாங்கூர் மகாராஜா பூங்காவை, போக்குவரத்துக் கழகத்துக்கு ஒப்படைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி மன்றமும், அதைத் தற்காலிகமாக ஒப்படைத்து, பேருந்துகள் அங்கே நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், போதுமான அளவுக்கு இட வசதி இல்லாத காரணத்தினால், தாம்பரம், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் விரைவுப் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுவல்லாமல், தற்போது திருவள்ளுவர் பஸ் நிலையத்திற்கு சற்றுத் தொலைவில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விடுதிக்கு எதிரில் அரசுக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலம் கையில் இருக்கிறது. அந்த இடம் மெட்ராஸ் யுனைட்டெட் கிளப் நிறுவனத்தினுடைய கைவசத்திலே இருக்கிறது. அந்த நிலை, 1990 ஜீன் மாதத்தோடு முடிவடைந்து விட்டது. அதற்குப் பிறகு இந்த இடத்தை, அதிலே குறைந்தபட்சம் 2 ஏக்கராவது, திருவள்ளுவர் போக்குவரத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென்று, போக்குவரத்துக் கழகம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. வருவாய்த் துறை அதைப்பற்றி முடிவெடுக்க வேண்டும். அவசர நிமித்தம் காரணமாக தற்போது உடனடியாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வருவாய்த் துறையிடம் போக்குவரத்துக் கழகம் வேண்டியிருக்கிறது.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்து வரவேற்க வேண்டியது. போதுமான அளவுக்கு இன்றைக்கு திருவாங்கூர் மகாராஜா பூங்காவை இணைத்தாலும்கூட இன்னும் அதிகமான நெரிசல் தொடர்ந்து பாரிமுனையில் இருந்து

கொண்டுதான் இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு இன்னும் இரண்டு ஏக்கர் நிலம் வாங்கினாலும் போதுமானதல்ல. வளர்ந்து வரும் ஜனத்தொகை மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை மனதில் கொண்டு பல்லவன் சாலையில் உள்ள பல ஏக்கர் நிலங்களில் அமைந்துள்ள பணிமனையைப் புற நகருக்கு மாற்றி, அங்கே ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-35 மணி.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**திரு. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர் செல்லும் மெயின் ரோடும், திருச்சி மெயின் ரோடும் சேரும் இடம் ஆலந்தூர் தொகுதியில் பரங்கிமலைப் பகுதியில் உள்ளபடியால் வெளியூர் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை அந்தப் பகுதிக்கு மாற்றினால் நெரிசல் மற்றும் எரிபொருள் ஆகியவை குறைவதோடு மாநகராட்சிப் பகுதிகளுக்குள்ளே செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செயல்படவும் வாய்ப்பாக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட யோசனை ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், தாம்பரம், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் விரைவுப் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உறுப்பினருடைய யோசனையையும் பரிசீலிக்கலாம்.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகத்திற்கான கட்டிடம் கட்டுகிற பணி தொடங்கி பாதியில் நிற்பதாகவும் காண்ட்ராக்ட் பிரச்சினைதான் அதற்குக் காரணம் என்றும் சொல்லி சில வருடங்களாக அது பாதியில் நிற்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா ? அப்படி என்றால் அந்த நிலைமையைப் போக்கி அந்தக் கட்டிடப் பணி தொடர்ந்து நடக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. எஸ். எஸ். இராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்டில் இருந்து ஒரு பஸ் வெளியே வரவேண்டுமென்றால் சுமார் அரை மணி





நேரம் அல்லது ஒரு மணி நேரம் ஆகிறது. வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், இங்கிருந்து நாகர்கோவில், திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளும் மிக அதிகமான அளவில் இருப்பதால் மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலை அந்த பஸ் ஸ்டாண்டில் இருக்கிறது. ஆகவே அவற்றை இரண்டு பிரிவாகப் பிரித்து அதாவது தெற்குப் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளுக்குத் தனியாகவும், வட பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளுக்குத் தனியாகவும் என்று தனித்தனியாகப் பேருந்து நிலையங்களை அமைத்துக் கொடுத்தால் நெருக்கடியைத் தவிர்க்கலாம். ஆகவே அரசு அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனைப்படிதான் ஏற்கெனவே சென்னைக்கு வரக்கூடிய, அதாவது தெற்கு மாவட்டங்களில் இருந்து வரக்கூடிய பேருந்துகள் மற்றும் அதேமாதிரி மாதவரம், திருவொற்றியூர் பகுதிகளிலிருந்து வரக்கூடிய பேருந்துகள் ஆகியவற்றிற்கு இன்னொரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் முடிவு எடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடி குத்தகை.

*7082—**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோவில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு ஏதும் வரவில்லை. ஆனால் மன்னார்குடி சேதுபாவா அறக்கட்டளைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு வந்துள்ளது. இந்தக் குளத்தில் மீன்பிடிக் குத்தகையைத் தங்களுக்குத்தான் விடவேண்டும் என்று கோரி மன்னார்குடி

பர்வதராஜகுல உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினரும், அதேபோல திருத்துறைப்பூண்டி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினரும் அரசுக்கு மேல்முறையீடுகள் செய்துள்ளனர்.

(ஆ) இக்கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு மேற்படி தெப்பக்குளத்தில் மீன் பாசிக்குத் குத்தகையைப் பொது ஏலத்தில் விட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, திருக்கோயில்களில் உள்ள குளங்களில் மீன் பிடிப்பதால் அவற்றின் புனிதத் தன்மையே கெட்டுப்போய் விடுகிறது. ஆனால் வருவாயைப் பற்றியும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்தான். ஆனால் தண்ணீரே இல்லையே, தண்ணீரே இல்லை என்றால் மீன் எப்படிப் பிடிப்பது ? கபாலீஸ்வரர் குளத்தில் தண்ணீரே இல்லாமல் அங்கே கிரிக்கட் ஆடலாம் போல் இருக்கிறது, கலைஞர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன்பிடிக்க வாருங்கள் அய்யா.

9-40 மணி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனிதத் தன்மை கெட்டுப்போகின்றதாலே அதற்கு மாறாக வேறு ஏதாவது, தாமரை இலைகளை, வேறு ஏதாவது புஷ்பங்களை விளைவித்து அந்த வருவாயை ஈடுகட்ட அரசு முன் வருமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள திருக்கோயில்களுடைய மதில் சுவருக்கு உள்ளே இருக்கக்கூடிய திருக்குளங்களிலே, அதேபோல், மதில் சுவருக்கு வெளியிலே இருந்தாலும், தெப்பத் திருவிழா நடைபெறுகின்ற தெப்போற்சவ திருக்குளங்களிலே இதுபோன்று மீன்பிடிக்க அனுமதி தருவது கிடையாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, எங்கள் தொகுதியிலே இப்போது ஜம்புகேஸ்வரர் தேவஸ்தானத்தில் உள்ள தெப்பக்குளம் பெரிய தெப்பக்குளம் தெப்ப உற்சவம் நடந்துகொண்டிருக்கிறது. அதிலே மீன் பிடிப்பதற்குக் குத்தகைக்கு விட்டு இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைத் தடுத்து நிறுத்தி அதைப் புனிதப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களில் மீன்கள் இருந்தால் தான் அந்தக் குளத்திலே இருக்கின்ற அழுக்கைத் தின்று குளத்தைத் தூய்மைப்படுத்தும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒன்று. தூய்மையாக ஆகவேண்டிய குளத்தை, தூய்மையற்றதாக இருக்கவேண்டும் என்று தீட்சிதர் அவர்கள் விரும்புகிறார்களா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லும் பதிலை நான் சுத்தமாக நம்புகிறேன். இருந்தாலும் பல இடங்களில் இருப்பதைச் சொல்கிறேன். பாபநாசம் நதியிலே வருகிறது. அந்த இடத்திலே ஒரு மைலுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கிறது. சிருங்கேரி துங்கா நதியிலே போனால், 2 மைல்களுக்கு மீன் பிடிக்கக்கூடாது என்று இருக் கிறது. அதே போல் ரிஷிகேசத்தில் 3 மைல்களுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கின்றது. மீன்கள் நிறைய இருக்கின்றன. அந்த மாதிரி மீன்பிடித்துத்தான் அதை சுத்தம் பண்ணவேண்டும் என்பது தேவையில்லை. மீன்களைப் பிடிக்காமலேயே அதன் அவுட்லெட்டையும், இன்லெட்டையும் சரியான முறையிலே அமைத்தால் அது சுத்தமாக இருக்கமுடியுமா என்பதைப் பற்றி அரசு ஆராயவேண்டுமென்று விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

## அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி தெப்ப உற்சவம் நடத்துதல்

* 10011—திரு. நா. கணபதி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி, தண்ணீர் தேக்கி தெப்ப உற்சவம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் திருக்குளத்தைச் சீர்திருத்தி சரிசெய்து அதில் தண்ணீர் தேக்கி, தெப்ப உற்சவம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக்காலமாக தண்ணீர் கட்டுப்பாட்டால் கபாலீஸ்வரரே பாதிக்கப்பட்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கபாலீஸ்வரரே பாதிக்கப் பட்டாரா ? (சிரிப்பு).

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கபாலீஸ்வரரே பாதிக்கப்பட்டு அவர் பவனி வர
முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர்
அவர்கள் 1974 ஆம் ஆண்டு அன்றைக்கு கபாலீஸ்வரர் கோயில்
குளத்திலே தூர் வாருவதற்கு வந்தார்கள். முதல்வர் அவர்
களின் கைராசியால் அன்றைக்கு மழை அதிகமாகப் பெய்து
குளம் நிறைந்து ஏறத்தாழ 7, 8 ஆண்டுகள் அந்தத் தெப்
போற்சவம் சிறப்பாக நடந்தது. மீண்டும் ஒரு முறை முதல்வர்
அவர்கள் கபாலீஸ்வரர் குளத்திற்கு வந்து சீரமைப்புப் பணி
களைத் துவக்கித் தருவாரா என்று கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மழை வரும் நேரமாகப் பார்த்து
தூர் வார வருகிறேன்.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கபாலீஸ்வரர் குளத்திற்கு நான்குபுறமும் தண்ணீர்
வரக்கூடிய வழிகளை ஆக்கிமிரப்புதாரர்கள் அடைத்திருப்ப
தாகவும் , அது மட்டுமல்லாமல் கடந்த ஆட்சியில் அந்தக்
குளத்திலிருந்த களிமண்களை எல்லாம் வெட்டியெடுத்து அப்புறப்
படுத்தப்பட்டிருப்பதன் காரணமாகத் தண்ணீர் தேங்கியிருக்க
முடியாத நிலைமையில் இருப்பதாகவும், அதுமட்டுமல்லாது
குளத்தைச் சுற்றி பலமாடிக் கட்டிடங்கள் பல வந்து சக்தியுள்ள
ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அந்தக் குளத்துத்
தண்ணீரை உறிஞ்சிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவற்றை
யெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இங்கே மயிலைத் தொகுதியினுடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்வதுபோல்,
கடந்த 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு கட்டுமானக்
கழகத்தின் மூலமாக ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய் செலவிலே
அங்கே தூர் வாரப்பட்டிருக்கிறது. மேல்மட்டத்திலேயுள்ள
களிமண் அனைத்தும் அகற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான்
சமீபத்திலே உறுப்பினர் அவர்களும், மாநகராட்சி அதிகாரிகளும்,
அறநிலையத் துறை அதிகாரிகளும் அங்கே சென்று வேறு சில
ஏற்பாடுகளைச் செய்து, பக்கத்திலேயிருந்து வரக்கூடிய
தண்ணீரை அந்தக் குளத்திற்குள்ளே விடுவதற்கு ஏற்பாடு செய்
தும் கூட, இந்த ஆண்டு அதிகமான மழை பெய்தும்கூட,
இந்த நேரத்திலே தண்ணீர் அந்தக் குளத்திலே தேங்கவில்லை.





கீழே போய்விட்டது. ஆகவே அங்கே மத்தியிலே இருக்கக்கூடிய
நீராழியைச் சுற்றி ஒரு 25 அடி அகலத்திற்கு சுற்றுச்சுவர்
எழுப்பி அந்த இடத்திற்குள்ளே கான்கிரீட் தளம் அமைத்து—
ஏற்கெனவே திருவல்லிக்கேணியில் இருக்கக்கூடிய பார்த்தசாரதி
கோயிலைச் சேர்ந்த குளத்திலே அப்படிப்பட்ட கான்கிரீட் தளம்
முழுவதுமாக அமைக்கப்பட்டிருக்கிறது—அப்படியே இங்கே
முழுவதுமாக அமைக்காமல் 25 அடி அகலத்திற்கு மட்டும்
அமைத்து, 6 அடி ஆழம் தண்ணீர் நிற்கக்கூடிய அளவுக்கு
அமைப்பதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்து வருகிறது.

நுகர்வோர் புகார்களை விசாரிக்க மாவட்ட அமைப்புகள்.

* 2458—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் புகார்களை விசாரிக்க நுகர்வோர் பாது
காப்புச் சட்டத்தின் கீழ் மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்
பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்
படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நுகர்வோர்
குறைதீர்க்கும் அமைப்பு (District Consumer Dispu.ers Red:essal
Forum) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் நுகர்
வோர்களது புகார்களை விசாரித்துக் கொண்டிருக்கின்றன.

9–45 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம், இதுவரையில்
என்னென்ன புகார்களைப் பெற்றுள்ளது ? அவைகளில் முக்கிய
மானவைகள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்
டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாவட்டத்திலே
உள்ள இந்தக் குழுக்கள், நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ள குறை
பாடுகள் குறித்துத் தெரிவிக்கின்றபோது, அவைகளை
விசாரித்து முடிவு சொல்லியிருக்கிறது. சென்னையிலே 90

புகார்கள் 30-12-1990 முடிய கிடைக்கப் பெற்றுள்ளன. 22க்கு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. 68 விசாரணையில் இருக்கின்றன. அதேபோன்று வடஆற்காடு அம்பேத்கார் 14 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 13 விசாரணையில் உள்ளன. தென் ஆற்காடு 4 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. தஞ்சாவூரில் 6 பெறப்பட்டு, 3 முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. புதுக்கோட்டை 8 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 7 விசாரணையில் உள்ளன. திருச்சியில் 6 பெறப்பட்டு, ஆறும் விசாரணையில் இருக்கின்றன. நீலகிரி 4 பெறப்பட்டு நான்கும் விசாரணையில் இருக்கின்றன. திண்டுக்கல் காயிதே மில்லத்தில் ஒன்று பெறப்பட்டு ஒன்றும் முடிக்கப்பட்டுள்ளது. பசும்பொன் தேவர் திருமகனில் 2 பெறப்பட்டு, இரண்டும் விசாரணையில் இருக்கின்றன. காமராஜர் மாவட்டத்தில் 20 பெறப்பட்டு, 4 முடிக்கப்பெற்று, 16 விசாரணையில் இருக்கின்றன. திருநெல்வேலி-கட்டபொம்மன் 3 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 2 விசாரணையில் இருக்கின்றன. அதுபோன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு பெறப்பட்டு இரண்டும் விசாரணையில் இருக்கின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார்கள் கொடுக்கப்பட்ட பிறகு, விசாரணைக்கு எடுத்து, முடிவு எடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று பொதுமக்கள் மத்தியிலே ஒரு கருத்து இருக்கிறது. அதைப் போக்க விரைவான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான குற்றச்சாட்டு, அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி தனித்து ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால், உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

* 4402—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும் ?



மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யும் நிலை இருக்கிறது. அதிலிருந்து ஜவ்வரிசி மாவுகள் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்கின்ற 100க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் அந்தப் பகுதியிலே தனி யாரால் நடத்தப்படுகின்றன. தனியாரிடம் குச்சிக்கிழங்கு உற் பத்தி செய்கின்ற விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, அங்கே ஓர் இடத்திலா வது குச்சிக்கிழங்கிலிருந்து மாவு உற்பத்தி செய்கின்ற ஒரு கூட்டுறவு பேக்டரியை உருவாக்கி, விவசாயிகள் நலனைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது கேள்வி. எனவே, உற்பத்தியாளர் விற்பனை செய்யும் சங்கங்கள் ஏற் கெனவே தொழில் வணிகத் துறையின் கீழ் இரண்டு இருக்கின்றன. தொழில் ரீதியாக ஜவ்வரிசியும், மாவு போன்றவையும் தயா ரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக்கிழங்கிலிருந்து உப பொருள்களை உற்பத்தி செய்யும் பேக்டரி கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படுமா என்பதுதான் நான் கேட்ட மூலக்கேள்வி. கேள்விப் பிரிவிலே திருத்தப்பட்டிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல. குச்சிக் கிழங்கிலிருந்து இதர பொருள்கள் உற்பத்தி செய்வது பரிசீலனை யில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை முடிந்து, வரப்போகிற ஆண்டில் கூட்டுறவுத் துறையில் அந்த பேக்டரியைத் துவக்க முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: : பேரவைத் தலைவரவர்களே, செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கொப்ப விரைவு படுத்தப்படும்.

### தென்காசிக்கு அருகில் செண்ட் தொழிற்சாலை: துவங்குதல்.

* 207—திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்.
திரு. எஸ். டி. உகம்சந்த்.
திரு. எஸ். எஸ். இராமசுப்பு.
திரு. சு. ரகுநாதன்.
திரு. கு. ரவி அருணன்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்காசிக்கு அருகில் செண்ட் தொழிற்சாலை துவங்குவதற்கு, மத்திய அரசு உரிமம் கொடுத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வங்கிகளில் கடன் வாங்கி மல்லிகை மற்றும் இதர மலர்கள் பயிரிட்டுள்ள விவசாயிகளின் இன்னல் நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

தென்காசிக்கு அருகில் செண்ட் தொழிற்சாலை துவங்குவதற்கு மத்திய அரசு 1986 ஏப்ரல் மாதம் முன் அனுமதி வழங்கியது. அது 1989 ஆம் வருடம் ஜுன் மாதம் முடிய மூன்று வருடங்களுக்கு சட்டப்படி செல்லக்கூடியது என மத்திய அரசு கூறியுள்ளது. இதற்கிடையில் செண்ட் தொழிற்சாலை நிறுவ வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி, வெளிநாட்டுச் சந்தையில் விற்பனை ஏற்பு முதலானவை தேவைப்படுவதாலும், உலகச் சந்தையில் செண்ட் விலை வீழ்ச்சி, உள்நாட்டில் இதற்கான தேவை அதிகமில்லாமை, ஏற்றுமதி வீழ்ச்சி, ஏனைய நாடுகளின் போட்டி இவற்றுடன் செயற்கை செண்ட் உற்பத்தி ஆகியவை காரணமாக தனியார் துறையில் செண்ட் தொழிற்சாலை நிறுவ முன்வராததாலும், கூட்டு முதலீட்டுக்கும் சாத்தியக் கூறுகள் இல்லாததாலும், மேலும் புதிதாக செண்ட் தொழிற்சாலை ஆரம்பித்தால் நம் மாநிலத்தில் ஏற்கனவே உள்ள சிறு செண்ட் தொழிற்சாலைகள் உற்பத்திப் பெருக்கு மற்றும் போட்டியால் பாதிக்கப்படும் நிலை இருப்பதை அரசு அறிகிறது. எனவே இத்தொழிற்சாலை நிறுவுவதை எந்த நிறுவனத்துடன் மேற்கொள்ளலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இன்னும் உள்ளது, மேற்கூறிய காரணங்களினால் மத்திய அரசு வழங்கிய முன் அனுமதியை தொழில் உரிம்மாக மாற்ற இயலவில்லை.





மல்லிகைப்பூ மற்றும் வாசனைப் பூக்கள் வளர்ப்பதற்காக 35 விவசாயிகளுக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ரூ.32,420 கடன் வழங்கியுள்ளன. மல்லிகைப் பூவிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும் வரை, விவசாயிகளால் பயிரிடப்படும் மல்லிகை மலர்களை கிலோ ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வாங்கிக்கொள்ள இயலாது. எனவே இத்திட்டம் செயல்பட்டு இத்தொகை வழங்கப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய அக்ரோ-இன்ஜினியரிங் நிறுவனம் தான் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமென்று சொல்லி, விவசாயிகளுக்கு மல்லிகை, பிச்சி நாற்றுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 2, 3 ஆண்டுகள் அவர்கள் அதை வளர்த்து, இப்போது அந்தப் பூக்களை வெளியிலே வியாபாரம் செய்ய முடியாமலும், வாங்கிய கடனை அடைக்க முடியாமலும் இருக்கிறார்கள். 3 ஆண்டுகளாக அந்த விவசாயிகள் வேறு வருமானம் பெற முடியாத நிலையில், அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கையிலே விளக்கமாக பதில் தரப்பட்டிருக்கிறது. தென்காசிக்கு அருகில் செண்ட் தொழிற்சாலை துவங்குவதற்கு மத்திய அரசு 1986 ஏப்ரல் மாதம் முன் அனுமதி வழங்கியது. அது 1989 ஆம் வருடம் ஜுன் மாதம் முடிய மூன்று வருடங்களுக்கு சட்டப்படி செல்லக்கூடியது என மத்திய அரசு கூறியுள்ளது. இதற்கிடையில் செண்ட் தொழிற்சாலை நிறுவ வெளிநாட்டுத் தொழில்நுட்ப உதவி, வெளிநாட்டுச் சந்தையில் விற்பனை ஏற்பு முதலானவை தேவைப்படுவதாலும், உலகச் சந்தையில் செண்ட் விலை வீழ்ச்சி உள்நாட்டில் இதற்கான தேவை அதிகமில்லாமை, ஏற்றுமதி வீழ்ச்சி, ஏனைய நாடுகளின் போட்டி இவற்றுடன் செயற்கை செண்ட் உற்பத்தி ஆகியவை காரணமாக தனியார் துறையில் செண்ட் தொழிற்சாலை நிறுவ முன்வராததாலும், கூட்டு முதலீட்டுக்கும் சாத்தியக் கூறுகள் இல்லாததாலும் இது கைவிடப்பட்டது. 1989 ஆம் ஆண்டு தனியார் ஒருவர் இதை ஆரம்பிக்க விண்ணப்பம் தந்தார். அந்த விண்ணப்பம் குறித்து தொழில் நுட்பக் கருத்துக்களைத் தாருங்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் இன்னும் சரியான தொழில்நுட்ப விளக்கங்களை எல்லாம் அரசுக்குத் தரவில்லை. அதைப் பற்றியும் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. மல்லிகைப் பூ மற்றும் வாசனைப் பூக்களை வளர்ப்பதற்கு அந்தப் பகுதியில் 35 விவசாயிகளுக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழங்கியுள்ள கடன் தொகை 32,420 ரூபாய். கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1991 சனவரி 21

திரு. எஸ். டி. உக்கம்சந்த் : பேரவைத் தலைவரவர்களே. இந்த சென்ட் தொழிற்சாலை வருமென்று நம்பி பல விவசாயிகள் கடனை பெற்றிருக்கிறார்கள். அரசு, விவசாயிகளின் பல்வேறு கடன்களை ரத்து செய்திருக்கிறது. மத்திய அரசும் கடன்களை ரத்து செய்திருக்கிறது. அதைப் போன்று மாநில அரசு இந்தக் கடனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, ரூபாய் 32,420 அவர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொகை ரத்து செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். எஸ், இராமசுப்பு : பேரவைத் தலைவரவர்களே, தென்காசி தாலுக்கா ஆலங்குளம் பகுதியில் இந்தப் பூக்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. மல்லிகை, பிச்சி போன்ற பூக்கள் அந்தப் பகுதியிலே சீசன் சமயங்களில் விவசாயிகளுக்கு எந்தவித லாபமும் இல்லாமல் குறைந்த விலைக்கு விற்கும் நிலை ஏற்படுகிறது. ஆலங்குளம் பகுதியிலே ஒரு சென்ட் தொழிற்சாலை அமைத்தால் அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அந்தப் பூக்களுக்கும் சரியான விலை கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே ஆலங்குளம் பகுதியிலே சென்ட் தொழிற்சாலை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இங்கே கடனைத் தள்ளுபடி செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இது மட்டும் போதாது. பூக்களுக்கு விலையும் கிடைப்பதற்கு வழிவகை செய்யவும் அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

9–55 மணி.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : : பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூ உற்பத்தி செய்வதையெல்லாம், அரசாங்கம் தற்போது அவர்களுக்குக் கட்டுப்படி ஆகக் கூடிய கொள்முதல் விலை கொடுத்து வாங்குவதற்குத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. சென்ட் தொழிற்சாலை ஒன்று . நிறுவுவதற்குத்தான் இந்த கேள்வி எழுப்பப்பட்டது. பிரான்ஸ் நாட்டினுடைய தொழில் நுட்ப உதவியோடு இந்தத் தொழிற்சாலையை நிறுவலாம் என்று முன்பு ஒரு கோரிக்கை வந்து தனியாரும் அரசாங்கமும் கூட்டு முயற்சியில் ஆரம்பிக்கலாம் என்று அந்த விண்ணப்பத்தில் சொன்னார்கள். அந்தக் கோரிக்கை என்ஜீனியர்கள் சார்பாகப் பரிசீலிக்கப்பட்டபோது சரியான தொழில் நுட்பம், அப்படி உற்பத்தி செய்யக்கூடிய சென்ட் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகை, இவைகளை எல்லாம் ஆராயும்போது சரியான சாத்தியக் கூறுகளை மனுச் செய்தவர்கள் தெரிவிக்காததால் ஆரம்பிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1991 சனவரி 21]

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே' தென்காசி பகுதியிலே சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கியும், அங்கே விவசாயிகள் பூக்களை உற்பத்தி செய்வதற்காக பூந்தோட்டங்களை ஏற்படுத்தியும் கூட இப்போது அந்தத் தொழிற்சாலை கூட்டு நிறுவனமாக பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம், பவானிசாகர் பகுதிகளில் ஏற்படுத்துவதற்காக அரசு முயற்சி செய்ததாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி ஒரு பரிசீலனை அரசாங்கத்திடம் இல்லை. 35 விவசாயிகள் தான் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் 32 ஆயிரம் சொச்சம் ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார்கள். இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்து இருப்பதே அந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்று.

## வேளாண்மைப் பணிகளுக்கு பிளாஸ்டிக் பயன்படுத்துதல்

*438—திரு. மா. சுந்தரதாஸ் :
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் தொழில்துறை பொறியியல் தேசிய பயிற்சி நிறுவனம் (National Institute of Training in Industrial Engineering) மூலம் வேளாண்மையில் பிளாஸ்டிக் சாதனங்களை அறிமுகப் படுத்தும் முயற்சி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்ட்டிக்கில் சாதனங்களைத் தயாரித்தால் அது மெயின்டனன்சுக்கு ஈஸியாக இருக்கும் ; துருப் பிடிக்காது ; மக்களுக்கு விலை குறைவாகக் கிடைக்கும் என்று விவசாயிகள் மத்தியில் சொல்லப்படுகிறதே, அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1989 ஜூலை மாதத்தில் கடித எண் 932/85/என்ஐடி/நாள் 10—7—1979இல் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தை மத்திய அரசு உதவியுடன், சொட்டுத் தெளிப்பு நீர்ப் பாசன முறையை ஊக்கப்படுத்தும் திட்டத்தை, பிளாஸ்ட்டிக் கல்ச்சர் திட்டத்தின் கீழ் இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் உதவியுடன் செயல்படுத்த கருத்துரு ஒன்றை நம்முடைய மாநில அரசாங்கத்திடம் கேட்டார்கள். நம்முடைய அரசு அந்தக் கருத்தின் அடிப்படையில் 1989 இல் இந்த அரசு பொறுப்பேற்ற உடன், மத்திய அரசாங்கத்துக்கு அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு அறிக்கையை அவர்களுக்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். மத்திய சர்க்காரிடம் இருந்து அதற்கான அனுமதி இன்னும் வரவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் அனுமதி வராமல் கூட நம்முடைய மாநில அரசு செய்வதற்கு எண்ணங்கள் இருக்கின்றனவா ? ஏனென்றால் விவசாயிகள், அது கிடைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று கூறுகிறார்கள். எல்லாத் துறையிலும் பிளாஸ்ட்டிக் சாதனங்கள் வந்துவிட்டன. விவசாயத் துறையில் மாத்திரம் தான் அது இல்லை. குறிப்பாகச் சொன்னால் கடலைப் பருப்பு உடைக்கின்ற இயந்திரம் தயாரித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இதுபோன்றவைகளை எல்லாம் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் தொடங்குவதற்கு மாநில அரசுக்கு எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

### நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

*1632—திரு. கோ பூவராகன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றும் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,





(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரு சுரங்கத்திலிருந்தும் வெளியேற்றப்படும் தண்ணீர் அந்நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் இரண்டு அனல் மின் நிலையங்களைக் குளிரூட்டவும், உரத் தொழிற்சாலை மற்றும் நகரிய உபயோகத்திற்கும் பயன்படுத்தப்பட்டது போக எஞ்சிய உபரிநீர் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 24,993.62 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசனத்திற்குத் துணை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

10–00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீர் அவர்கள் உபயோகத்திற்குப் போக, மீதி எவ்வளவு நமது தேவைக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் ? இப்போது பாய்கிற நிலங்கள் எல்லாம் ஏற்கெனவே மேட்டூர் நீர் பாய்கின்ற இடங்கள் தான். ஆனால் நெய்வேலியில் இறைக்கப்படுகிற நீரை, பக்கத்தில் மேற்குப் புறங்களில் நீர் ஆதாரம் இல்லாத இடங்களுக்கு அனுப்பாமல் வேறு இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் நீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே எடுக்கின்ற நீரை, இதுவரை பாயாத பகுதிகளுக்கு, அதாவது மேற்குப் பகுதி மற்றும் தெற்குப் பகுதிக்குச் கொண்டு செல்வதற்கானத் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதல் சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் உபரி நீர் மூலம் பாசனம் பெறுவது 3,162 ஏக்கர் நிலங்கள். இரண்டாவது சுரங்க உபரி நீர் மூலம் — இந்திரா காந்தி அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ள சுரங்க உபரி நீர் மூலம் பாசனம் பெறுவது 6,590 ஏக்கர். இரண்டு உபரி நீரும் இல்லாமல், வாலாஜா ஏரியில் ஆயக்கட்டுப் பாசனம் பகுதிகளின் அளவு 10,254 ஏக்கர். பெருமாள் ஏரியிலிருந்து பயன் பெறுவது 4,987 ஏக்கர். கோடைக் காலங்களில் வினாடிக்கு 25 கன அடி வீதமும், மற்றக் காலங்களில் வினாடிக்கு 65 கன அடி வீதமும் தண்ணீர் கிடைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு தண்ணீரும் கிட்டத்தட்ட 25,000 ஏக்கர் அளவுக்குப் பாசனம் பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, அவர்கள் நேரடியாகக் கேள்வி கேட்காவிட்டாலும், விருத்தாசலம் அணைக்கட்டுக்குக் கொண்டுவந்து அதை வலது புற பிரதான கால்வாயில் விடமுடியுமா என்பதுதான் கேள்வி. ஆனால் அது மேற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஆகவே, அங்கே தண்ணீர் போகாது. எனவே, அந்தத் தண்ணீரை அங்கே கொண்டுபோய் விட வேண்டுமானால், பம்ப்பிங் மூலம்தான் கொண்டு போக முடியும். எனவே, அது இயலாது. மற்றப் பகுதி

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## தொழிற்பேட்டை அமைத்தல்.

*11516—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேரூர் தொகுதி மலுமச்சம்பட்டி கிராமத்தில் " சிட்கோ " தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்படி திட்டம் " சிட்கோ " நிர்வாகக்குழுவில் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலுமச்சம்பட்டி கிராமத்தில் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் புதிதாக சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்படி நிலங்களைக் கையகப்படுத்த 1990 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு அனுமதியளித்துள்ளது. இந்நிலங்களைக் கையகப்படுத்துமாறு கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நில எடுப்பிற்கான செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் அரசாங்கம் உடனடியாக நிலங்களை கையகப்படுத்தும்.



## குடவாசல் அரசு மருத்துவமனை.

*9199—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குத்தாலம் தொகுதி, குடவாசல் அரசு மருத்துவமனை, வட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி கட்டிட வசதி, எக்ஸ்ரே பிரிவு, போதுமான மருத்துவர்கள் நியமனம் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடவாசலில் 16 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவமனை இருக்கிறது. இங்கு பரிசோதனைக் கூடம் உள்ளது. மேலும் 14 படுக்கைகள் அமைக்க பகுதி 2 ஆம் திட்டத்தின் கீழ் பிரேரணை செய்யப்பட்டு நிதி நிலை காரணமாக ஏற்கப்படவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அதிகபடுக்கை வசதிகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் அனுமதி அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அங்கே அவசர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, மருத்துவர்கள் வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் பிரேரணைகள் பெறப்பட்டு நிதிநிலை காரணமாக இந்த ஆண்டு ஏற்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று பல்வேறு மருத்துவமனைகளிலிருந்தும் கோரிக்கை வந்திருக்கின்ற காரணத்தால் பொதுவாக தாலுக்கா மருத்துவமனைகளில் படுக்கை எண்ணிக்கையை குறைந்தபட்ச அளவிலாவது உயர்த்த முடியுமா என்று அரசு பரிசீலித்து வருகிறது. நிதி நிலைக்கேற்ப அதற்கான முடிவுகளை எடுத்து அவற்றின் விரிவாக்கப் பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

களுக்கு விஸ்தரிக்க, அந்த நிறுவனத்துடன் பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே இந்தப் பகுதிகளில்தான் விஸ்தரிக்கப்பட முடியுமே தவிர, விருத்தாசலத்திற்குக் கொண்டுவருவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சுரங்கத்தில் தண்ணீர் எடுத்து இறைக்கும் பகுதிகளில், ஏற்கெனவே பாசன வசதிக்கு அரசாங்கம் உறுதி செய்த பகுதிகள்தான். அங்கேதான் மீண்டும் இறைப்புத் தண்ணீர் போகிறது. ஆனால் தண்ணீர் மேற்குப் பகுதிகளுக்குத்தான் தேவை. அங்கே நிலத்தடி நீர் இல்லை. மிகவும் வறட்சியான பகுதிகளைப் பாதுகாக்க, இப்போது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த நிறுவனத்திடம் இருந்து ராயல்டியாக ரூபாய் 30 கோடி பெற்றிருக்கிறார்களே, அதிலிருந்து 1 கோடி ரூபாயையாவது செலவு செய்து அங்கே தண்ணீர் கொண்டுவர வேண்டும். இறைக்கிற தண்ணீரைக் கொஞ்சம் தூக்கி இறைத்தால் வீராணம் குழாய்களையும் பயன்படுத்தினால் அந்தத் தண்ணீர் மேற்குப் பகுதிக்கு வந்துவிடும். அதுகுறித்து நெய்வேலி நிறுவனத்துடன் பேசி, அவர்கள் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டால், பல கிராமங்கள் பயன் அடையும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அங்கே நேரில் சென்று பார்த்துவிட்டு, அதற்கு அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தில் எனக்கு முரண்பாடான எண்ணம் இல்லை. இயலாமையைத்தான் நான் சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மனம் மகிழ்ச்சியடையத்தக்க வகையில் ஒரு நல்ல செய்தி. அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவர்களோடு பேச வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நமது அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களும் சமீபத்தில் அதுகுறித்து அந்த நிறுவனத்துடன் பேசிவிட்டு வந்திருக்கிறார். வாய்ப்புக் கிடைத்தால், விரைவில் இது குறித்து அந்த நிறுவனத்துடன் நான் நேரில் பேசி, நடவடிக்கை எடுகக லாம். உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றலாம்.

ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரும் தண்ணீரை எடுத்தல்.

*8397—திரு. சோ. அழகர்சாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரக்கூடிய தண்ணீரை இடைமறித்து ஆயில் இன்ஜின்கள் மூலம் புஞ்சை நிலங்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்தக் கோரி அப்பகுதி விவசாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்துவதற்காக அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து வடிகால் மூலமாக ஆறுமுகமங்கலம் குளத்திற்கு நீர் நிரப்பப்படுகிறது. தூத்துக்குடி தொழிற்சாலைக்கும், மின் உற்பத்திக்கும் வினாடிக்கு 40 கன அடி தண்ணீர் எடுப்பதாக ஒப்பந்தம். ஆனால் ஆறுமுகமங்கலம் குளத்திற்கு ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து 140 கன அடி தண்ணீரை எடுத்துச் செல்கிறார்கள். அதனாலே தண்ணீர் போகிற போது பக்கத்தில் இருக்கிற விவசாயிகள் கவரப்பட்டு தண்ணீரை எடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக குழாய் மூலமாக நீங்கள் 40 கன அடி தண்ணீர் மட்டும் எடுத்துச் சென்றுவிட்டால் ஸ்ரீவைகுண்டம் அணையில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது விவசாயத்திற்குப் பயன்படும். எனவே, குழாய் ஒன்று அமைத்து அந்த 40 கன அடி தண்ணீரை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல ஸ்பிக் தொழிற்சாலைக்கும், தூத்துக்குடி தெர்மல் பிளாண்டிற்கும் தேவையான தண்ணீரைக் குழாய் மூலமாக கொண்டு செல்வதன் மூலம் இப்படிப்பட்ட பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பில்லையென்று நானே இலாக்காவினரிடம் தெரிவித்து அந்தச் செலவுகளை ஸ்பிக் நிறுவனமும், தெர்மல் பிளாண்ட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன். காரணம், சில நேரங்களில் தண்ணீர் போகிறபோது இவர்களே எடுத்துவிடுகிற காரணத்தால் தொழிற்சாலை பாதிக்கப்பட்டு விடுகிறது. எனவே, அந்த எண்ணம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*3780—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரியில் பழவகைகளைக் கொண்டு ஜாம் (Jam) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

[1991 சனவரி 21

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குடவாசல் தாலுக்கா மருத்துவமனை 1955 ஆம் ஆண்டு திரு. ஏ. கே. சின்னையா அவர்களால் இனாமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டு அதிலேதான் இன்று வரையில் மருத்துவமனை நடந்து வருகிறது. அது விஸ்தரிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும். ஆகவே, இந்த ஆண்டு அந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதோடு, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவாதத்தை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு குடவாசல் மருத்துவமனையின் மீது உள்ள அக்கறையை நான் நன்கு அறிவேன். எல்லா மருத்துவ மனைகளிலிருந்தும் இதுபோன்ற கோரிக்கைகள் வந்திருக்கின்ற காரணத்தால், நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்போது அரசு எல்லா மருத்துவமனைகளையும் விரிவுபடுத்துகின்ற பணியை மேற்கொள்ளும்.

10—10 மணி

குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

*10623—திரு. எஸ். மூக்கையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பாச்சலூர், மண்ணவனூர், காமனூர் ஆகிய இடங்களில் நீண்ட காலமாக குடி தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பாச்சலூர், மண்ணவனூர், காமனூர் ஆகிய கிராமங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களாகும்.

(ஆ) பாச்சலூர், மண்ணவனூர் ஆகிய கிராமங்களுக்கு முழுமையான குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற இந்த நிதியாண்டில் (1990–91) சேர்க்கப்பட்டுள்ளது. காமனூர் கிராமத்திற்கு வரும் ஆண்டுகளில் திட்டம் எடுக்கப்பட்டு செயலாக்கப்படும்.



1991 சனவரி 21]

கைத்தறித் தொழிலாளர்களுக்கு ரிபேட்

*6079—டாக்டர் ச. சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கைத்தறித் தொழிலாளர்களுக்கு ரிபேட் (Rebate) தொடர்ந்து கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் தொடர்ந்து கிடைப்பதற்கு அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்காக நமது கலைஞர் அரசைப் பொறுத்தவரையில் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தள்ளுபடி சம்பந்தமாக என்ன கொள்கை வகுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், இதற்கு முன்னால் இருந்த அரசு இது சம்பந்தமாக என்ன நிலையை எடுத்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி முன்பு பொறுப்பேற்ற நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில், நெசவாளர்களுக்கு 90 நாட்கள் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் இந்த மானியத் தொகை 30 நாட்களாகக் குறைக்கப் பட்டது. மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால், 90 நாட்கள் தள்ளுபடி கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப் பட்டு இருக்கிறது. மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டதைப் போல, நெசவாளர்களுக்கு 100 நாட்கள் தள்ளுபடி என்பது மாபெரும் அறிவிப்பாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த 100 நாட்கள் தள்ளுபடியின் மூலமாக ஒவ்வொரு மாதமும் நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகளை உடனுக்குடன் விற்பனை செய்வதற்கும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கும், 100 நாட்கள் தள்ளுபடி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த 100 நாட்கள் என்பது கைத்தறி வார விழாவில் 10 15 நாட்களும், பெரியார், அண்ணா பிறந்த நாட்களில் 10 நாட்களும், தீபாவளிப் பண்டிகைக்கு 25 நாட்களும், பொங்கல் பண்டிகைக்கு 10 நாட்களும், மீதமுள்ள 8 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் 6ஆம் தேதியிலிருந்து 10ஆம் தேதி வரையிலும் 5 நாட்கள் விதமாக 40 நாட்கள், ஆக 100 நாட்கள் தள்ளுபடியாக

வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகள் மாநகராட்சி மன்றத்தின் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேற்கண்ட பகுதிகளில் உள்ள சுகாதாரக்கேடான நிலைமைகளை ஒழுங்குபடுத்திட மாநகராட்சி மன்றம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

3—

கார்களை நிறுத்தும் 'நிலத்தடி வாகனங்கள் நிறுத்துமிடங்கள்' உருவாக்கும் திட்டம்.

வினா எண் 471—திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சென்னையில் போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் கார்களை நிறுத்த 'நிலத்தடி வாகனங்கள் நிறுத்துமிடங்கள்' (underground car parking centres) உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

இதுபோன்ற திட்டம் எதுவும் இல்லை.

4—

திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியச் சாலைகள் பழுதடைவதைச் சீர் செய்யும் திட்டம்

வினா எண் 534—திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியச்சாலைகளில் ஓ.என்.ஜி.சி. கனரக வாகனங்கள் செல்வதால் சாலைகள் பழுதடைவதை ஓ.என்.ஜி.சி.யிடம் மதிப்பீடு பெற்று சீர்செய்ய அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கோரிக்கையேதும் அரசிடம் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

5—

புதியதாக பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கும் திட்டம்

வினா எண். 649—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதியதாக பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு இல்லங்கள் தொடங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு தொடங்கப்படும்?

விடை—

(அ) புதியதாக மறுவாழ்வு இல்லம் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

6—

பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 'வைட்டமின்-ஏ' மாத்திரை வழங்கும் திட்டம்

வினா எண். 712—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்க்கு கண்பார்வை பாதுகாப்பிற்காக 'வைட்டமின்-ஏ' மாத்திரைகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

ஒவ்வொரு மாதமும் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை உடனுக்குடன் விற்பனை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது.

**குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டிடங்கள்.**

*9917—**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆயிரம்விளக்குத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டிடங்கள் கட்டுவதற்கு எந்தெந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆயிரம் விளக்குத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 1990–91-ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, டாக்டர் தாமஸ் சாலை, சத்திய மூர்த்தி நகர், பருவா நகர், எம். கே. இராதா நகர், அருந்ததியர் நகர், பத்திரிகரை, சர்தார் சிங் தோட்டம், வடக்கு கிரியப்பா சாலை மற்றும் மாம்பலம் விரிவாக்கம் போன்ற இடங்களைத் தேர்வு செய்துள்ளது.

**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியில் 125-வது வட்டம் முதலியாண்டான் தோட்டம், 123-வது வட்டம், கோமையப்பன் தெரு, ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்ட முடியாத அளவிற்கு சிலர் தனிப்பட்ட முறையில் " ஸ்டே " வாங்கி இருப்பதாகத் தெரிகிறது. அது குறித்து அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகளை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் இடங்களை ஆர்ஜிதம் செய்து, குடிசை மாற்று வாரியம் கட்டிடம் கட்டுவதற்கு இப்படிப்பட்ட இடங்கள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இரண்டு இடங்களையும், வழக்கு மன்றத்தில் குடிசை மாற்று வாரியம் கையகப்படுத்துகின்ற வகையில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இடம் கிடைத்தவுடன், கட்டுமானப் பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குத் தொகுதி 108-வது வட்டம் வள்ளுவர் குப்பம், அதேபோல், 104-வது வட்டம் சர்தார்சிங் கார்டன் ஆகிய பகுதிகளில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை நம்முடைய குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கியிருப்பதாக குறிப்பு சொல்கிறது. அது உண்மையா ? அது உண்மையெனில், அது குறித்து நம்முடைய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இரண்டு இடங்களை, மாநகராட்சி வழங்கியிருக்கிறது. கட்டிடம் கட்டுவது குறித்து குடிசை மாற்று வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.**

**1—**

**திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி.**

வினா எண். 133—**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

இல்லை.

**2—**

**கோவை மாநகராட்சி மன்றம்.**

வினா எண். 326—**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாநகரில் செல்வபுரம், கல்லாமேடு, பாளையன்தோட்டம், லிங்கேகவுடர் தோட்டம் ஆகிய இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், வீட்டுவசதி

[1991 சனவரி 21

விடை—

(அ) தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்க்கு கண்பார்வை பாதுகாப்பிற்காக 'வைட்டமின்-ஏ' மாத்திரைகள் தற்போது வழங்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

7—

பழனி நகரை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம்

வினா எண். 718—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள பழனி நகரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) எந்த ஒரு நகரையும் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

8—

நெற்பயிரைக் காட்டுப் பன்றிகளிடமிருந்து காக்கத் தடுப்புவேலி அமைக்கும் திட்டம்

வினா எண். 828—திரு. கு. ரவி அருணன்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இராமநதி, கடனா நதி நீர்த்தேக்க ஆயக்கட்டில் விளையும் நெற்பயிரைக் காட்டுப் பன்றிகளிடமிருந்து காக்க, அப்பகுதியில் தடுப்புவேலி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயற்படுத்தபடும் ?



1991 சனவரி 21]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9—

மதுராந்தகம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

வினா எண். 1205—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை–அண்ணா மாவட்டம், மதுராந்தகம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

10—

மதுராந்தகம் பெரிய ஏரியின் வடிகால்களுக்கு பக்கச்சுவர் கட்டுதல்

வினா எண். 1353—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியின் வடிகால்களுக்கு பக்கச்சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியின் வடிகால்களுக்கு பக்கச்சுவர் கட்டித்தர பொதுப்பணித் துறையில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

11—

### மஞ்சள் ஆற்று வாய்க்காலில் பாலம் கட்டுதல்

வினா எண். 1432—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு டவுன் பஞ்சாயத்தில் இணைந்துள்ள ஆகுசாபட்டி என்ற கிராமத்தில் மஞ்சள் ஆற்று வாய்க்காலில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

12—

### மதுராந்தகத்தில் கயிறு தொழிற்சாலை துவங்குதல்

வினா எண். 1505—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுராந்தகம் தொகுதியில் தென்னை நார்களை உபயோகித்து காயர்போர்டு மூலம் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மதுராந்தகத்தில் கயிறு தொழிற்சாலை துவங்குவதற்குரிய சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை.

13—

### மீனவர் காலனிகளின் வீடுகளைப் பராமரிக்கும் திட்டம்

வினா எண். 1519—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர் காலனிகளின் வீடுகளைப் பழுதுபார்த்து பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

### முத்திரைத்தாள் பற்றாக்குறை

வினா எண். 1628—திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பத்திரப் பதிவுத் துறையில் முத்திரைத்தாள் பற்றாக்குறை இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

15—

### விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தின் தேரைப் புதுப்பித்து ஓடச் செய்தல்

வினா எண். 1871—திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் ஓடா நிலையில் உள்ள தேரைப் புதுப்பித்து ஓடச் செய்வதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் ஓடா நிலையில் உள்ள தேரைப் புதுப்பித்து ஓடச் செய்வதற்கு அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

16—

### கால்நடை கிளை மருந்தகங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறை இனவிருத்தி செய்தல்

வினா எண். 1734—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியக் கிராமங்களில் இயங்கி வரும் கால்நடை கிளை மருந்தகங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறை இனவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

17—

### சத்தியமங்கலம் பகுதியில் சந்தன தைலம் மற்றும் சந்தன சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண். 1857—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சந்தன மரங்கள் அதிகமாக உள்ள சத்தியமங்கலம் பகுதியில் சந்தன தைலம் மற்றும் சந்தன சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

சத்தியமங்கலத்தில் சந்தன தைலம் மற்றும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

18—

### கால்வாய் மடைகளில் 'Screw shutters' அமைக்கும் திட்டம்

வினா எண். 2486—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், இராமநதி, கடனா நதி நீர்த்தேக்கங்களில் அனைத்து கால்வாய் மடைகளிலும் 'Screw shutters' அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

19—

### மேலூர் அரசு கலைக்கல்லூரியில் எம். எஸ்ஸி., எம். காம்., முதுநிலை பட்டப் படிப்பு கொண்டுவரும் திட்டம்

வினா எண் 2521—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் அரசு கலைக்கல்லூரியில் முதுநிலை பட்டப் படிப்பு எம். எஸ்ஸி., எம்.காம்., கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1991 சனவரி 21

20—

1987—ல் சென்னை பொது மருத்துவமனையில் பொருட்கள் வாங்கப்பட்டதில் ஏற்பட்ட தவறுகள்

வினா எண். 2697—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1987 ஆம் ஆண்டு சென்னை பொது மருத்துவமனையில் பொருட்கள் வாங்கப்பட்டதில் தவறு நடந்துள்ளதாக அரசுக்கு புகார் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

21—

அரசு மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுதல்.

வினா எண். 2710—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988—ல் 200—க்கு மேற்பட்ட அரசு மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனையில் காசநோய் வார்டு படுக்கை வசதியுடன் அமைத்தல்

வினா எண். 2752—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனையில் காசநோய் வார்டு படுக்கை வசதியுடன் அமைக்க அரசு முன்வருமா?



1991 சனவரி 21]

விடை—

செங்கை—அண்ணா மாவட்டம் மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனையில் காசநோய் வார்டு அமைக்க கருத்துரு அரசிடம் தற்போது இல்லை.

23—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கல்.

வினா எண். 2836—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர், சித்தண்டி கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது அமுல்படுத்தப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

24—

சித்த மருத்துவர்களின் கோரிக்கை.

வினா எண். 2863—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மரபு வழி சித்த மருத்துவர்களும், பரம்பரை சித்த மருத்துவர்களும், அரசு ஆணை எண். எம். எஸ். 3433, சுகாதாரம், நாள் 26—11—1957-ன் படி பதிவு கோரி பல ஆண்டுகளாக விண்ணப்பித்து இருந்தும் அவர்கள் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

வீரசோழன் ஆற்றில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம்.

வினா எண். 3065—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் நச்சினார்குடி கிராம விவசாயிகளுக்கு கோமல் வாய்க்கால் தலைப்பில் வீரசோழன் ஆற்றில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே வேலை துவங்க அரசு ஆணையிடுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் நச்சினார்குடி கிராமத்திற்கு அருகில் கோமல் வாய்க்கால் தலைப்பில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

26—

உல்லாச படகு போக்குவரத்து ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண். 3472—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட முழிக்குளம் இலந்தக்குளத்தில் அரசின் சார்பில் உல்லாசப் படகுப் போக்குவரத்து ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.



27—

எமனேஸ்வரத்தில் பேருந்து நிலையம் கட்டுதல்.

வினா எண். 3647—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் இருந்து இளையான்குடி செல்லும் பேருந்துகள் எமனேஸ்வரம் வந்து செல்ல அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) எமனேஸ்வரத்தில் பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

28—

பரமக்குடியிலிருந்து அரியான்கோட்டை வரை நகரப் பேருந்து விடுதல்.

வினா எண். 3995—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியிலிருந்து, நயினார்கோவில், காரடர்ந்தகுடி வழியாக அரியான்கோட்டை வரை நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

விடுவதற்குச் சாத்தியமில்லை.

29—

வில்லிவாக்கம் ஒன்றியம் மோரை கிராமத்தில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

வினா எண். 4224—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு ஆசிரியர் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் வில்லிவாக்கம் ஒன்றியம் மோரை கிராமத்தில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1991 சனவரி 21

(ஆ) ஆம் எனில், அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு வேலை துவங்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

30—

அரூர் வட்டத்தில் ஏரி கட்டும் திட்டம்.

வினா எண். 4262—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், தீர்த்தமலையில் இருந்து வரும் இரண்டு காட்டாறுகளும் இணையும் மீன் வனத்துப் பள்ளத்தில் ஒரு ஏரி கட்டும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்

(ஆ) 1990-91-ம் ஆண்டு திட்டப்பட்டியலில் சேர்க்கப்பட்டு தல ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன.

31—

திருவள்ளுவர் போக்குவரத்தில் கோவையிலிருந்து சென்னைக்கு தூங்கும் வசதியுள்ள சொகுசுப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண். 4519—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்தில் தூங்கும் வசதியுள்ள சொகுசுப் பேருந்து விடு செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

விடை—

செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.



1991 சனவரி 21]

32—

சோமநாதன் பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம்.

வினா எண். 4626—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி சோமநாதன் பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

33—

புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4629—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், மேட்டுவயலில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

34—

புதுப்பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுதல்.

வினா எண். 4640—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, புதுப்பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

—

ஏற்கனவே இங்கு ஒரு இல்லம் உள்ளதால் புதியதாகக் கட்டும் ணம் இல்லை.

40—

**சாத்தனூர் அணையிலிருந்து வெளி மாநிலங்களுக்கு மீன் விற்பனைக்கு அனுப்புதல்.**

வினா எண். 5571—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், சாத்தனூர் அணையிலிருந்து வெளி மாநிலங்களுக்கு மீன் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றதா?

(ஆ) ஆண்டொன்றுக்கு அதனால் வருவாய் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இடமில்லை.

41—

**சமையல் கலை நுட்பக் கல்வி கல்லூரி தொடங்கும் திட்டம்.**

வினா எண். 5765—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ''கேட்டரிங் டெக்னாலஜி'' என்கின்ற சமையல் கலை நுட்பக் கல்வி கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

**பரமக்குடியில் விளையாட்டுத் திடல் அமைத்தல்,**

வினா எண். 5802—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :





இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

43—

**பொது நூலகம் உருவாக்கத் திட்டம்.**

வினா எண். 6240—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி மைய கிராமங்களில் பொது நூலகம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

44—

**அரசு கலைக்கல்லூரி அமைத்தல்.**

வினா எண். 6321—திரு. பெ. மாரப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காங்கேயம் தாலுக்காவில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

45—

**முத்திரைத்தாள்கள் வெளி மார்க்கெட்டில் விற்பதைத் தடை செய்தல்.**

வினா எண். 6675—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

முத்திரைத்தாள்கள் வெளி மார்க்கெட்டில் விற்பதைத் தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

டி. 2 53-361—8

[1991 சனவரி 21

35—

மந்திரிப்பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுதல்.

வினா எண். 4641—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, மந்திரிப்பட்டினத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

36—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4728—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சி மிலாரிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

37—

அம்பாசமுத்திரம் தொகுதியில் அரசு பாலிடெக்னிக் மற்றும் அரசு மகளிர் கல்லூரி அமைத்தல்.

வினா எண். 4949—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் அரசு பாலிடெக்னிக் ஒன்றும் அரசு மகளிர் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?



1991 சனவரி 21]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

38—

கடையம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண். 4986—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கடையம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

39—

தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண். 5427—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) மகாபலிபுரம்-காஞ்சிபுரம் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

46—

**பாசன மேலாண்மைத் திட்டத்தை அரசலாறு பகுதிக்கு விரிவுபடுத்துதல்.**

வினா எண். 6824—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சையில் செயல்படும் பாசன மேலாண்மைத் திட்டத்தை அரசலாறு பகுதிக்கு விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

விடை—

தஞ்சையில் செயல்படும் பாசன மேலாண்மைத் திட்டத்தை அரசலாறு பகுதிக்கு விரிவுப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

47—

**எரிவாயுவினால் பேருந்துகளை இயக்கச் சோதனை நடத்தும் திட்டம்.**

வினா எண். 7035—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) எரிவாயுவினால் பேருந்துகளை இயக்க சோதனை நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழும் அவசியமில்லை.

48—

**பரமக்குடி தொகுதி களரிக்கால்வாயிலிருந்து தெய்வேந்திர நல்லூர் கண்மாய்க்குக் கால்வாய் வெட்டுதல்.**

வினா எண். 7497—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:





இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் களரிக்கால்வாயில் இருந்து தெய்வேந்திரநல்லூர் கண்மாய்க்குக் கால்வாய் வெட்டப்படுமா?

விடை—

சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

**மதுரா கோட்ஸ் மில்கேட் வரை தினமும் காலை 7 மணிக்கு நகரப்பேருந்து வசதி செய்தல்.**

வினா எண். 8454—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வீரவநல்லூரிலிருந்து கல்லிடைக்குறிச்சி, அம்பா சமுத்திரம், விக்கிரமசிங்கபுரம் வழியாக மதுரா கோட்ஸ் 'மில் கேட்' வரை தினமும் காலை 7-00 மணிக்கு நகரப் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

**பாளையங்கோட்டையில் மகளிர் பாலிடெக்னிக் தொடங்கும் திட்டம்**

வினா எண். 9707—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டையில் மகளிர் பாலிடெக்னிக் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

[1991 சனவரி 21

51—

### குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி.

வினா எண். 217—திரு. துரை. சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு ஒன்றியம் கண்டியூர் ஊராட்சி மன்றத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியைத் திறந்து வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஒன்றியம் கண்டியூர் ஊராட்சி, கண்டியூர் கிராமத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப் பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 19—1—1988 முதல் பொது மக்களுக்கு உபயோகத்தில் இருந்து வருகிறது.

### பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

வினா எண். 259—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1988–89 ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம். பெரியார் மாவட்டத்தில் 1988-89-ம் ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கக்கோரி ஏராளமான மனுக்கள் கிடைக்கப்பெற்றன.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் வீட்டுமனைகோரி வந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 20 கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கா[illegible] நில எடுப்புச் சட்டத்தின் கீழ் 18.20.5 எக்டேர் நிலப்பரப்பு சுமார் 7.5 இலட்சம் ரூபாய் செலவில் கையகப்படுத்தப்பட்டு, தகுதி வாய்ந்த 983 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.



1991 சனவரி 21]

53—

### கடம்பூர்—புளியம்பட்டி சாலை புதுப்பித்தல்.

வினா எண். 460—திரு. மு. முத்தையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடம்பூரிலிருந்து புளியம்பட்டி வரையிலுள்ள சாலை யைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

#### விவர அறிக்கை.

கடம்பூரிலிருந்து புளியம்பட்டி வரையுள்ள சாலையானது பாளையங்கோட்டை அருப்புக்கோட்டை சாலை கி.மீ. 18/6-ல் பிரிந்து புளியம்பட்டி வழியாக கடம்பூர் செல்லும் சாலை யாகும். இச்சாலை கீழ்க்காணும் இரண்டு அரசு சாலைகளின் தொகுப்பாகும் :

| | |
|---|---|
| (1) மருதன்வாழ்வு சாலை (கி.மீ. 0/0-7/0) | 7.00 கி.மீ. |
| (2) நாரைக்கிணறு கடம்பூர் சாலை (கி.மீ. 7/0-19/0) | 12.00 கி.மீ. |
| மொத்தம் .. | 19.00 கி.மீ. |

இவ்விரண்டு சாலைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

1. மருதன்வாழ்வு சாலை (கி.மீ. 0/0-7/0).—இச்சாலை, அரசு இதர மாவட்ட சாலையாக நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையின் மேற்பரப்பு தார் தளம் கொண்டதாகும். இச்சாலை கி.மீ. 3/0-4/0 மற்றும் 6/0-7/0 ஆகிய பகுதிகள் போக்குவரத்திற்கேற்ப நல்ல நிலைமையில் உள்ளன. இச்சாலை கி.மீ. 2/4-3/0 மற்றும் 4/0-4/8 ஆகிய பகுதிகளில் தார் தளம் புதுப்பிக்கும் பணிகள் வருடாந்திர பராமரிப்பு நிதியிலிருந்து செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதிகளான

கி.மீ. 0/0-2/4 மற்றும் 4/9-6/0 பகுதிகளில் கல் பரத்தி தாரிடும் பணிகள் வருடாந்திர பராமரிப்பு நிதி வசதிக்கேற்ப படிப் படியாக நிறைவேற்றப்படும்.

2. நாரைக்கிணறு-கடம்பூர் சாலை (கி.மீ. 7/0-19/0) :

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மருதன்வாழ்வு சாலையின் தொடர்ச்சியாக கி.மீ. 19/0 வரையுள்ள சாலை 'நாரைக்கிணறு—கடம்பூர் சாலை' என்கிற பெயரில் இதர மாவட்ட சாலையாக நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச் சாலையின் மேற்பரப்பு தார் தளம் கொண்டதாகும். இச்சாலை கி.மீ. 11/0-12/0 பகுதி போக்குவரத்திற்கேற்ப நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 13/0-14/0 மற்றும் 17/0-18/0 ஆகிய பகுதி களைச் சீரமைத்து தாரிடும் பணிகள் வருடாந்திரப் பராமரிப்பு நிதியிலிருந்து செயலாக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய கி.மீ. 7/0-11/0, 14/0-17/0 மற்றும் 18/0-19/0 ஆகிய சாலைப் பகுதிகளைச் சீரமைத்துத் தாரிடும் பணிகள் வருடாந்திரப் பராமரிப்பு நிதி வசதிக்கேற்ப படிப்படியாக நிறைவேற்றப் படும்.

54—

### துறையூர் பிரிவு ரோட்டில் மாற்றுவழி அமைக்கும் திட்டம்.

வினா எண். 539—திரு. இரா. மூக்கன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகரில் துறையூர் பிரிவு ரோட்டில் மாற்று வழி (பை-பாஸ் ரோடு) அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச்சாலைப்பணி மைய சாலை நிதித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு மைய அரசின் ஒப்புதல் பெறவிருக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



—

### சிறப்புக்காவல் படையினருக்கு வீட்டுவசதி, குடிநீர் வசதி செய்தல்

வினா எண். 691—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி நகரில் அமைந்திருக்கும் ஏழாவது பிரிவு சிறப்புக் காவல் படையினர் தங்கியிருக்கும் இடத்தில் முறை யாக வீட்டுவசதி, குடிநீர் வசதி இல்லாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளை நீக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பழனி நகரில் அமைந்திருக்கும் ஏழாவது பிரிவு சிறப்புக் காவல் படையில் உள்ள 893 காவலர்களில் 174 காவலர்களுக்கு குடியிருப்பு வீட்டுவசதி அளிக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் நகராட்சி லாரிகள் மூலம் வழங்கப்படுகிறது. மற்ற தேவைகட்கு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் வசதி செய்து தரப்படுகிறது.

56—

### ஆர்.எல்.ஈ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.ஈ.பி. திட்டங்கள் மூலம் வீடுகள்

வினா எண். 1405—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் மற்றும் திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஆண்டுதோறும் மாவட்ட வாரியாக ஆர்.எல்.ஈ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.ஈ.பி. ஆகிய திட்டங்களின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்படுகின்றது?

(ஆ) அதற்கு மத்திய, மாநில அரசுகள் ஒவ்வொரு வீட்டிற்கும் எவ்வளவு பணம் உதவியாக அளிக்கின்றது?

விடை—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் 1983—84 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திலும், 1984—85 முதல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திலும் மேற்கொள்ளப் பட்டது. இந்த இரு திட்டங்களிலும் ஆண்டுதோறும் மாவட்ட வாரியாகக் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளின் விவரம் இணைப்பு1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டப் படும் ஒரு தொகுப்பு வீட்டிற்கு ஆகும் செலவினத்தை 50 சதவீதம் மாநில அரசு மானியமாகவும், 50 சதவீதம் மத்திய அரசு மானியமாகவும் பங்கீடு செய்து வழங்கியது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் கட்டப்படும் ஒரு தொகுப்பு வீட்டிற்கு ஆகும் செலவினத்தை முழுவதும் (100 சதவீதம்) மத்திய அரசு மானியமாக வழங்கியது. இதற்கான விவரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.





இணைப்பு—1

என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.ஈ.ஜி.பி. பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு 31-3-1989 வரையில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளின் விவரம் (மாவட்ட வாரியாக).

| வரிசை எண் மற்றும் மாவட்டத்தின் பெயர். | என்.ஆர்.ஈ.பி. 1983—84. | என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.ஈ.ஜி.பி. 1984—85 | 1985—86 | 1986—87 | 1987—88 | 1988—89 | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 செங்கை-அண்ணா | 86 | 1,799 | 1,231 | 5,080 | 3,308 | 9,384 | 20,888 |
| 2 தென்னாற்காடு | 10 | 2,424 | 949 | 7,127 | 4,586 | 8,406 | 23,502 |
| 3 வடாற்காடு | .. | 2,477 | 2,573 | 5,129 | 5,716 | 6,374 | 22,269 |
| 4 சேலம் | 370 | 1,995 | 1,992 | 4,759 | 3,842 | 5,315 | 18,273 |
| 5 தர்மபுரி | 185 | 1,905 | 840 | 2,544 | 2,132 | 2,844 | 10,450 |
| 6 பெரியார் | 175 | 1,760 | 1,146 | 3,128 | 2,432 | 3,335 | 11,976 |
| 7 கோயம்புத்தூர் | 24 | 2,206 | 1,385 | 2,906 | 3,033 | 3,522 | 13,076 |
| 8 நீலகிரி | .. | 400 | 118 | 478 | 426 | 799 | 2,221 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 9 தஞ்சாவூர் | .. | 2,347 | 2,105 | 6,285 | 5,130 | 5,856 | 21,723 |
| 10 திருச்சிராப்பள்ளி | 110 | 1,827 | 979 | 5,166 | 4,004 | 5,737 | 17,823 |
| 11 புதுக்கோட்டை | .. | 1,674 | 835 | 1,523 | 1,393 | 1,391 | 6,816 |
| 12 மதுரை | 650 | 1,477 | 1,239 | 3,331 | 2,494 | 3,652 | 12,843 |
| 13 காயிதே-மில்லத் | .. | .. | 842 | 2,558 | 2,128 | 2,510 | 8,038 |
| 14 இராமநாதபுரம் | .. | 1,445 | 460 | 1,327 | 1,214 | 1,628 | 6,074 |
| 15 காமராசர் | .. | .. | 611 | 2,190 | 1,620 | 1,757 | 6,178 |
| 16 பசும்பொன் தேவர் திருமகன் | .. | .. | 532 | 1,227 | 1,107 | 992 | 3,858 |
| 17 திருநெல்வேலி—கட்டபொம்மன் | 49 | 2,260 | 1,498 | 2,311 | 2,197 | 2,397 | 10,712 |
| 18 கன்னியாகுமரி | .. | 745 | 185 | 606 | 576 | 800 | 2,912 |
| 19 சிதம்பரனார் | .. | .. | .. | 1,496 | 1,445 | 1,698 | 4,639 |
| மொத்தம் .. | 1,659 | 26,741 | 19,520 | 59,171 | 48,783 | 68,397 | 2,24,271 |





இணைப்பு—2

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் மாநில மற்றும் மத்திய அரசு அளிக்கும் மானிய விவரம்:—

| | மதிப்பீடு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசின் பங்கு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **1. சமதளப் பகுதியில்** | | | |
| 1. வீடு கட்ட | 6,000 | 3,000 | 3,000 |
| 2. சுகாதார கழிப்பிடம், குளிக்கும் கூடம் | 1,200 | 600 | 600 |
| 3. இதர உள்ளமைப்பு வசதிகள் | 3,000 | 1,500 | 1,500 |
| மொத்தம் | 10,200 | 5,100 | 5,100 |
| **2. கரிசல் மண்பாங்கான தரை/மலைப்பகுதி :—** | | | |
| 1. ஒரு வீடு கட்ட | 7,800 | 3,900 | 3,900 |
| 2. சுகாதார கழிப்பிடம், குளிக்கும் இடம் | 1,200 | 600 | 600 |
| 3. இதர உள்ளமைப்பு வசதிகள் | 3,000 | 1,500 | 1,500 |
| மொத்தம் | 12,000 | 6,000 | 6,000 |

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மானிய விவரம் மேலே கண்ட முழு செலவும் மைய அரசால் ஏற்கப்படுகிறது.**

57—

## சர்க்கரை ஆலைகள்.

வினா எண். 1409—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மற்றும் திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநிலம் முழுவதும் உள்ள சர்க்கரை ஆலைகள் எத்தனை?

(ஆ) Sugarcane Development திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு என்னென்ன வகையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றது?

விடை—

விவர அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

மாநிலம் முழுவதும் தற்பொழுது இணைப்பில் உள்ள பட்டியலில் கூறியுள்ளபடி மொத்த சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு துறையில் 12-ம், பொதுத்துறையில் 3-ம், தனியார் துறையில் 12-ம் உள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பின்வரும் 9 புதிய சர்க்கரை ஆலைகள் இம்மாநிலத்தில் அமைத்திட ஒப்புதல் கடிதங்கள் மைய அரசு வழங்கியது.

| வரிசை எண் மற்றும் ஆலையின் பெயர் | அமைந்துள்ள ஊர் | மாவட்டம் | பிழி திறன் (டன்களில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. கூட்டுறவுத் துறை : | | | |
| (1) அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | கோபாலபுரம் | தர்மபுரி | 2,500 |
| (2) சிதம்பரம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | கிள்ளாங்காடு | தென் ஆற்காடு | 2,500 |
| (3) செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | தென்தண்டலம் | தென்ஆற்காடு | 2,500 |
| (4) அறந்தாங்கி கூட்டுறவு சர்க்கரை ஆலை | இடம் தேர்வு ஆய்வில் உள்ளது | புதுக்கோட்டை | 2500 |
| 2. தனியார் துறை : | | | |
| (5) ராஜ்ஸ்ரீ | பெரியகுளம் | மதுரை | 2500 |
| (6) திரு. ஆரூரான் | கும்பகோணம் | தஞ்சை | 2500 |
| (7) பூண்டி சுகர்ஸ் | இடமாற்றக் கோரிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. | தஞ்சை | 2500 |
| (8) சக்தி | கண்ணாரிப்பு மாத்தூர் | பசும்பொன் முத்துராம லிங்கம் | 2500 |
| (9) தரணி | நாராயணபுரம் | திருநெல்வேலி கட்டபொம்மன் | 2000 |



இவற்றில் வரிசை எண். 8, 9-ல் கூறப்பட்டுள்ள இரு தனியார் துறை ஆலைகள் 1988-89-ம் ஆண்டு அரைவைப் பருவத்தில் சர்க்கரை உற்பத்தியைத் துவங்கிவிட்டன. எஞ்சி யுள்ள 7 ஆலைகளில் பூண்டி சர்க்கரை ஆலையின் தலைமை முனைவர் ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வலங்கைமான் வட்டத்தை விட்டு பாபநாசம் வட்டத்தில் சர்க்கரை ஆலை அமைத்திட மைய அரசை வேண்டியுள்ளார். மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. தர்மபுரி மற்றும் அறந்தாங்கி ஆகிய ஆலைகள் அமைத்திட தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டு ஆலை மூலதனத்திற்குரிய பங்குத் தொகை வசூலிக்கப் பட்டு வருகிறது. அறந்தாங்கி ஆலைக்கு இடத்தேர்வு இன்னும் முடிவு செய்யப்படவில்லை. மற்ற நான்கு ஆலைகள் அமைக் கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கரும்பு அபி விருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் வழங்கப் படும் மானிய திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மூன்றாண்டுக்கு நாற்றங்கால் மானியம் :

(அ) அடிப்படை நாற்றங்கால் (Primary Nursery)

அல்லது

முதல் நிலை நாற்றங்கால் ஆகியவைகளுக்கான விதைக் கரணை மற்றும் போக்குவரத்துச் செலவுகளை முழுவதும் ஆலையே மானியமாக ஏற்கிறது.

(ஆ) இரண்டாம் நிலை நாற்றங்கால் (Secondary Nursery) கீழ்க்கண்ட கரும்பு ரகங்களுக்கு மானியம் எதிரே குறிப்பிட்டவாறு வழங்கப்படுகிறது.

| ரகங்கள் | | | ஒரு ஏக்கருக்கு மானியத் தொகை ரூ. |
|---|---|---|---|
| கோ. ச. 671<br>கோ. ச. 86062 | .. | அக்டோபர் முதல் ஜனவரி வரை | 800 |
| கோ. 8021<br>கோ. 7704 | .. | ஜூன் முதல் செப்டம்பர் வரை | 800 |
| கோ. ச. 671<br>கோ. ச. 86062<br>கோ. 8021<br>கோ. 7704 | .. | பிப்ரவரி முதல் மே வரை. | 600 |
| இதர ரகங்கள் | .. | அக்டோபர் முதல் செப்டம்பர் வரை | 350 |

மேற்படி நாற்றங்கால் நடவு மானியம் ஆலையார் கூறுகின்றவாறு திருத்திய சாகுபடி முறைகளை பின்பற்றி பராமரிப்பு செய்து தரமான கரும்பாக ஏக்கருக்கு 20 டன்களுக்குக் குறையாமல் மகசூல் பெறுபவர்களுக்கு முழு மானியமும், 20 டன்களுக்குக் குறைவான மகசூல் பெறுபவர்களுக்கு விகிதாச்சாரப்படி மானியம் பிடித்தம் செய்தபின் வழங்கப்படும்.

அக்டோபர் 1988 முதல் ஜனவரி 1989 வரையிலும் ஜூன் 1989 முதல் செப்டம்பர் 1989 வரையிலும் பயிரிடப்பட்ட இரண்டாவது நாற்றங்காலுக்கு அதிக சர்க்கரை சத்துள்ள நடவு கரும்பு ரகங்களுக்கு மானியமும் ஏக்கருக்கு ரூ. 800-ம் பிப்ரவரி 1989 முதல் மே 1989 வரை பயிரிடப்பட்ட அதிக சர்க்கரை சத்துள்ள மேற்கூறப்பட்ட நடவு கரும்பு ரகங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 600 மானியமும் இதர ரகங்களுக்கு அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 வரை பயிரிடப்பட்டதற்கு ஏக்கருக்கு ரூ. 350-ம் மானியமும் வழங்கப்படுகிறது. இந்த மானியம் இனிவரும் ஆண்டுகளுக்கு அளிக்கப்படுமா என்பது ஒவ்வொரு



ஆண்டும் ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களில் கரும்பு நடவு முடிந்து அரவை தொடங்குவதற்கு முன்னதாக தீர்மானிக்கப்படும். மேலும், இதே போன்று முந்தைய ஆண்டுகளில் கரும்பு மானியம் வழங்கப்பட்டது.

2. முக்கியப்பட்ட நடவு கரும்புக்கு மானியம்

(அ) அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பை பயிரிட்டு ஆலைக்கு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், ஆகிய திங்கள்களில் நடவு செய்யும் கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 800 மானியமும், பிப்ரவரி முதல் மே வரை நடவு செய்யும் கரும்புக்கு ஏக்கருக்கு ரூ. 600 மானியமும், மற்றும் அனைத்து மாதங்களில் பதிவு செய்யப்படும் மறுதாம்பு கரும்புக்கு ஏக்கருக்கு ரூ. 350 மானியமும் வழங்கப்படுகிறது.

3. போக்குவரத்து மானியம் :

ஆலையிலிருந்து 40 கி. மீ. தூரத்திற்கு உட்பட்ட கிராமங்களிலிருந்து ஆலைக்கு வரும் கரும்பிற்கு உரிய வாகன வாடகையை மட்டும் உறுப்பினர்கள் கொடுக்க வேண்டும். 40 கி. மீ. க்கும் அதிகமான தூரங்களிலிருந்து வரும் கரும்பிற்கு ஆகும் வாகன வாடகையை ஆலையே ஏற்றுக் கொள்கிறது.

4. விதை நேர்த்தி (செய்தல்) மானியம் ;—

இதனால் கரணை அழுகல் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. இதற்காக வழங்கப்படும் பூஞ்சான மருந்து ஏக்கருக்கு 50 கிராம் மானியமாக வழங்கப்படுகிறது.

5. கரும்பில் துளைப்பான்கள் மற்றும் சாறு உறிஞ்சும் செதில் பூச்சிகளை கட்டுப்படுத்துதல்:—

கரும்பில் துளைப்பான்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தேவையான விண்டேன் குருணைகள், விண்டேன் திரவ மருந்துகள் மற்றும் மாலத்தியான் திரவ மருந்துகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

6. கிரோனுலோசிஸ் வைரஸ் (வழங்குதல்) மானியம்

மறுதாம்பு கரும்பில் இளங்குருத்துப் புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த கிரோனுலோசிஸ் வைரஸ் என்ற திரவ மருந்து ஏக்கருக்கு 400 மில்லி வீதம் வழங்கப்படும். இதற்குரிய விலையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

144895

D
V2l), 31 (N91
N91·36·2

7. டிரைக்கோடிரம்மா ஒட்டுண்ணிகள் (வழங்குதல்) மானியம் :—

இடைக்கணுப் புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த டிரைக்கோடிரம்மா ஒட்டுண்ணிகள் ஏக்கர் ஒன்றுக்கு 12 கிலோ கிராம் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

8. பயிர் பாதுகாப்பு—உயிரியல் முறைகள் மானியம் :—

செதில் பூச்சிகள் சேதத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் பிராம் சிம்லை போன்ற எதிர்பூச்சிகளை கட்டுப்படுத்தவும் ஸ்டார்மியப்லிஸ் ஒட்டுண்ணிகளையும் நுனிக்குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்தும் ஐசோட்மா ஒட்டுண்ணிகளையும் தேவைக்கேற்ப 50 சதவித மானிய விலையில் வழங்கப்படும்.

9. வறட்சிக்காக கூடுதல் பொட்டாஷ் (வழங்குதல்) மானியம் ;—

வறட்சியைக் கட்டுப்படுத்தி கரும்பு பயிரை பாதுகாக்க ஏக்கருக்கு 50 கிலோ கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் எனும் உரம் சர்க்கரைத்துறை இயக்குநரின் முன் அனுமதி பெற்று 50 சதவீத விலை மானியமாக வழங்கப்படுகிறது.

10. கரும்பில் ஊடுபயிர் மானியம் ;—

கரும்பு சாகுபடியில் அங்கத்தினர்களின் ஏக்கர் வருமானத்தை அதிகரிக்க பயிறு வகைகள் மற்றும் பசுந்தாள் உரம் ஊடுபயிராக பரிந்துரைக்கப்படுகிறது. இதற்கு ஆகும் விதை செலவில் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படும்.

11. களைக்கொல்லி தெளித்தல் மானியம் :—

கரும்பு நடவின்போது ஏக்கருக்கு 1 கிலோ வீதம் அடராடர்ப் என்னும் களைக் கொல்லி 200 லிட்டர் நீரில், கலந்து தெளிக்க வேண்டும். இம்மருந்து 50 சதவீதம் மானிய விலையில் ஆலை மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆலையும் குறைந்தது 2,000 ஏக்கர் பரப்பளவிற்கு இம்மருந்து வாங்க மானியம் அளிக்க வேண்டும். சாதாரணமாக கரும்பு பயிரிடும் பரப்பளவு என்பது ஆலைக்கு ஆலை பருவ நிலைகளுக்கு ஏற்பவும், விவசாய விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய நிலவரங்களுக்கு ஏற்பவும் மாறுபடும். எனவே, கரும்புப் பயிர் ஒரு ஆலையின் எல்லையில் 7,000 ஏக்கர் முதல் 15,000 ஏக்கர் வரை வேறுபடும். அதிகமாக களை உண்டாகும் நிலங்களுக்கு மட்டும்தான் களைக்கொல்லி மருந்து தேவைப்படும். ஏனென்றால் சாதாரண முறையில் கூலி





ஆட்களை வைத்து அதிமாக வளர்ந்துள்ள களை எடுப்பதனால் ஆகும் செலவை குறைக்கலாம் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த மானியம் கரும்பு நடவு செய்யப்படும் அனைத்து மாதங்களிலும் வழங்கப்படும்.

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள எல்லா கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் ஒவ்வொரு ஆண்டும் சராசரி சுமார் ரூபாய் 40 லட்சம் முதல் ரூபாய் 50 லட்சம் வரை மானியமாக விவசாயிகளுக்கு கரும்பு அபிவிருத்தி திட்டத்தினை செம்மையாக நிறைவேற்றிட அளித்து வருகின்றன. மேலும் தமிழகத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் தங்களின் ஆலைப் பகுதியைச் சார்ந்த கரும்பு விவசாயிகளுக்கு நாற்றங்கால், புதிய ரகங்களைப் பயிரிடுதல், கரும்பிற்கு வாகன வாடகை, பயிர் பாதுகாப்புக்கான பூச்சி மற்றும் பூஞ்சான மருந்துகள் வழங்குதல் போன்ற கரும்பு அபிவிருத்திப் பணிகளுக்கு தங்கள் நிதி நிலைக்கேற்ப ஆலைகளின் நிர்வாகமே முடிவு செய்து மானியம் வழங்குகின்றன.

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அபிவிருத்தி மானிய செலவு மற்றும் ஒதுக்கீடு தொகை கீழ் வருமாறு :—

| வரிசை எண்ணும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும். | | 1986 1987. | 1987– 1988. | 1988–89 நடவுப்பருவம் அதாவது 1989–90 அரைவை பருவத்திற்கு துக்கீடு தொகை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1. ஆம்பூர் | .. | 59.72 | 117.98 | 96.54 |
| 2. மதுராந்தகம் | .. | 37.36 | 40.50 | 91.4 |
| 3. அமராவதி | .. | 59.23 | 31.89 | 84.10 |
| 4. சேலம் | .. | 32.98 | 68.37 | 68.52 |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 5. கள்ளக்குறிச்சி | .. | 34.16 | 24.59 | 62.34 |
| 6. தர்மபுரி | .. | 21.79 | 22.28 | 40.77 |
| 7. வேலூர் | .. | 39.13 | 17.68 | 67.50 |
| 8. செங்கல்ராயன் | ... | 28.03 | 11.42 | 44.59 |
| 9. மயிலாடுதுறை | .. | 1.83 | 7.83 | 55.06 |
| 10. அறிஞர் அண்ணா | .. | 25.38 | 19.79 | 86.79 |
| 11. பெரம்பலூர் | .. | 43.10 | 39.47 | 91.88 |
| 12. மதுரா | .. | 107.11 | 129.19 | 85.14 |



தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள்.

| வரிசை எண். | ஆலையின் பெயர். | அமைந்துள்ள ஊர். | மாவட்டம். | நாளொன்றுக்கு பிழி திறன் (டன்களில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கூட்டுறவு : | | | | |
| 1. | ஆம்பூர் .. | வடபுதுப்பேட்டு .. | வட ஆற்காடு அம்பேத்கார். .. | 2,200 |
| 2. | மதுராந்தகம் .. | படாளம் .. | செங்கை அண்ணா | 1,750 |
| 3. | அமராவதி .. | கிருஷ்ணாபுரம் .. | கோவை .. | 2,000 |
| 4. | சேலம் .. | மோகனூர் .. | சேலம் .. | 2,500 |
| 5. | கள்ளக்குறிச்சி | மூங்கில் துரைப்பட்டு.. | தென்னாற்காடு .. | 2,000 |
| 6 | நேஷனல் .. | அலங்காநல்லூர் .. | மதுரை .. | 1,500 |
| 7. | தர்மபுரி .. | பாலக்கோடு .. | தர்மபுரி .. | 2,000 |
| 8 | வேலூர் .. | அம்முண்டி .. | வட ஆற்காடு அம்பேத்கார் | 1,250 |
| 9. | திருப்பத்தூர் .. | கேதாண்டபட்டி .. | ஷை | 1,250 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| கூட்டுறவு : | | | | |
| 10. | செங்கல்ராயன் .. | பெரிய செவலை .. | தென்னாற்காடு .. | 1,250 |
| 11. | திருத்தணி .. | திருவாலங்காடு .. | செங்கை அண்ணா .. | 1,250 |
| 12. | நடிப்பிசைப் புலவர் | தலைஞாயிறு .. | தஞ்சை .. | 1,250 |
| பொதுத்துறை : | | | | |
| 13. | அறிஞர் அண்ணா .. | குருங்குளம் .. | தஞ்சை .. | 1,250 |
| 14. | பெரம்பலூர் .. | எரையூர் .. | திருச்சி .. | 1,250 |
| 15. | மதுரா .. | பாண்டியராஜபுரம் .. | மதுரை .. | 1,250 |
| தனியார்துறை : | | | | |
| 16. | இ.ஐ.டி. பாரி .. | நெல்லிக்குப்பம் .. | தென்னாற்காடு .. | 4,000 |
| 17. | காவேரி .. | பேட்டைவாய்த்தலை .. | திருச்சி .. | 1,250 |
| 18. | டெக்கான் .. | புகளூர் .. | திருச்சி .. | 2,000 |
| 19. | சவுத் இண்டியா .. | முண்டியம்பாக்கம் .. | தென்னாற்காடு .. | 2,700 |
| 20. | அருணா .. | பெண்ணாடம் .. | ஷை .. | 4,000 |
| 21. | சக்தி-1. .. | ஆப்பக்கூடல் .. | பெரியார் .. | 4,000 |
| 22. | [illegible]த்தாரி .. | காட்டூர் .. | திருச்சி .. | 2,500 |
| 23. | திரு. ஆரூரான் .. | வடபாதிமங்கலம் .. | தஞ்சை .. | 2,000 |
| 24. | பொன்னி .. | பள்ளிப்பாளையம் .. | பெரியார் .. | 1,250 |
| 25. | பண்ணாரியம்மன் .. | ஆலத்துக்கோம்மை .. | பெரியார் .. | 1,250 |
| 26. | சக்தி-2 .. | கண்ணாரிப்பு மாத்தூர் | பசும்பொன் முத்துராமலிங்கம். | 2,500 |
| 27. | தரணி .. | நாராயணபுரம் .. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 2,500 |
| | | | மொத்தம் .. | 53,900 |

[1991 சனவரி 21]

## குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம்

58—

வினா எண் 1504—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் தொகுதியில் எந்தெந்த கிராமத்தில் எத்தனை குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டம் செயல்படுத்தப் பட்டு உள்ளது?

(ஆ) எத்தனை மனுக்கள் எந்தெந்த கிராமத்தில் புதியதாக குடிசைக்கு ஒரு விளக்கு அளிக்க நிலுவையில் உள்ளன?

விடை—

(அ) மற்றும் (ஆ): மதுராந்தகம் தொகுதியில் ஒரு குடிசை வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ள கிராமங்களின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு குடிசை வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மதுராந்தகம் தொகுதியில் பயனடைந்துள்ள கிராமங்கள் மற்றும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் விவரங்கள்.

லத்தூர் ஊராட்சி ஒன்றியம்

| வரிசை எண். | கிராமப் பெயர். | நடப்பில் உள்ள மின் இணைப்புகள். | நிலுவையில் உள்ள மனுக்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பவுஞ்சூர் .. | 11 | .. |
| 2 | பச்சம்பாக்கம் .. | 26 | .. |
| 3 | நரியூர் .. | 26 | .. |
| 4 | லத்தூர் .. | 69 | .. |
| 5 | திருவாதூர் .. | 42 | 4 |
| 6 | விழுதாமங்கலம் .. | 35 | 11 |
| 7 | நசபாக்கம் .. | 42 | 19 |
| 8 | அரியனூர் .. | 36 | .. |
| 9 | பெரிய வெளிகாடு .. | 5 | .. |
| 10 | ஈ. வி. காடு .. | 6 | .. |
| 11 | கல்பட்டு .. | 24 | .. |
| 12 | நெல்வாய் .. | 100 | .. |
| 13 | சேவ்லூர் .. | 13 | .. |
| 14 | கல்குளம் .. | 66 | .. |



[1991 சனவரி 21

| வரிசை எண். | கிராமப் பெயர். | நடப்பில் உள்ள மின் இணைப்புகள். | நிலுவையில் உள்ள மனுக்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 15 | சீவாடி .. | 55 | .. |
| 16 | பின்னமேனை .. | 35 | .. |
| 17 | ரீகரனை .. | 45 | .. |
| 18 | கடுகுபட்டு .. | 135 | 25 |
| 19 | பாலூர் .. | 67 | .. |
| 20 | நெல்வாய்பாளையம் | 86 | 40 |
| 21 | ஆக்கினம்பேடு .. | 145 | .. |
| 22 | கொளத்தூர் .. | 46 | 15 |
| 23 | தாதான்குப்பம் .. | 1 | .. |
| 24 | ஆளைக்கட்டு .. | 26 | .. |
| 25 | புரன்சேரி .. | 14 | .. |
| 26 | தொண்டமநல்லூர் .. | 80 | .. |
| 27 | செம்பூர் .. | 112 | 3 |
| 28 | பரசநல்லூர் .. | 7 | .. |
| 29 | பொய்கைநல் லூர் .. | 8 | .. |
| 30 | பெருமாள்சேரி .. | .. | 37 |
| 31 | கில்லர்கொல்லை .. | 71 | 4 |
| 32 | தென்பட்டினம் .. | 90 | 20 |
| 33 | தட்டான்பேடு .. | 81 | 53 |
| 34 | வடபட்டினம் .. | .. | 2 |
| 35 | கொடூர் .. | .. | 21 |
| 36 | கரிகாமலை .. | 152 | 62 |
| 37 | முகையூர் .. | 33 | 24 |
| 38 | கூவத்தூர் .. | 88 | 40 |
| 39 | நெடுமரம் .. | 94 | 9 |
| 40 | கானாத்தூர் .. | .. | 20 |
| 41 | குண்டுமனிச்சேரி .. | .. | 9 |
| 42 | அடையாளச்சேரி .. | .. | 28 |
| 43 | வீரராகவபுரம் .. | .. | 7 |
| 44 | மலையூர் .. | 17 | 1 |
| 45 | பரமரன்கேனி .. | .. | 1 |
| 46 | திருகட்டான்பேடு .. | .. | 11 |
| 47 | வேட்டகாரகுப்பம் .. | 90 | 5 |
| 48 | கடலூர் .. | 87 | .. |
| 49 | பரமேஸ்வரமங்கலம் .. | 108 | .. |
| 50 | நெருகுனபேட் .. | 133 | . |
| 51 | நத்தம் .. | 21 | .. |
| 52 | சிகனன்குப்பம் .. | 56 | .. |
| 53 | பெருந்துரவு .. | 38 | .. |
| 54 | மடுவன்கரலை .. | 43 | .. |
| 5[illegible] | [illegible] .. | [illegible] | . |

[1991 சனவரி 21

| வரிசை எண். | கிராமப் பெயர். | | நடப்பில் உள்ள மின் இணைப்புகள். | நிலுவையில் உள்ள மனுக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 56 | சத்தியமங்கலம் | .. | 2 | .. |
| 57 | நெமண்டம் | .. | 92 | 2 |
| 58 | செங்காட்டூர் | .. | 52 | .. |
| 59 | புத்தூர் | .. | 142 | .. |
| 60 | பெரும்பாக்கம் | .. | 82 | .. |
| 61 | கீழச்சேரி | .. | 41 | .. |
| 62 | வீரபோகம் | .. | 56 | .. |
| 63 | பூன்சேரி | .. | 44 | 3 |
| 64 | பாக்கூர் | .. | 92 | .. |
| 65 | மடயம்பாக்கம் | .. | 103 | .. |
| 66 | இரனசித்தி | .. | 21 | .. |
| 67 | மேலபட்டுதிருபுர கோவில் | | 43 | .. |
| 68 | புதுபட்டு | .. | 93 | 2 |
| 69 | எஸ். மதுதேரி | .. | 106 | 8 |
| 70 | அம்மனூர் | .. | 66 | 2 |
| 71 | மருதேரி | .. | 12 | .. |
| 72 | வெட்டிகாடு | .. | 3 | 2 |
| 73 | கண்ணன்தாங்கள் | .. | 4 | .. |
| 74 | நாகமலை | .. | 10 | 6 |
| 75 | செய்யூர் | .. | 341 | 7 |
| | மொத்தம் | | 4,071 | 503 |

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சிலாவட்டம் | .. | 142 | 1 |
| 2 | கே. கே. விளாகம் | .. | 10 | .. |
| 3 | சித்தாலமங்கலம் | .. | 64 | .. |
| 4 | மேம்மா | .. | 66 | .. |
| 5 | புதுபட்டு | .. | 62 | 5 |
| 6 | மேட்டுபாளையம் | .. | 33 | .. |
| 7 | சூரை | .. | 42 | .. |
| 8 | அரியபாக்கம் | .. | 104 | 20 |
| 9 | அண்டவாக்கம் | .. | 17 | 11 |
| 10 | சாணூர் | .. | 24 | .. |
| 11 | தண்டலம் | .. | 20 | .. |
| 12 | வேடவாக்கம் | .. | 76 | 18 |



1991 சனவரி 21]

| வரிசை எண். | கிராமப் பெயர். | | நடப்பில் உள்ள இணைப்புகள். | நிலுவையில் உள்ள மனுக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 13 | தோட்டகாவல் | .. | 97 | .. |
| 14 | குத்திரிசேரி | .. | 65 | .. |
| 15 | கருங்குழி | .. | 20 | .. |
| 16 | சோழன்தாங்கள் | .. | 30 | .. |
| 17 | அருன்குனம் | .. | 140 | 4 |
| 18 | தேவதூர் | .. | 100 | 7 |
| 19 | காவாதூர் | .. | 60 | .. |
| 20 | விளாகம் | .. | 17 | .. |
| 21 | முருக்கம்பாக்கம் | .. | 50 | .. |
| 22 | வீரன்குன்னம் | .. | 205 | .. |
| 23 | கீழப்பட்டு | .. | 25 | 8 |
| 24 | தச்சூர் | .. | 102 | .. |
| 25 | குன்னத்தூர் | .. | 8 | .. |
| 26 | கென்ரசேரி | .. | 245 | .. |
| 27 | வி. வி. நல்லூர் | .. | 135 | .. |
| 28 | பூதூர் | .. | 37 | .. |
| 29 | ஈசூர் | .. | 165 | 10 |
| 30 | எல். என். புரம் | .. | 47 | .. |
| 31 | பி. பி. கோவில் | .. | 85 | 1 |
| 32 | படாளம் | .. | 73 | 15 |
| 33 | கே. கே. புதூர் | .. | 92 | .. |
| 34 | கினார் | .. | 148 | 3 |
| 35 | தர்மாபுரம் | .. | 11 | .. |
| 36 | சி. வி. மணி | .. | 60 | .. |
| 37 | மேலகன்டை | .. | 20 | 2 |
| 38 | அத்திவாக்கம் | .. | 23 | 16 |
| 39 | ஜ. என்டத்தூர் | .. | 30 | .. |
| 40 | கீரல்வாடி | .. | 29 | 10 |
| 41 | தென்னம்பட்டி | .. | 38 | .. |
| 42 | பி. வி. கோட்டை | .. | 2 | .. |
| 43 | பனம்பட்டு | .. | 1 | 7 |
| 44 | சித்திரவாடி | .. | 17 | 5 |
| 45 | அகதிபட்டு | .. | 17 | 1 |
| 46 | சிறுநல்லூர் | .. | 37 | ... |
| 47 | மாரிபுத்தூர் | .. | .. | 13 |
| 48 | மாம்பாக்கம் | .. | .. | 6 |
| 49 | கம்சலபுரம் | .. | .. | 4 |
| 50 | பெரியவெண்மனி | .. | 156 | 16 |
| 51 | வீரலூர் | .. | 40 | .. |
| 52 | கே. தேவதூர் | .. | 69 | 7 |
| 53 | நல்லூர் | .. | 76 | .. |

[1991 சனவரி 21

| வரிசை எண். (1) | கிராமப் பெயர். (2) | நடப்பில் உள்ள இணைப்புகள். (3) | நிலுவையில் உள்ள மனுக்கள். (4) |
|---|---|---|---|
| 54 | வேலபட்டு .. | 33 | ... |
| 55 | கொல்லம்பாக்கம் .. | 28 | .. |
| 56 | நெட்ரம்பாக்கம் .. | 29 | .. |
| 57 | கே. சித்தாமூர் .. | 40 | .. |
| 58 | விளன்கனூர் .. | 35 | 23 |
| 59 | ஒழவெட்டி .. | 36 | .. |
| 60 | மருதுலம் .. | 3 | .. |
| 61 | குருவன்மேடு .. | 12 | .. |
| 62 | அர்சுனபுரம் .. | 44 | .. |
| 63 | ஓனம்பாக்கம் .. | 122 | 4 |
| 64 | இரும்பேடு .. | 72 | 2 |
| 65 | வேட்டூர் .. | 72 | .. |
| 66 | சாலையூர் .. | 20 | .. |
| 67 | ஜ. புதூர் .. | 115 | 28 |
| 68 | நீர்பேர் .. | 104 | .. |
| 69 | மேல்வசலை .. | 74 | .. |
| 70 | கீழ்வசலை .. | 42 | .. |
| 71 | நீலமங்கலம் .. | 4 | 1 |
| 72 | நேதபாக்கம் .. | 43 | 2 |
| 73 | அவிரிமேடு .. | 53 | 26 |
| 74 | கொசமங்கலம் .. | 20 | .. |
| 75 | சரவம்பாக்கம் .. | 46 | 8 |
| 76 | தொன்னேடு .. | 115 | .. |
| 77 | குளத்தூர் .. | 43 | .. |
| 78 | நல்லாமூர் .. | 84 | .. |
| 79 | கீழ்கரனை .. | 21 | .. |
| 80 | பெருவேலி .. | 40 | 4 |
| 81 | பயம்பாடி .. | 47 | 8 |
| 82 | கொட்டிவாக்கம் .. | 18 | .. |
| 83 | உரங்காவலி .. | 3 | .. |
| 84 | மெய்யூர் .. | 141 | .. |
| 85 | மாமண்டூர் .. | 52 | .. |
| 86 | வடபாதி .. | 105 | .. |
| 87 | பலாப்பூர் .. | 71 | .. |
| 88 | மண்டபம் .. | 25 | .. |
| 89 | சித்தண்டி .. | 5 | .. |
| 90 | ஆதியூர் .. | 5 | .. |
| 91 | புக்கதுரை .. | 50 | .. |
| 92 | பழமத்தூர் .. | 45 | .. |
| 93 | கொடிதண்டலம் .. | 30 | .. |
| 94 | பழயனூர் .. | 20 | .. |



1991 சனவரி 21]

| வரிசை எண் (1) | கிராமப் பெயர். (2) | நடப்பில் உள்ள இணைப்புகள். (3) | நிலுவையில் உள்ள மனுக்கள். (4) |
|---|---|---|---|
| 95 | கொலம்பாக்கம் .. | 50 | .. |
| 96 | கல்லபிரன்புரம் .. | 100 | .. |
| 97 | நெய்குப்பி .. | 75 | .. |
| 98 | அத்திமானம் .. | 60 | .. |
| 99 | மாம்பட்டு .. | 50 | .. |
| 100 | கருணாகரசேரி .. | 69 | ... |
| 101 | குண்ணன்கொளத்தூர் | 56 | .. |
| 102 | மூசிவாக்கம் .. | 46 | .. |
| 103 | மலைவையாலூர் .. | 39 | .. |
| 104 | வையாயூர் .. | 69 | .. |
| 105 | புழுதிவாக்கம் .. | 106 | .. |
| 106 | குமாரவாடி .. | 71 | .. |
| 107 | இந்திராபுரம் .. | 27 | .. |
| 108 | மங்கலம் .. | 36 | .. |
| 109 | பள்ளிஅகரம் .. | 29 | .. |
| | மொத்தம் .. | 6,082 | 295 |

சுருக்கம்.

| பஞ்சாயத்து யூனியன் பெயர். (1) | ஒளி விளக்கு மின் இணைப்பு. (2) | நிலுவை மனுக்கள் (3) |
|---|---|---|
| மதுராந்தகம் ... ... | 6,082 | 295 |
| லத்தூர் .. .. | 4,071 | 503 |
| மதுராந்தகம் தொகுதியிலுள்ள மொத்த எண்ணிக்கை | 10,153 | 798 |

59—

## மீனவர்களுக்கு வழங்கும் சலுகைகள்.

வினா எண் 2263—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடல் தொழில் புரியும் மீனவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

60—

## குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்கள்

வினா எண் 2719—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்து அரசின் அனுமதிக்காக எத்தனை திட்டங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுப்பியுள்ள 14 குடிநீர்த் திட்டங்களின் மீது அரசு நிர்வாகம் ஒப்புதல் அளிக்க வேண்டியுள்ளது.

(ஆ) அவற்றுள் எட்டு செயற்குறிப்புகளின் மீது கூடுதல் விவரங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்கப் பட்டுள்ளன. மற்ற ஆறு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து அரசின் ஆய்வில் உள்ள குடிநீர்த் திட்டங்களின் விவரம் :—

(1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் மேல் விவரங்கள் கேட்கப்பட்டுள்ள திட்டங்கள்;

திட்ட விவரம்

எண்

1. மதுரை மாவட்டம் திருமங்கலம் நகராட்சி—விரிவான குடிநீர்த் திட்டம்—திருத்திய மதிப்பீடு.

2. கோயம்புத்தூர் மாவட்டம்—விரிவான குடிநீர்த் திட்டம் மற்றும் திருப்பூர் நகராட்சி மற்றும் 44 பேரூராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்—திருத்திய மதிப்பீடு.

3. வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்—ஜோலார் பேட்டை நகராட்சி மற்றும் நாட்ராம்பள்ளி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

4. செங்கை-அண்ணா மாவட்டம்—திருக்கழுக்குன்றம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

5. ராமநாதபுரம் மாவட்டம்—ஆட்சித் தலைவர் அலுவலகம்—குடிநீர்த் திட்டம்.

6. காமராசர் மாவட்டம்—வத்திராயிருப்பு குடிநீர்த் திட்டம்.

7. தஞ்சாவூர் மாவட்டம்—திருத்துறைப்பூண்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

8. காயிதே மில்லத் மாவட்டம்—ஆயக்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்,

(2) அரசின் பரிசீலனையில் உள்ளவை :

1. புதுக்கோட்டை மாவட்டம்—ஆலங்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

2. மதுரை மாவட்டம்—தேனி அல்லி நகரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

3. கோவை மாவட்டம்—மேட்டுப்பாளையம்—காரமடை திருத்திய மதிப்பீடு.

4. புதுக்கோட்டை மாவட்டம்—கீரனூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

5. மதுரை மாவட்டம்—உசிலம்பட்டி—மேட்டுப் பாங்கான இடங்களில் பகிர்மானக் குழாய் அமைத்தல்.

6. பெரியார் மாவட்டம்—குன்னத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

61—

## ஜீவன்தாரா திட்டம்

வினா எண் 2741—திரு. எஸ். டி. உ.கம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 1986–87, 1987–88, 1988–89-ல் பொது நிதியிலிருந்து எந்த எந்த சாலைகள் எவ்வளவு செலவில் அமைக்கப்பட்டது?

(ஆ) ஜீவன்தாராவில் யார் யாருக்கு எவ்வளவு தொகை கிணறு வெட்ட நிதி வழங்கப்பட்டது?

விடை—

(அ) மேற்படி ஆண்டுகளில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் சாலைகள் எதுவும் எடுத்துச் செய்யப்படவில்லை.

(ஆ) ஜீவன்தாராவில் கிணறு வெட்ட இருபத்து ஆறு (26) நபர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டில் கிணறு வெட்ட நிதி வழங்கப்பட்ட நபர்களின் விவரம்:—





| வரிசை எண் (1) | பயன் பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி (2) | வழங்கப்பட்ட தொகை (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | திரு. வேதாசலம், தகப்பனார் பெயர் முருகன், எருவாக்கம். | 20,818.80 |
| 2. | திரு. முனுசாமி, தகப்பனார் பெயர் பெருமாள், எருவாக்கம் | 20,882.35 |
| 3 | திரு. ராமலிங்கம், தகப்பனார் பெயர் ஆனந்தன், கீழவளம். | 5,000,00 |
| 4 | திரு. ஜெகன்நாதன், தகப்பனார் பெயர் முருகேசன், தோட்டமாவன். | 22,872.85 |
| 5 | திருமதி செல்லம்மாள், கணவர் பெயர் கோபால், கிணார். | 21,633.80 |
| 6 | திரு. குப்பன், தகப்பனார் பெயர் குனைய்யா, நெய்குப்பி. | 9,340.00 |
| 7 | திரு. ராமன், தகப்பனார் பெயர் பெருமாள், கிணார். | 22,868.90 |
| 8 | திரு. முனுசாமி, தகப்பனார் பெயர், குட்டி, கீழவளம். | 22,453.15 |
| 9 | திரு. ராமன், த/பெ. கணேசன், கீழவளம். | 21,722.40 |
| 10 | திரு. அள்ளிமுத்து, த/பெ. சுக்கிரி, கீழவளம். | 16,668.60 |
| 11 | திரு. செங்கல்வராயன், த/பெ. கெங்கன், கீழவளம். | 17,059.20 |
| 12 | திரு. சுகுமார், த/பெ. கோவிந்தராஜ், இரும்பேடு. | 9,340.00 |
| 13 | திரு.செங்கல்வராயன், த/பெ.வெள்ளைக்கால், ஓரங்காவளி. | 20,870.00 |
| 14 | திருமதி கருப்பாயி, க/பெ. பொன்னன், நல்லாமூர். | 20,871.60 |
| 15 | திரு. சந்திரன், த/பெ. சந்தியப்பன், கீரல்வாடி. | 20,878.00 |
| 16 | திரு. ஐயாசாமி, த/பெ. செல்லன், ஜ. எண்டத்தூர். | 20,884.65 |
| 17 | திரு. கோவிந்தராஜ், த/பெ. குப்பன், ஈசூர். | 20,845.00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 18 | திரு. முருகன், த/பெ. அர்ஜுனன், ஜமீன் எண்டத்தூர். | 20,292.70 |
| 19 | திரு. ஏழுமலை, த/பெ. அப்பாசாமி, சிறுநல்லூர். | 9,340.00 |
| 20 | திரு. செல்வராஜ், த/பெ. செங்கமுனி, மேல்வசலை. | 13,992.75 |
| 21 | திரு. மாசிலாமணி, த/பெ. குப்பன், நெட்ரம்பாக்கம். | 9,340.00 |
| 22 | திருமதி சம்பூர்ணம், க/பெ. விஜயகுமார், மாரிபுத்தூர். | 9,340.00 |
| 23 | திரு. முருகேசன், த/பெ. அப்பாசாமி, சிறுநல்லூர். | 9,340.00 |
| 24 | திரு. கிருஷ்ணன், த/பெ. முனியன், மேல்வளம். | 22,471.00 |
| 25 | திரு. மூர்த்தி, த/பெ. கிருஷ்ணன், ஜானகிபுரம். | 22,487.50 |
| 26 | திரு. குப்பன், த/பெ. கருப்பன், மேல்வசலை. | 9,340.00 |

62—

## நீதித் துறைகளில் ஏழைகளுக்காக வாதாடும் இலவச வழக்கறிஞர்கள்

வினா எண் 3037—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீதித் துறைகளில் ஏழைகளுக்காக வாதாடும் இலவச வழக்கறிஞர்கள் எங்கெங்கு என்னென்ன பணிகள் செய்கிறார்கள்?

(ஆ) அவர்களுக்கென அலுவலகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?





விடை—

(அ) தமிழ்நாடு இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம், மாவட்ட குழுக்கள், வட்ட குழுக்கள் மற்றும் சட்ட உதவி மையங்களை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறாக 145 குழுக்களும் மையங்களும் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இவ்வாரியத்தைச் சேர்ந்த மாவட்ட குழுக்கள், வட்ட குழுக்கள் மற்றும் மையங்கள் ஒவ்வொன்றும் 'ஏ' பட்டியல் வழக்கறிஞர் மற்றும் 'பி' பட்டியல் வழக்கறிஞர் என இரண்டுவித பெயர் பட்டியல்கள் வைத்து வருகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் உள்ள வழக்கறிஞர்கள் 'ஏ' பட்டியலிலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் உள்ளவர் 'பி' பட்டியலிலும் இடம் பெறுவர். இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை குழு வாரியத்திடம் சட்ட உதவி கோரி வரும் பொதுமக்களின் பிரச்சினை மேற்சொன்ன பட்டியலில் உள்ள வழக்கறிஞரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுகிறது. வழக்கறிஞரின் ஆலோசனையின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் ஆலோசனை மையத்தையும் நடத்தி வருகின்றன. இந்த ஆலோசனை மையத்தின் முன் வைக்கப்படும் பிரச்சினை குறித்து ஆலோசனை வழக்கறிஞர் சம்பந்தப்பட்ட இரு கட்சியினரையும் கலந்து பேசி நீதிமன்றத்திற்கு வழக்கு செல்வதை தவிர்க்கும் வகையில் தீர்வு காண முயற்சி செய்வார். மாவட்ட/வட்டக்குழுக்கள் மற்றும் இலவச சட்ட உதவி மையங்கள் தமது இருப்பிடத்திற்கு வெளியே சமரச மையத்தையும் (Mediation Centre) நடத்தி வருகின்றன. அம்மையங்களைத் தேடி வரும் மக்களின் பிரச்சினைகளை வழக்கறிஞர்கள் பரிசீலித்து எதிர் மனுதாரர்களை வரவழைத்து சமரசம் செய்து வைக்க முயற்சிக்கின்றனர். இம்முயற்சி பலனளிக்காவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இலவச சட்ட உதவி அளிக்கப்படுகிறது. மாவட்ட தலைமையிடங்களிலும் மற்றும் முக்கியமான நகரங்களிலும் பெண்களுக்கென தனியாக ஏற்படுத்தப்பட்ட மையங்களில் பெண்களுக்கு ஜீவனாம்சம், பெண் உரிமை போன்ற வழக்குகளில் சமரசம் காணவும், பலனளிக்க இயலாத நிலையில், வழக்குத் தொடர இலவச சட்ட உதவியும் அளிக்கப்படுகின்றது. மத்திய சிறைகள், கிளைச்சிறைகள் மற்றும் இளங்குற்றவாளிகளின் விடுதிகளுக்குச் சென்று சிறைவாசிகளின் பிரச்சினைகளை கேட்டு அவற்றைத் தீர்க்க இலவச வழக்கறிஞர்கள் உதவி புரிகின்றனர். சென்னையில், குடும்ப நீதிமன்றத்தில் குடும்ப விவகாரம் குறித்து முறையிட மனுக்கள் தயாரித்தல், தங்கள் வழக்குகளை எப்படி தாக்கல் செய்ய வேண்டும், எவ்வாறு எடுத்துரைக்க வேண்டும் என்று உதவி கேட்போருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்படுகின்றது. வட்டக்குழுக்கள் மற்றும் சட்ட உதவி மையங்கள் நடத்தும் இலவச சட்ட உதவி முகாம்களில்

[1991 சனவரி 21

வழக்கறிஞர்கள் பங்கேற்று அங்கு உதவி கோரி வரும் மக்களின் பிரச்சினைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆலோசனை கூறுகின்றனர்.

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கைகள் குறித்து இலவச சட்ட உதவி கோரி வரும் நிகழ்வுகளில் தக்க நடவடிக்கை எடுத்து இழப்பீடு கோரிக்கை பெற உதவி புரி கின்றனர். காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டவரிடமிருந்து கோரிக்கை வந்தால், பட்டியல் வழக்கறிஞரை அனுப்பி அவரை விடுவிக்கவும் அவருக்காக வழக்கில் வாதாடவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. தேவையான நேர்வுகளில் இலவச சட்ட உதவி பெறுபவருக் காக, குற்றவியல் மேல் முறையீடுகள் தாக்கல் செய்ய பட்டியல் வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

(ஆ) இலவச சட்ட உதவி அலுவலகங்களுக்கு நீதிமன்றக் கட்டிடங்களில் சிறிய பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டிடங்களில் இடவசதி இல்லாத இடங்களான தென் னாற்காடு மாவட்டம் விழுப்புரத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூரிலும், கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூரிலும் இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்குழுவிற்கு தனியாக இடவசதி அளிக்க கட்டிடம் கட்டுவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நீதிமன்றங்களுக்குப் புதிதாக ஒருங்கிணைந்த கட்டிடங் களை கட்டும்பொழுது தமிழ்நாடு இலவச சட்ட உதவி மற் றும் ஆலோசனை அலுவலகத்திற்கு இடவசதி அளிக்க வகை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

63—

## இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோர்

வினா எண் 3821—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக சர்வே செய்யப்பட்டு ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு மற்று திருவிடைமருதூர் ஒன்றியப் பகுதியில் மட்டும் சுமா ஆயிரம் பேருக்கும் மேல் இளம்பிள்ளை வாத நோயால் பாதி கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?



[991 சனவரி 21]

(ஈ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண். | மாவட்டம். | இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மே-ஜூன் 1989-ல் கணிக்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செங்கை அண்ணா .. .. | 617 |
| 2 | தென்னாற்காடு .. .. | 558 |
| 3 | வடாற்காடு .. .. | 342 |
| 4 | சேலம் .. .. | 617 |
| 5 | தருமபுரி .. .. | 540 |
| 6 | பெரியார் .. .. | 427 |
| 7 | கோவை .. .. | 218 |
| 8 | நீலகிரி .. .. | 145 |
| 9 | திருச்சி .. .. | 430 |
| 10 | தஞ்சை .. .. | 970 |
| 11 | புதுக்கோட்டை .. .. | 480 |
| 12 | திண்டுக்கல் காயிதே மில்லத் .. .. | 282 |
| 13 | மதுரை .. .. | 456 |
| 14 | பசும்பொன் தேவர் திருமகன் .. .. | 565 |
| 15 | இராமநாதபுரம் .. .. | 400 |
| 16 | காமராஜர் .. .. | 816 |
| 17 | வ.உ. சிதம்பரனார் .. .. | 681 |
| 18 | நெல்லை கட்டபொம்மன் .. | 840 |
| 19 | கன்னியாகுமரி .. .. | 857 |
| 20 | சென்னை .. .. | 318 |
| | கூடுதல் .. | 10,509 |

(இ) மற்றும் (ஈ) தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் திருவிடைமருதூர் ஆகிய இரு வட்டாரங்களில் இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட 970 பேருக்கும் முதல் கட்ட நடவடிக்கையாக சிறப்பு மருத்துவர்களால்

[1991 சனவரி 21

அறுவை சிகிச்சை, ஊன்றுகோல், சக்கர நாற்காலி, தசைப் பயிற்சி போன்ற தேவைகள் கணிக்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர். கல்வியறிவு பெற விரும்பும் சிறுவர்களுக்கு பள்ளியில் மற்றும் சிறப்புப் பள்ளியில் சேர்க்கவும், ஏற்கனவே பள்ளியில் படித்து வரும் மாணவ மாணவியருக்கு மாநில/மத்திய அரசின் உதவித் தொகை வழங்கவும், தொழில் சம்பந்தமான பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெறவும் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் வேண்டுவோருக்குக் கடனுதவி மற்றும் மானியம் பெறுவதற்கும் அரசு வேலை அமைப்புத் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்தவர்களை வேலையிலமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட வயதானவர்களுக்கு ஓய்வு ஊதியம், காப்பகத்தில் சேர்த்தல், உதவித் தொகை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் இதுவரை புனர் வாழ்வுக்காக பயிற்சி தரப்பட்டவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | தேவைப் படுவோர் எண்ணிக்கை. | இதுவரை பயனுற்றவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அறுவை சிகிச்சை .. | 178 | 68 |
| ஊன்றுகோல் .. .. | 406 | .. |
| தசைப் பயிற்சி .. .. | 97 | 38 |
| சக்கர நாற்காலி .. | 11 | 1 |
| இணை சக்கரவண்டி .. | 24 | 21 |
| பள்ளியில் சேர்த்தல் .. | 19 | .. |
| சிறப்புப் பள்ளியில் சேர்த்தல். | 16 | .. |
| உதவித் தொகை .. .. | 54 | 44 |
| தொழிற்பள்ளி .. .. | 17 | .. |
| கடனுதவி .. .. | 168 | .. |
| வேலைவாய்ப்பு .. .. | 8 | .. |
| ஓய்வு ஊதியம் .. .. | 10 | 4 |
| மானியம் வழங்குதல் .. | .. | .. |
| காப்பகங்களில் சேருதல் .. | 1 | 1 |



1991 சனவரி 21]

64—

## சத்துணவுக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 3978—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், முத்துவயல் கிராமத்தில் சத்துணவுக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தற்போது சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. ஆயினும் மேற்படி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்திற்கு சமையலறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

65—

## திருவண்ணாமலை நகரில் சலவைத் துறைகள்.

வினா எண் 5167—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவண்ணாமலை நகரில் சலவைத் துறைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

திருவண்ணாமலை நகரில் சலவைத் துறை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

66—

## செய்யாற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 5249—திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வாழைப்பந்தல் சாலையில் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா

விடை—

இல்லை.

67—

தமிழ்நாட்டு சிறைகளில் உள்ள ஆயுள் கைதிகள் மற்றும் தூக்குத் தண்டனைக் கைதிகள்.

வினா எண் 5454—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டு சிறைகளில் உள்ள மொத்த ஆயுள் கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) தூக்குத் தண்டனைக் கைதிகள் எத்தனை பேர்?

(இ) சென்ற ஆண்டில் தூக்கிலிடப்பட்ட கைதிகள் மற்றும் விடுவிக்கப்பட்ட ஆயுள் கைதிகள் எத்தனை பேர்? மாவட்ட வாரியாக விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு சிறைகளில் உள்ள மொத்த ஆயுள் சிறைவாசிகள் 2,159.

(ஆ) தூக்குத் தண்டனைச் சிறைவாசிகள் 21.

(இ) சென்ற ஆண்டில் தூக்கிலிடப்பட்ட சிறைவாசிகள்—இல்லை. சென்ற ஆண்டு விடுதலை செய்யப்பட்ட ஆயுள் சிறைவாசிகள் 97. மாவட்ட வாரியாக விவரம் முறையே கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

சென்ற ஆண்டு விடுதலையான ஆயுள் சிறைவாசிகள் மாவட்டம் வாரியாக:—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | விடுதலை யான ஆயுள் சிறை வாசிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னை மாவட்டம் | 4 |
| 2 | திருச்சி மாவட்டம் .. | 10 |
| 3 | கோவை மாவட்டம் .. .. | 10 |



| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர் | விடுதலை யான ஆயுள் சிறை வாசிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4 | தர்மபுரி மாவட்டம் .. .. | 6 |
| 5 | தென்ஆற்காடு மாவட்டம் .. | 4 |
| 6 | வடஆற்காடு மாவட்டம் .. | 3 |
| 7 | தஞ்சை மாவட்டம் .. .. | 10 |
| 8 | மதுரை மாவட்டம் .. .. | 5 |
| 9 | இராமநாதபுரம் மாவட்டம் .. | 1 |
| 10 | பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் | 2 |
| 11 | திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் | 1 |
| 12 | காமராஜர் மாவட்டம் .. .. | 1 |
| 13 | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் | 13 |
| 14 | புதுக்கோட்டை மாவட்டம் .. | 3 |
| 15 | செங்கை அண்ணா மாவட்டம் .. | 2 |
| 16 | வ.உ.சி. மாவட்டம் .. .. | 13 |
| 17 | கன்னியாகுமரி மாவட்டம் .. | 9 |
| | | 97 |

68—

தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வட்டங்கள்.

வினா எண் 6020—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வட்டங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

விடை—

(அ) தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள் என அரசு 105 வட்டங்களை அறிவித்துள்ளது.

(ஆ) அவற்றின் விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

[1991 சனவரி 21

பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டவை.

| மாவட்டத்தின் பெயர். | வட்டத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| செங்கை-அண்ணா .. | 1. ஊத்துக்கோட்டை |
| | 2. பொன்னேரி |
| | 3. காஞ்சிபுரம் |
| | 4. திருத்தணி |
| | 5. செய்யூர் |
| | 6. மதுராந்தகம் |
| | 7. உத்திரமேரூர் |
| | 8. பள்ளிப்பட்டு |
| சிதம்பரனார் .. .. | 9. விளாத்திக்குளம் |
| | 10. ஸ்ரீவைகுண்டம் |
| | 11. ஒட்டப்பிடாரம் |
| கோயம்புத்தூர் .. | 12. வால்பாறை |
| | 13. பொள்ளாச்சி |
| தர்மபுரி .. .. | 14. ஊத்தங்கரை |
| | 15. பென்னகரம் |
| | 16. தென்கனிக்கோட்டை |
| | 17. கரூர் |
| | 18. தர்மபுரி |
| | 19. பாலக்கோடு |
| | 20. கிருஷ்ணகிரி |
| திண்டுக்கல்-காயிதே மில்லத் | 21. நத்தம் |
| | 22. வேடசந்தூர் |
| | 23. கொடைக்கானல் |
| | 24. நிலக்கோட்டை |
| காமராஜர் .. .. | 25. திருச்சுழி |
| கன்னியாகுமரி .. .. | 26. தோவாளை |
| | 27. அகஸ்தீஸ்வரம் |
| மதுரை .. | 28. உத்தமபாளையம் |
| | 29. உசிலம்பட்டி |
| | 30. ஆண்டிப்பட்டி |
| | 31. வாடிப்பட்டி |



1991 சனவரி 21]

| மாவட்டத்தின் பெயர். | வட்டத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| நெல்லை-கட்டபொம்மன் .. | 32. செங்கோட்டை |
| | 33. சங்கரன்கோயில் |
| | 34. நாங்குநேரி |
| | 35. தென்காசி |
| | 36. ராதாபுரம் |
| நீலகிரி .. .. | 37. கூடலூர் |
| வடஆற்காடு .. .. | 38. ஆற்காடு |
| | 39. திருவண்ணாமலை |
| | 40. போளூர் |
| | 41. செய்யார் |
| | 42. திருப்பத்தூர் |
| | 43. ஆரணி |
| | 44. வேலூர் |
| | 45. செங்கம் |
| | 46. வந்தவாசி |
| பசும்பொன் தேவர் திருமகனார். | 47. திருப்பத்தூர் |
| | 48. தேவக்கோட்டை |
| | 49. இளையாங்குடி |
| | 50. சிவகங்கை |
| | 51. காரைக்குடி |
| பெரியார் .. .. | 52. காங்கேயம் |
| | 53. தாராபுரம் |
| | 54. சத்தியமங்கலம் |
| | 55. கோபிச்செட்டிபாளையம் |
| | 56. பெருந்துறை |
| புதுக்கோட்டை .. .. | 57. ஆலங்குடி |
| | 58. கந்தர்வக்கோட்டை |
| | 59. அறந்தாங்கி |
| | 60. ஆவுடையார்கோயில் |
| | 61. திருமயம் |
| இராமநாதபுரம் .. .. | 62. முதுகுளத்தூர் |
| | 63. இராமநாதபுரம் |
| | 64. கமுதி |
| | 65. திருவாடானை |
| | 66. பரமக்குடி |
| | 67. ராமேஸ்வரம் |

| மாவட்டத்தின் பெயர். | வட்டத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| சேலம் | 68. ஆத்தூர் |
| | 69. நாமக்கல் |
| | 70. ஏற்காடு |
| | 71. சங்கரி |
| தென் ஆற்காடு .. .. | 72. வானூர் |
| | 73. திருக்கோவிலூர் |
| | 74. உளுந்தூர்பேட்டை |
| | 75. விழுப்புரம் |
| | 76. கள்ளக்குறிச்சி |
| | 77. செஞ்சி |
| | 78. திண்டிவனம் |
| | 79. சிதம்பரம் |
| | 80. காட்டுமன்னார்கோயில் |
| தஞ்சாவூர் ... ... | 81 வேதாரண்யம் |
| | 82. குடவாசல் |
| | 83. நீடாமங்கலம் |
| | 84. நன்னிலம் |
| | 85. பட்டுக்கோட்டை |
| | 86. திருவிடைமருதூர் |
| | 87. தரங்கம்பாடி |
| | 88. வலங்கைமான் |
| | 89. தஞ்சாவூர் |
| | 90. திருத்துறைப்பூண்டி |
| | 91. ஒரத்தநாடு |
| | 92. திருவாரூர் |
| | 93. நாகப்பட்டினம் |
| | 94. பேராவூரணி |
| | 95. பாபநாசம் |
| | 96. மன்னார்குடி |
| | 97. திருவையாறு |
| | 98. கும்பகோணம் |
| | 99. சீர்காழி |
| திருச்சிராப்பள்ளி ... ... | 100. துறையூர் |
| | 101. மணப்பாறை |
| | 102. குளித்தலை |
| | 103. முசிறி |
| | 104. பெரம்பலூர் |
| | 105. உடையார்பாளையம் |



69—

**களக்காடு, செங்கல்தேரியை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.**

வினா எண் 6371—திரு. சு. குருநாதன்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம் களக்காடு, செங்கல் தேரியை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

களக்காடு ஏற்கனவே புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. செங்கல்தேரி இதில் ஒரு பகுதியாக இருப்பதால் இதனை தனியாக சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

70—

**உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடங்கள்.**

வினா எண் 6763—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், அந்தியூர் அரசினர் மாணவியர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

71—

**பெண்களுக்கு புதிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்.**

வினா எண் 7098—திரு. பெ. க. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பெண்களுக்கு புதிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) பல்கலைக் கழகத்தை திருவண்ணாமலையில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : அதற்குரிய தகுந்த சூழ்நிலை இல்லாததால் தற்போது பரிசிலனையில் இல்லை.

72—

கதர் உற்பத்தி நிலையங்கள்.

வினா எண் 7239—திரு. எஸ். டி. உகம்சந்த்—மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(a) the number of centries organised by the Government for the production of khadi in each district with their location ;

(b) the total value of Sales during 1988-89;

(c) the rebate given; and

(d) how many new production centres are to be opened during 1989-90 ?

விடை—

(அ) தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 82 கதர் உற்பத்தி கிளைகளும், 22 கதர் பட்டு உற்பத்தி கிளைகளும் செயல்படுகின்றன. மாவட்ட வாரியாக விவரம் இணைப்பு 1 மற்றும் 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 1,975.35 இலட்சம்

(இ) ரூ. 260.84 இலட்சம்.

(ஈ) 1989-90-ம் ஆண்டில் புதிய உற்பத்தி நிலையங்கள் ஏதும் ஆரம்பிக்கும் திட்டம் இல்லை.



இணைப்பு—1.

தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் கதர் உற்பத்திக் கிளைகள்.

| | ஊர். | | மாவட்டம். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 1. | திருவலம் | .. | வடஆற்காடு அம்பேத்கார் |
| 2. | புளியங்குறிச்சி | .. | தருமபுரி |
| 3. | பாப்பாரப்பட்டி | .. | தருமபுரி |
| 4. | சின்னசேலம் | .. | தென்னாற்காடு |
| 5. | குகையூர் | .. | தென்னாற்காடு |
| 6. | சங்கராபுரம் | .. | தென்னாற்காடு |
| 7. | கண்டாச்சிமங்கலம் | .. | தென்னாற்காடு |
| 8. | திருவாரூர் | .. | தஞ்சாவூர் |
| 9. | கரூர் | .. | திருச்சி |
| 10. | தென்நிலை | .. | திருச்சி |
| 11. | தொட்டம்பட்டி | .. | திருச்சி |
| 12. | அரவக்குறிச்சி | .. | திருச்சி |
| 13. | திருச்சி | .. | திருச்சி |
| 14. | திருமங்கலம் | .. | மதுரை |
| 15. | நரிக்கல்பட்டி | .. | காயிதே மில்லத் |
| 16. | தொப்பம்பட்டி | .. | காயிதே மில்லத் |
| 17. | இடையன்வலசு | .. | காயிதே மில்லத் |
| 18. | இராஜபாளையம் | .. | காமராசர் |
| 19. | ஸ்ரீவில்லிபுத்தூர் | .. | காமராசர் |

| ஊர். (1) | | மாவட்டம். (2) |
|---|---|---|
| 20. வத்திராயிருப்பு | .. | காமராசர் |
| 21. அருப்புக்கோட்டை | .. | காமராசர் |
| 22. கமுதி | .. | இராமநாதபுரம் |
| 23. சாயல்குடி | .. | இராமநாதபுரம் |
| 24. கோவில்பட்டி | .. | சிதம்பரனார் |
| 25. தூத்துக்குடி | .. | சிதம்பரனார் |
| 26. உடன்குடி | .. | சிதம்பரனார் |
| 27. நாகலாபுரம் | .. | சிதம்பரனார் |
| 28. குருவிகுளம் | .. | திருநெல்வேலி கட்டபொம்மன் |
| 29. புளியங்குடி | .. | ஷை |
| 30. கீழ்ப்பாவூர் | .. | ஷை |
| 31. கடையநல்லூர் | .. | ஷை |
| 32. சாம்பவர் வடகரை | .. | ஷை |
| 33. வள்ளியூர் | .. | ஷை |
| 34. வீரவநல்லூர் | .. | ஷை |
| 35. அகஸ்தீஸ்வரம் | .. | கன்னியாகுமரி |
| 36. தெங்கம்புதூர் | .. | ஷை |
| 37. மணவாளக்குறிச்சி | .. | ஷை |
| 38. பொட்டல் | .. | ஷை |
| 39. நாகர் கோவில் | .. | ஷை |
| 40. வில்லுக்குறி | .. | ஷை |
| 41. செம்பருத்திவிளை | .. | ஷை |



| ஊர். (1) | | மாவட்டம். (2) |
|---|---|---|
| 42. மார்த்தாண்டம் | .. | கன்னியாகுமரி |
| 43. புதுக்கடை | .. | ஷை |
| 44. பாலப்பள்ளம் | .. | ஷை |
| 45. திங்கள் சந்தை | .. | ஷை |
| 46. திருப்பூர் | | கோயம்புத்தூர் |
| 47. சூலூர் | .. | ஷை |
| 48. மடத்துக்குளம் | .. | ஷை |
| 49. பளவாடி .. | .. | ஷை |
| 50. பொங்கலூர் .. | .. | ஷை |
| 51. அமராவதிபாளையம் | .. | ஷை |
| 52. பெருமாநல்லூர் | .. | ஷை |
| 53. வடுகம்பாளையம் | .. | ஷை |
| 54. செய்யூர் .. | .. | ஷை |
| 55. அம்மாபாளையம் | .. | ஷை |
| 56. கருவலூர் .. | .. | ஷை |
| 57. அவிநாசி .. | .. | ஷை |
| 58. சொக்கனூர் .. | .. | ஷை |
| 59. வடசித்தூர் .. | .. | ஷை |
| 60. ரெட்டிபாளையம் | .. | பெரியார் |
| 61. ஓலப்பாளையம் | .. | ஷை |
| 62. பெருந்துறை .. | .. | ஷை |

| ஊர். (1) | | மாவட்டம். (2) |
|---|---|---|
| 63. | வெள்ளக்கோவில் .. | பெரியார் |
| 64. | நத்தக்காடையூர் .. | ஷை |
| 65. | சின்னமுத்தூர் .. | ஷை |
| 66. | புதுப்பை .. | ஷை |
| 67. | அய்யம்பாளையம் .. | ஷை |
| 68. | தாராபுரம் .. .. | ஷை |
| 69. | கொளத்துப்பாளையம் | ஷை |
| 70. | ஆண்டிப்பாளையம் .. | ஷை |
| 71. | கன்மலையாம்பட்டி .. | ஷை |
| 72. | பட்டுத்துறை .. | ஷை |
| 73. | கன்னிவாடி .. .. | ஷை |
| 74. | சங்கராம்பாளையம் .. | ஷை |
| 75. | வேமந்தம்பாளையம் .. | ஷை |
| 76. | காவிலிப்பாளையம் .. | ஷை |
| 77. | மூங்கில்பட்டி .. | ஷை |
| 78. | செட்டிசெய்யூர் .. | ஷை |
| 79. | கோபி .. .. | ஷை |
| 80. | பிரம்மதேசம் .. .. | ஷை |
| 81. | நாமக்கல் .. .. | சேலம் |
| 82. | குமாரமங்கலம் .. | ஷை |



இணைப்பு—2.

தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் கதர் பட்டு உற்பத்திக் கிளைகள்.

| ஊர் (1) | | மாவட்டம் (2) |
|---|---|---|
| 1. | கும்பகோணம் .. .. | தஞ்சை |
| 2. | அய்யம்பேட்டை .. | ஷை |
| 3. | அம்மாபேட்டை .. | ஷை |
| 4. | அம்மையப்பன் .. .. | ஷை |
| 5. | கபிஸ்தலம் .. .. | ஷை |
| 6. | திருநாகேஸ்வரம் ... | ஷை |
| 7. | பட்டீஸ்வரம் .. | ஷை |
| 8. | கதிராமங்கலம் .. | ஷை |
| 9. | திருவப்பூர் .. .. | புதுக்கோட்டை |
| 10. | உடையார்பாளையம் .. | திருச்சி |
| 11. | டி. பாலூர் .. .. | ஷை |
| 12. | மதுரை .. .. | மதுரை |
| 13. | வீரவநல்லூர் .. .. | திருநெல்வேலி கட்டபொம்மன் |
| 14. | ஸ்ரீரங்கம் .. .. | திருச்சி |
| 15. | சேலம் .. .. | சேலம் |
| 16. | ராசிபுரம் .. .. | ஷை |
| 17. | ஓமலூர் .. .. | ஷை |

| ஊர் (1) | | மாவட்டம் (2) |
|---|---|---|
| 18. ஆரணி | .. .. | வடஆற்காடு அம்பேத்கார் |
| 19. வாழப்பந்தல் | .. .. | ஷை |
| 20. காஞ்சிபுரம் | .. .. | செங்கை அண்ணா |
| 21. சத்தியமங்கலம் | .. | பெரியார் |
| 22. கெலமங்கலம் | .. .. | தருமபுரி |

73—

அந்தியூர் அரசினர் மகளிர் பள்ளிக்கு கட்டிட வசதி.

வினா எண். 7381—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) எப்பொழுது பணி ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

74—

மகப்பேறு நிலையம் அமைத்தல்.

வினா எண். 7418—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி போகலூர் ஒன்றியம், கவுதகுடியில் மகப்பேறு நிலையம் அமைக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?



விடை—

(அ) கவுதகுடியில் ஏற்கனவே ஒரு துணை சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

சாலையை மராமத்து செய்தல்.

வினா எண். 7643—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வெள்ளிங்குளி மேற்கு பிரதான சாலையை மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): மேற்படி வெள்ளிங்குளி மேற்கு பிரதான சாலை தற்போது தலசாலை மான்யத் திட்டத்தின் கீழ் ரூ. 30,000 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 3—1—1990-ல் வேலை முடிவுற்று போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பயன்பட்டு வருகிறது.

பாதுகாப்பு இல்லம்.

76—

வினா எண். 7869—திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) whether any protective homes are run by the Government to deposit run away girls stranded in Madras city:

(b) the details thereof;

(c) whether private sector agencies have been mobilised for this purpose and if so the details thereof;

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை. எனினும் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் சென்னை அரசினர் மகளிர் காப்பகத்துடன் இணைந்த ஸ்திரி சாதனா மீட்பு இல்லத்தில் கற்பு நெறிக்கு பாதகம் ஏற்படும் சூழ்நிலையில் தாமாகவே வலிய வந்து பாதுகாப்பு கோரும் சிறுமிகள் மற்றும் பெண்கள் சேர்க்கப் படுகின்றனர். நிறுவனத்தின் முகவரி: அரசினர் மகளிர் காப்பகம் எண். 16, ரோசரி சர்ச் சாலை, மைலாப்பூர், சென்னை-4.

(இ) ஆம். பாதுகாப்பு மற்றும் பொறுப்பு ஏற்கக் கோரும் நிராதரவான சிறுமிகள் மற்றும் பெண்களை சேர்த்து அறிவுரை வழங்கி வழிகாட்டி உதவும் வகையில், 'சென்னை விஜிலென்ஸ் அசோசியேஷன்' என்னும் தனியார் நிறுவனத்தின் கீழ் 'அபய நிலையம்' என்னும் குறுகிய கால மீட்பு இல்லம் இயங்கி வரு கிறது. இதன் முகவரி பின்வருமாறு:—

'அபய நிலையம்' 187, ரோசரி சர்ச் சாலை, மைலாப்பூர், சென்னை-4, இத்தனியார் நிறுவனத்திற்கு ஒரு இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 13,000-க்கு மிகாமல் அரசினர் சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண் காணிப்புத் துறை மூலம் மானியம் அளிக்கப்படுகின்றது.

77—

### தார்ச் சாலை அமைத்தல்.

வினா எண். 7923—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட குட்டுப் பட்டியிலிருந்து சத்திரக்கேணி வழியாக கோசுகுரிச்சி வரையுள்ள சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக் குமா?

விடை—

நடப்பு ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகள் செப்பனிடவும்/அமைக்கவும் ஒதுக்கீடு செய்துள்ள பத்து கோடி ரூபாயிலிருந்து மேற்கூறிய சாலைப் பணியினை செய்வதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.





78—

### ஆதி திராவிடருக்கு இலவச காலனி வீடு

வினா எண். 7941—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கன்னியாபுரத்திலிருக்கும் 25 ஆதி திராவிடர் குடும்பத்தினர் களுக்கு இலவச காலனி வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசி டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

79—

### ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச காலனி வீடுகள்

வினா எண். 7944—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கம்பளியம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட அம்மாப்பட்டியில் வாழும் 25 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச காலனி வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்குமா?

விடை—

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கம்பளியம்பட்டி பஞ்சாயத்திற்குட் பட்ட அம்மாப்பட்டியில் வாழும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருவது சம்பந்தமாக திட்டம் ஏதும் இல்லை. அம்மாப்பட்டியிலுள்ள 25 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்க நிலம் தெரிவு செய்து நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

80—

சாலை அகலப்படுத்துதல்.

வினா எண். 8083—திரு. மு. முகமது சித்திக்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மயிலாடுதுறை — நாகப்பட்டினம் நெடுஞ்சாலை மற்றும் செம்பனார் கோவில் வழி நல்லாடை—காரைக்கால் சாலை அகலப் படுத்தப்படுமா?

விடை —

மயிலாடுதுறை — நாகப்பட்டினம் வரையிலுள்ள சாலையில் 30.05 கி.மீ. நீளம் ஒரு வழிச் சாலையாக உள்ள பகுதியை இரு வழிச்சாலையாக மாற்ற தோராயமாக ரூ. 75.00 இலட்சம் தேவைப்படும். மேலும் செம்பனார் கோயில் காரைக்கால் சாலை (வழி) நல்லாடை சாலையின் நீளம் 12.40 கி.மீ. ஆகும். இச்சாலை முழுவதும் தார் தளம் கொண்ட ஒரு வழிப்பாதையாக உள்ளது. இச்சாலையை இரு வழிப்பாதையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 36.00 இலட்சம் தேவைப்படும். இப்பணிகள் எதிலும் இடம் பெறாததால், பராமரிப்பு நிதிநிலைமைகளுக் கேற்ப இரு வழிப்பாதையாக மாற்ற தக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

81—

புதிய காவல் நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 8102 — திரு. மு. முகமது சித்திக்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செம்பனார்கோவில், திருவெண்காடு ஆகிய ஊர் களில் உள்ள புதிய காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதால், புதிய கட்டிடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : செம்பனார்கோவில், திருவெண்காடு ஆகிய ஊர்களில் புதிய காவல் நிலையங்கள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



82—

பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடங்கள்.

வினா எண். 8173—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) சேலம் மாவட்டத்தில், வாழப்பாடியில் கடந்த 20 ஆண்டுகளாக கூரைக் கொட்டகைகளில் நடத்தப்படும் பள்ளி களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

83—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண். 8189—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகரைச் சேர்ந்த காரப்பாடி, கண்டிசாலை, வேமாண்டம்பாளையம், செலம்பன் கவுண்டன்பாளையம், வண்டிபாளையம், சின்ன செட்டிபாளை யம், மாதம்பாளையம், வெள்ளாளபாளையம், பாச்சாமல்ல ஹார் ஆகிய ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) காரப்பாடி மற்றும் செலம்பன்கவுண்டன்பாளையம் ஆகிய கிராம ஆதி திராவிடர்களுக்கு முறையே 28—3—1990 மற்றும் 1—2—90 ஆகிய தினங்களில் பட்டாக்கள் வழங்கப்பட் டுள்ளன. வேமாண்டம்பாளையம், வண்டிபாளையம் மற்றும் சின்ன செட்டிபாளையம் கிராமங்களில் நில எடுப்பு

[1991 சனவரி 21

நடவடிக்கைகள் முடிவுற்று தீர்ப்பு விசாரணை நிலையில் உள்ளது. கண்டி சாலை, வெள்ளாளபாளையம் மற்றும் பாச்சாமல்லனூர் ஆகிய கிராமங்களில் நில எடுப்பு நடவடிக்கைகள் தொடரப் பட்டு 4(1) முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியரால் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் நிலையில் உள்ளன. மாதம்பாளையம் கிராமத்தில் நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கு முடிவுற்றவுடன் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

84—

நகரப் பேருந்து வசதி.

வினா எண். 8481—திரு. கு. ரவி அருணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம் பாசமுத்திரத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு மேல் ஆலங்குளத் துக்கு நகரப்பேருந்து வசதி செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தற்பொழுது அம்பாசமுத்திரத்திலி ருந்து ஆலங்குளம் செல்வதற்கு கட்டபொம்மன் போக்குவரத் துக் கழக நகரப் பேருந்து ஒன்று இரவு 7.45 மணிக்கும், தனியார் பேருந்து ஒன்று இரவு 8.15 மணிக்கும் உள்ளது. இப்பேருந்து களில் பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் அம்பாசமுத்திரத்திலிருந்து இரவு 9.15 மணிக்கு ஆலங் குளத்திற்கு தனியாரால் இயக்கப்பட்டு வந்த பேருந்து, போதிய பயணிகள் விகிதாச்சாரம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப் பட்டுள்ளது. எனவே, இரவு 9.00 மணிக்கு மேல் அம்பாசமுத் திரத்திலிருந்து ஆலங்குளத்திற்கு நகரப் பேருந்து உடனடியாக இயக்கத் தேவையில்லை.

85—

அம்பாசமுத்திரம் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண். 8568—திரு. கு. ரவி அருணன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பா சமுத்திரம் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகத் திற்குச் சொந்தமான புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1991 சனவரி 21]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட் டம் அம்பாசமுத்திரம் காவல் துறை உதவி கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாக புதிய கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை.

86—

ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம்.

வினா எண். 8578—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம், ஆழ் வார்குறிச்சி காவல் நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட் டம் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் கிடைத்துள்ள லாபம்.

வினா எண். 8671—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர், பூதப்பாடி ஆகிய ஊர்களில் இரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் பருத்தி வியாபாரத்தின் மூலமாக 1988-89, 1989-90 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு கிடைத்துள்ள வருமானம் என்ன?

(ஆ) பருத்தி உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம் வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

விடை—

(அ) பருத்தி வரத்துக்களின் மூலமாக அந்தியூர் மற்றும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மார்க்கெட் கட்டணம் மூலமாக கிடைத்த வருமானம் பின்வருமாறு:—

| | | 1988-89 | 1989-90 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| அந்தியூர் | .. | 98,037 | 68,978 |
| பூதப்பாடி | .. | 84,120 | 1,21,827 |

(ஆ) பருத்தி உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

88—

**திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடப் பணி.**

**வினா எண். 8687—திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கான கட்டிடப் பணிகள் முடிந்துவிட்டனவா ?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் என்ன ?

(இ) இவற்றிற்கான உத்தேச மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) ரூ. 3.69 கோடி.



89—

**சுடுகாடு வசதி கோரி விண்ணப்பங்கள்.**

**வினா எண். 8746—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம் நத்த அள்ளி ஆதிதிராவிடர் காலனிக்கும், இண்டூர் நெசவாளி குடும்பங்களுக்கும் சுடுகாடு வசதி கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

90—

**நூலக வரி.**

**வினா எண். 8750—திரு. மெ. ஆண்டி அம்பலம் ;** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாணார்பட்டி மற்றும் நத்தம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளுக்காக கடந்த 3 ஆண்டுகளில் நூலக வரியாக ஒன்றிய நிதியிலிருந்து செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அந்தத் தொகை திரும்ப ஒன்றிய நிதிக்கு ஊராட்சி நிதியிலிருந்து செலுத்தப்பட்டுவிட்டதா ?

(அ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் (1986-87 முதல் 1988-89 முடிய) நூலக வரியாக ஒன்றிய பொது நிதியிலிருந்து செலுத்திய தொகை ஏதுமில்லை. நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் நூலக வரியாக ஒன்றிய பொது நிதியிலிருந்து செலுத்தப்பட்ட தொகை ரூ. 14.812 ஆகும்.

[1991 சனவரி 21

(ஆ) ரூ. 14,812 நத்தம் ஒன்றிய பொது நிதியிலிருந்து ஊராட்சியின் சார்பாக நூலகக் குழுவிற்கு செலுத்தியதை ஊராட்சி நிதியிலிருந்து பொது நிதிக்கு தற்போது வரவு வைக்கப்பட்டுவிட்டது.

91—

பண்ருட்டி நகரத்தில் காவல் துறையினருக்கு குடியிருப்பு கட்டுதல்.

வினா எண். 8855—டாக்டர் கொ. நந்தகோபாலகிருட்டிணன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பண்ருட்டி நகரத்தில் காவல் துறையினருக்கு குடியிருப்பு கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

பண்ருட்டியில் காவல் துறையினருக்கு ரூ. 27.30 இலட்சம் செலவில் குடியிருப்பு கட்ட காவல்துறை இயக்குநர், மே திங்கள் 1990-ல் கருத்துரு ஒன்று அரசுக்கு அனுப்பினார். அக்கருத்துரு பரிசீலிக்கப்பட்டு நிதிநிலை நெருக்கடி காரணத்தினால் ஏற்கப்படவில்லை.

92—

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம்.

வினா எண். 9007—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாநிலத்தில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பணி கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன.:—

1. முல்லைக்காடு 1,155 மெகாவாட் திறன் உள்ளது. (தூத்துக்குடி அருகில்).

2. கயத்தாறு 8.55 மெகாவாட் திறன் உள்ளது (சிதம்பரனார் மாவட்டம்).



1991 சனவரி 21]

3. முப்பந்தல் 4.00 மெகாவாட் திறன் உள்ளது (கன்னியாகுமரி மாவட்டம்).

4. சுல்தான்பேட்டை 0.09 மெகாவாட் திறன் உள்ளது (கோவை மாவட்டம்).

5. புளியங்குளம் 0.09 மெகாவாட் திறன் உளளது (நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்).

கல்லாறு பாலம்.

93—

வினா எண். 9071—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், உப்பாரப்பட்டி ஊராட்சிக்கும் கோவிந்தாபுரம் ஊராட்சிக்கும் மத்தியில் புதியதாக போடப்படும் இணைப்புச்சாலை திட்டத்தின்படி சாலை போடப்பட்டும் கல்லாறு, பாலம் கட்டப்படாமல் உள்ளது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உப்பாரப்பட்டி கோவிந்தாபுரம் சாலையில் கி..மீ 3/6-இல் பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிக்குப் பதிலாக சிங்காரப்பேட்டை திருப்பத்தூர் சாலை கி.மீ. 19/8-லிருந்து பிரிந்து சேலம் திருப்பத்தூர் சாலை கி. மீ. 96/10-இல் சேரும் சாலையில் கி.மீ. 0/6-ல் கல்லாற்றின் குறுக்கேயும் கி. மீ. 5/6-ல் பாம்பாற்றின் குறுக்கேயும் ஏற்கனவே பாலங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டதால் மறுபடியும் பாலம் கட்ட அவசியமில்லை என்று கருதி சாலை பேட்டர் செய்யப் பணி மட்டும் முடிக்கப்பட்டது.

[1991 சனவரி 21

94—

பாலையூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 9198—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குத்தாலம் தொகுதி பாலையூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

குத்தாலம் தொகுதி பாலையூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல் பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

கோ-ஆப்டெக்ஸ் கடைகள்.

வினா எண். 9276—திரு. சி. ரா. முனிரத்தினம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு பிர்கா தலைமை இடத்திலும் கோ-ஆப்டெக்ஸ் கடைகள் திறக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே துவக்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

96—

வைகை அணைப் பகுதியில் அரசு கல்லூரி.

வினா எண். 9387—திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையப்பாரா :

மதுரை மாவட்டம், வைகை அணைப்பகுதியில் அரசு கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



1991 சனவரி 21]

97—

மதுரை மாநகரில் புதியதாக கால்நடைப் பண்ணைகள் கோழிப்பண்ணைகள் நிறுவுதல்.

வினா எண். 9593—திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாநகரில் புதிதாக கால்நடைப் பண்ணைகள், கோழிப்பண்ணைகள் நிறுவும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

இல்லை.

தற்பொழுது, தமிழ்நாட்டில் 2 ஆட்டுப் பண்ணைகளும், 9 கால்நடைப் பண்ணைகளும், ஒரு கோழிப் பண்ணையும் இயங்கி வருகின்றன. புதியதாக ஒரு பண்ணை ஏற்படுத்த வேண்டுமானால், குறைந்தபட்சம் புல் அபிவிருத்தி செய்ய 1,000 ஏக்கர் நிலமும், நீர் வசதியும், கிணற்றுப் பாசனமும், நல்ல மழையும், தபால் தந்தி போக்குவரத்து வசதிகளும், இரயில் நிலையம் போன்றவற்றிற்கு அருகாமை ஆகிய இவைகள் அவசியமாகின்றன. மதுரை மாநகரில் இடவசதி கிடைப்பது மிகவும் அரிது. ஆதலால், புதிதாக கால்நடைப் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை நிறுவுவது சாத்தியமில்லை.

98—

பசுவந்தனையில் காவல் நிலையமும், காவலர் குடியிருப்பும் கட்டுதல்.

வினா எண். 9781—திரு. மு. முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம் பசுவந்தனையில் காவல் நிலையமும் காவலர் குடியிருப்பும் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

[1991 சனவரி 21

விடை—

(ஆ) மற்றும் (ஆ) பசுவந்தனையில் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

99—

வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயிலில் தெப்பக்குளமும் குடிநீர்த் தொட்டியும் கட்டுதல்.

**வினா எண். 9959—திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :** மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயிலில் தெப்பக்குளமும், குடிநீர்த்தொட்டியும் கட்டும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

இத்திருக்கோயிலுக்குப் பின்புறம் ஏற்கனவேயுள்ள தெப்பக்குளத்தை சரி செய்து பராமரிப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தண்ணீர்ப்பந்தல் என்னுமிடத்தில் 5 சென்ட் நிலம், கிணறு மற்றும் மோட்டார் உபயமாகப் பெறப்பட்டு திருக்கோயிலின் அடிவாரத்திலுள்ள தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டும், ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள சுனையிலிருந்து தண்ணீர் பெறப்பட்டும் பக்தர்களுக்கு குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. பக்தர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு, திருக்கோயில் சார்பாக ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கு நிரந்தரக் குளியலறைகள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

100—

குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள வீடுகள்.

**வினா எண். 10005—திரு. நா. கணபதி :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1991 சனவரி 21]

(அ) குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் புதிதாகக்கட்டப்படவுள்ள வாரிய வீடுகளின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்.?

விடை—

(அ) 12,000

(ஆ) இத்திட்டத்தின் மூலம் 1990-91-ஆம் ஆண்டு 4,000 அடுக்குமாடி வீடுகளும், அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மீதிக் குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும்.

(உடுக்குறியிடாத வினாக்கள் முடிவுற்றன.)

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) அ.இ.அ.தி.மு.க.விலிருந்து மூன்று உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்று அக்கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் பேரவைத் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

10-15 மணி.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்ட மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர் இராமச்சந்திரன், திரு. உகம்சந்த் ஆகியவர்களைப் பற்றிய தீர்ப்பை இன்று நீங்கள் வழங்குவதாக அறிவித்திருந்தீர்கள். அந்தத் தீர்ப்பு என்ன என்பதை நாங்கள் அறிய ஆவலோடு இருக்கிறோம். ஏனென்றால் சென்ற முறை அந்தக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டபோது நீதிமன்றத்தினுடைய தடை ஆணை இருந்தது என்று தாங்கள் ஒரு காரணம் இங்கே சொல்லி எங்களையெல்லாம் உங்களுடைய எண்ணத்தின்பால் ஈர்த்தீர்கள். இப்போது தாங்கள் என்ன தீர்ப்பு அளிக்க இருக்கிறீர்கள் என்பதை நானும்; இந்த அவையும் அறிய ஆவலோடு இருக்கிறோம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** கட்சி எதிர்ப்பு நடவடிக்கைக்காக நீக்கப்பட்ட உறுப்பினர்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களைப் பற்றிய தீர்ப்பு அளிக்கப்படும் என்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு அதற்கான அவகாசத்தை அளித்திருக்கிறீர்கள். உங்களுடைய தீர்ப்பிற்குப் பின்னர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சி நடவடிக்கையை நாங்கள் இந்த மன்றத்தில் எப்படித் தொடருவது என்ற முடிவு எடுக்க வேண்டும். தீர்ப்பைப் பற்றி இவ்விடம் விமர்சிக்கவோ அல்லது எதிர்க்கவோ அந்த உரிமைகள் எங்களுக்கு வழங்கப்படவில்லை என்றாலும், தீர்ப்பைப்பற்றிய கருத்தைத் தெரிவிக்கின்ற அந்த உரிமையை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற ஒரு அவசரமான சூழ்நிலையில் நீங்கள் மிகுந்த அவசரத்தோடு என்னுடைய பதவியை மாற்றவேண்டுமென்பதில் காட்டிய அக்கறைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவசர, அவசரமாக எங்களுடைய இடம் எல்லாம் மாற்றப்பட்டு, எங்களை உட்கார வைக்கின்ற இடத்திற்கு வேகமாக அனுப்பியிருக்கிறீர்கள். அதற்காகக் கூட நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நாங்கள் இதை எதிர்ப்பது என்பது எங்களுடைய கடமையை நாங்கள் செய்யவேண்டுமென்ற அடிப்படையில்தான் உங்களுடைய தீர்ப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாங்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கையின் பேரில், தீர்ப்பை அறிந்த பின்னர் தான் எங்களுடைய நடவடிக்கைகளைத் தொடரவேண்டுமென்ற காரணத்தினாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தத் தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பான தீர்ப்பு. 23-7-1990 அன்று திரு. எஸ். ஆர். இராதா அ.இ.அ.தி.மு.க., சட்டமன்றக் கட்சித் தலைவர் (L a of the L gislature Pa ty) என்ற முறையில் கொடுத்த கடிதத்தில் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ்.டி. உசம்சந்த்ஆகிய மூவரும் அக்கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டதாகவும், சட்டமன்றப் பேரவைக் கட்சியில் துணைத்தலைவர், கொறடா ஆகிய பதவிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்ததன் காரணமாக 20-8-1990 அன்று பேரவையில் ஒரு தீர்ப்பினை வழங்கினேன். அதில் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்கள் அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்களா அல்லது அதிலேயேநீடிக்கிறார்களாஎன்பதுகுறித்துக் குறிப்பிடும்போது 23-8-1990 வரை செல்வி ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைகட்குப் பெற்றிருந்த தடையாணை அடிப்படையிலும் நீதிமன்றத்திலுள்ள ஒரு பொருள் குறித்து இந்த அவை விவாதிப்பதில்லை என்ற மரபின் அடிப்படையிலும், நீதிமன்றத்துடன் இந்த அவை ஒரு நல்ல உறவைப் பேணிக் காக்க வேண்டியதன் இன்றியமையா மரபின் காரணமாகவும் எனது முடிவினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிவித்திருந்தேன்.





நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு திரும்பப் பெற்றதாகக் கருதப்பட்டு, அது நிராகரிக்கப்பட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட பிரச்சினை குறித்துக் கீழ்க்கண்ட தீர்ப்பை அளிக்கிறேன்:

'' நான் ஏற்கெனவே அளித்த தீர்ப்பில் குறிப்பிட்டபடி வெளியேற்றல் (Expu n) குறித்து 1985-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்பு, அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள சட்ட விதிகள் மற்றும் பேரவை விதிகள் ஆகியவற்றில் ஏதும் குறிப்பிடப்படாததால், பாராளுமன்ற நடைமுறையில் உள்ள தீர்ப்புகள் மற்றும் பிற சட்டமன்றங்களின் குறிப்புரைகள் ஆகியவைகளில் உள்ள முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களைப் பொறுத்தவரையில், பேரவை உறுப்பினர் ஒருவர், அவர் சார்ந்துள்ள கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டால், அவர் எந்தக் கட்சியும் சாராதவர் (Unt ached Memb ) என்றுதான் அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

10-20 மணி

அண்மையில் பாராளுமன்ற ஜனதா தளக் கட்சியின் 25 உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றியதாகப் பாராளுமன்ற ஜனதா தளக் கட்சியின் தலைவர் திரு. வி.பி. சிங் அவர்கள் அளித்த மனுவின் அடிப்படையில் அந்த 25 உறுப்பினர்களும் '' எக்கட்சியையும் சாராதவர்கள் '' என்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை இங்கு மேற்கோள் காட்டலாம்.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகிய உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்று அக்கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவரால் (Leader of the L gislature pa ty) கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் மூவரையும் '' எந்தக் கட்சியையும் சாராதவர்கள்'' (Unattached Members) என்று அறிவிக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1991 சனவரி 21

இதன் அடிப்படையில் பேரவையில் இருக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதைக் கடிதம் மூலமாகவும் அனைத்து பேரவை உறுப்பினர்களுக்கும் செய்தித் தாள் மூலமாகவும் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து செல்வி ஜெயலலிதா அவர்கள் எங்களையெல்லாம் — என்னையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கியதாக அறிவித்தது தவறு என்று கூறி சென்னை உயர் நீதிமன்றத்திலே நாங்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். சென்ற கூட்டத் தொடர் நடந்தபோது தடை ஆணையும் பெற்று இருந்தோம். அந்தக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னாலே தடை ஆணை தேவையில்லை என்ற காரணத்தினாலே தடை ஆணைதான் திரும்பப் பெறப்பட்டு இருக்கிறதே தவிர, நாங்கள் தொடர்ந்த அந்த வழக்கு இன்னும் சென்னை உயர்நீதிமன்றத்திலே அப்படியேதான் இருக்கிறது. எங்களைக் கட்சியை விட்டு நீக்கியது தவறு என்று தொடர்ந்த அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே அப்படியேதான் இருக்கிறது. கழகக் கட்டிடம் எங்களுக்குச் சொந்தமா அல்லது செல்வி ஜெயலலிதா அவர்களுடைய தலைமையிலே இருக்கிற அந்தப் பிரிவிற்குச் சொந்தமா என்ற வழக்கும் டெல்லியிலே உள்ள உச்ச நீதிமன்றத்திலே தொடரப்பட்டு அந்த வழக்கும் அப்படியேதான் இருக்கிறது. தற்காலிகமாக ரிசீவராகத்தான் செல்வி ஜெயலலிதா அவர்களை நீதிமன்றம் நியமித்திருக்கிறதே தவிர இறுதியான முடிவு எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அத்தோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நாங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தபோது செல்வி ஜெயலலிதா அவர்கள் அந்தக் கட்சியினுடைய தலைவராக இருந்தார். பிரதான எதிர்கட்சியினுடைய துணைத் தலைவராக நான் இருந்தேன். கொறடாவாக திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இருந்தார். எங்களுக்கெல்லாம் திடீர் என்று எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல், எங்களிடத்திலிருந்து எந்தவிதமான விளக்கமும் கோராமல் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக துணைத் தலைவரையும் கொறடாவையும் நீக்கியதாக அறிவித்தது தவறு என்று சொல்லித்தான் நாங்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். 12-7-1990-லே செல்வி ஜெயலலிதா அவர்கள்—அடுத்த நாள் என்னுடைய பிறந்தநாள்—நன்றி உணர்வுள்ள ஜெயலலிதா அவர்கள் எனக்குப் பிறந்த நாள் பரிசாக எங்களையெல்லாம் கட்சியை விட்டு நீக்குவதாக அறிவித்தார்.



1991 சனவரி 21] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அதற்கு அடுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவைக் கூட்டி, அந்தப் பொதுக் குழுவில் முறையாக செல்வி ஜெயலலிதா அவர்களைப் பொதுச் செயலாளர் பொறுப்பிலேயிருந்து நீக்கிவிட்டு என்னைப் பொதுச் செயலாளராகவும் கழகத்தினுடைய நிர்வாகிகளையும் நியமித்தோம். அனைத்திந்திய அண்ணா தி. மு. க.வின் சார்பில் பொதுச் செயலாளராக நான் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பொதுக் குழு கூடி ........ (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே,...... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் என்னுடைய தீர்ப்பிற்கு உட்பட்டவர் என்பதனால் தன்னுடைய கருத்தைக் கூறுகிறார்.

திரு. எஸ். ஆர். இராதா : அப்படியானால் எங்களுக்குப் பதில் சொல்ல உரிமை வேண்டும்.....(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களையும் திரு. எஸ். ஆர். இராதா அவர்களையும் அனுமதித்தேன். அடுத்ததாக, என்னுடைய தீர்ப்பைச் சொன்னேன். தீர்ப்புக்கு உட்பட்டவர் என்ற முறையில் அவருக்கு விளக்கம் அளிக்க அனுமதித்திருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அதற்குப் பின்னால் நாங்கள் விளக்கம் சொல்ல வேண்டும்.**

10-25 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே,** நான் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான் பேசியதற்குப் பின்னாலே முழுவதையும் கேட்டுவிட்டு பிறகு அவர் பேசட்டும், நான் பதில் சொல்கிறேன்.**

(கூச்சல்-குழப்பம்).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு வேண்டாம். உங்கள் செய்தியை மட்டும் சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** என்று சொல்வது சட்டத்திற்கு விரோதமானது, அபத்தமானது, மிக, மிகத் தவறானது. அதைத்தான் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள், தயவு செய்து, குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்லக் கூடாது. திரு. திருநாவுக்கரசு, உங்கள் விளக்கத்தைச் சுருக்கமாக முடிக்க வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஜெயலலிதாவைக் கூட நன்றியுணர்ச்சி உள்ள ஜெயலலிதா என்று தான் சொன்னேன். எஸ். ஆர். இராதா தான் இங்கே பேசுகின்றபோது நான்..........

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் வாய்ப்பு அளிக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ** .. நான் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. எஸ். ஆர். இராதா அவர்கள் சொன்னதற்குத்தான் நான் பதில் சொன்னேன். அவர்கள் பேசுகின்றபொழுது நான் கேட்டுக் கொண்டு இருந்தேன். நான் பேசுகின்ற போது பொறுமையாக இருந்து கேட்கட்டும். பின்னாலே அவர் பதில் சொல்லட்டும். (கூச்சல்-குழப்பம்).

பேரவைத் தலைவர் அவர்களே, முறையாக பொதுக் குழு கூடி— அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக்குழு—என்னைப் பொதுச் செயலாளராகவும், மற்ற கழக நிர்வாகிகளையும் தேர்ந்தெடுத்து செல்வி ஜெயலலிதா அவர்களைக் கட்சியை விட்டு நீக்கியது. அதற்குப் பின்னாலே இன்றைக்கு வரை செல்வி ஜெயலலிதா அவர்களைத் தலைமையாகக் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியில் கழகத்தினுடைய பொதுக் குழு கூட இன்றுவரை கூட்டப்படவில்லை. **

அவர்.......

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு எதையும் கூறாமல் உங்கள் செய்தியை மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் உண்மை நிலைமைகளைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர, எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. ஃபாக்ட்ஸைத்தான் சொல்கிறேன். (I am telling the fact only தவறாகச் சொல்லவில்லை. எனவே ....(கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு விளக்கம் அளிக்க நான் சந்தர்ப்பம் அளிக்கிறேன் என்று சொன்னீர்கள். குற்றச்சாட்டுகள் சொல்வதை அனுமதிப்பது முறையாக இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே சொல்லிவிட்டேன், குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது என்று.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : சபைக்கு வெளியே நடந்த சம்பவங்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு எதையும் இங்கே கூறக்கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன். குற்றச்சாட்டுகள் இல்லாமல் உங்கள் விளக்கத்தை மட்டும்தான் கூற வேண்டும். (கூச்சல்-குழப்பம்) திரு. திருநாவுக்கரசு பேசிவிடட்டும். பேசியதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் எந்தவிதமான குற்றச்சாட்டையும் சொல்லவில்லை.

திரு. கே. ரமணி : நமது மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்த அவை மிக முக்கியமான விவாதத்தை நடத்த வேண்டிய நேரம் முழுவதையும் உள் கட்சியில் இருக்கும்படியான சண்டைகளுக்குப் பயன்படுத்தக்கூடாது அப்படிப் பயன்படுத்துவது சரியல்ல. எந்த விதியிலும் அதற்கு இடம் கிடையாது. எந்தச் சண்டையாக இருந்தாலும் அதற்கு நியாயம் சொல்ல முடியாது. ஆகவே சபாநாயகர் அவர்களே, தயவு செய்து—அவர்களுக்குள்ளே பல சங்கதிகள் நடந்திருக்கலாம். சட்டத்திற்குட்பட்டு நம் அவையினுடைய விதிகளுக்குட்பட்டு கட்சித் தாவல் சட்டம் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்களே, அதனுடைய நடவடிக்கைகளில் ஏதாவது இங்கே தவறு நடந்திருக்குமானால் அது சம்பந்தமாக அவர்கள் சொல்லி பிரச்சினையைத் தைத் தீர்க்க வேண்டும். அவர்கள் உரிமையில் நாங்கள்

தலையிடவில்லை. இந்த அவையினுடைய உரிமையில் தலை யிடவில்லை. இந்த விவாதம் இப்படி நீடிக்கக்கூடாது. அவர்கள் தயவு செய்து மற்றவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நடக்க வேண்டும் என்று உங்களுடைய பாதுகாப்பின் கீழ் கூறுகிறோம்.

10-30 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தாங்கள் அறிவித்த அந்தத் தீர்ப்பு சட்டமன்றத்திற்குள்ளே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று ஏற் கெனவே தங்களிடத்திலே அறிவிக்கப்பட்டு இருக்கிறதோ, அது அந்தந்தக் கட்சி எடுக்கிற நடவடிக்கை காரணமாக, அதுவும் சட்டமன்றக் கட்சி எடுக்கின்ற நடவடிக்கை காரணமாக, என்ன மாற்றம் அளிக்கப்படுகிறதோ அதைப் பொறுத்தத் தீர்ப்பாக அது அமைகிறது. எனவே, சட்டமன்றத்திற்குள்ளே அந்த விதி முறைகளுக்கு உட்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி மட்டும் தான் இந்த அவையில் விவாதிப்பது பொருத்தமாக இருக்குமே தவிர, வேறு வெளியில் உள்ள பல்வேறு பிரச்சினை கள் பற்றி விவாதிக்கப் போதுமான காலம், நேரம் நமக்கு இல்லாத காரணத்தால் வெளியில் உள்ள பிரச்சினைகளை இங்கே விவாதிப்பது பொருந்தாது. நீதிமன்றத்தில் உள்ள பிரச்சினை களை நீதிமன்றத்தின் மூலமாகத் தகுந்த முறையிலே யாரும் தீர்த்துக் கொள்ள முடியும். அவர்கள் அங்கே நீதியைப் பெறு வார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். இங்கே சட்டமன்றத் தில் சட்டமன்ற விதிமுறைகளைக் காப்பாற்றுகின்ற அந்த முறை யிலே செயல்படுவதற்குத் தாங்கள் வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. சின்னசாமி :** தலைவர் அவர்களே, திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசியதை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுடைய அந்தக் கருத்துக்கள் ஏற்புடையதாக இருக்கின்ற காரணத்தால் குற்றச்சாட்டுகளாகச் சொல்லப்பட்ட அத்தனையும் வெளியே பத்திரிகைகளுக்குச் சென்று நாம் நமது பணியை விட்டு வேறு பணியில் ஈடுபடுகி றோம் என்று சொல்லுவதற்கு வழியில்லாமல் அவைகள் பத்திரி கைகளில் வராத அளவுக்கு நீங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஏற்கெனவே நீங்கள் இங்கே இருக்கின்ற கட்சிகளுடைய தலைவர் என்ற முறையிலே



சாட்டிய குற்றச்சாட்டுப் பகுதியை மட்டும் அவைக் குறிப்பி லிருந்து நீக்கி விடுகிறேன். மற்றபடி உங்கள் தொடர்பாக, ஏன் என்றால் நீங்கள் நேரடியாக இந்தத் தீர்ப்பின் வாயிலாகத் தொடர்புடையவர் என்ற முறையில் உங்கள் கருத்தைச் சுருக்க மாக விளக்கிச் சொல்லிவிட வேண்டும். ஏன் என்றால், அடுத்த செய்திக்கு நான் போக வேண்டும். வேறு எந்த வகையான செய்திக்கும் இடம் கிடையாது. (கூச்சல்-குழப்பம்).

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டையுமே கவனித்து எது குற்றச்சாட்டோ, அந்தக் குற்றச்சாட்டுப் பகுதியை நீக்கி விடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, நான் இதுவரையில் பேசிய பேச்சில் எந்தவிதமான குற்றச்சாட்டையும் யார் மீதும் சுமத்தவில்லை. கடந்த காலத்திலே நடந்த எங்க ளுடைய சொந்தக் கதைகளை, சோகக் கதைகளைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர....(கூச்சல்-குழப்பம்).

**திரு. மொ. தங்கவேல் :** இந்தக் கதைகளை சினிமாவில் வைத்துக்கொள்ளுங்கள். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன இருந்தாலும் திரு. திருநாவுக்கரசு அவர்கள், நான் சொன்ன தீர்ப்புக்கு மட்டும் ஏதாவது உங்களுடைய விளக்கம் இருக்குமானால் சொல்லலாம். (கூச்சல்—குழப்பம்). அனைவரும் உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு அவர்கள் நான் சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் மட்டும் சொல்லலாம். வேறுசெய்தி எல்லாம் சொல்லக்கூடாது. வேறு செய்திகள் எல்லாம் வரக்கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, ** எனவே அவருக்குத் தெரியும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் வேண்டாம். உங்கள் செய்தியை மட்டும் சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்). அதெல்லாம் வேண்டாம். திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொடர்ந்து இப்படிப் பேசினால் நான் பேச அனுமதிக்க மாட் டேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1991 சனவரி 21

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கூட நான் சொல்லியிருக்க மாட்டேன் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, வேறு செய்தியை அனுமதிக்க மாட்டேன். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, என்னைப் பற்றித்தான் பேசுகிறேன். . . . . (கூச்சல்-குழப்பம்).

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு தீர்ப்பு அளித்து இருக்கிறீர்கள். இங்கே அவையில் இந்த அமளியைத் தொடர்வதற்குப் பதிலாக அந்தத் தீர்ப்பின் மீது விளக்கமோ, மறுப்போ ஏதேனும் தெரிவிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு முகாந்திரம் இருக்குமானால் அதைத் தங்கள் அறையில் நீங்கள் கேட்டு விசாரித்துப் பிறகு அவையில் எழுப்புவதற்கு அனுமதி தேவையானால், அனுமதித்து, பிறகு அதை எடுத்துக் கொள்ளலாம். இந்த அவையினுடைய நேரம் வீணாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தாங்கள் தலையிட்டு இந்த அவையினுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்கள் இது தொடர்பாகக் கருத்து இருக்குமானால் எழுதி, எனக்கு அறையில் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு எங்களுடைய கருத்தை நான் உங்களுக்குத் தெரிவிப்பேன். (குறுக்கீடு) இதற்கு மேலும் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேச வேண்டாம். ஏன் என்றால் தீர்ப்பை ரொம்ப விமர்சிக்கிற மாதிரி ஆகிவிடும். உங்களுடைய கருத்தை நீங்கள் எழுதிக் கொடுத்து விடுங்கள். ஒரு வரியிலே சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . (கூச்சல்-குழப்பம்).

10-35 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு வரியிலே முடியுங்கள் (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு அவர்கள், ஒரு வரியிலே முடிக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1991 சனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **சீக்கிரம் முடித்து விடுங்கள்.** ஏனென்றால், எல்லா உறுப்பினர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சம்பந்தப்பட்ட உறுப்பினர். . . . . . . . . (குறுக்கீடு).

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்புக்குப் பிறகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் அந்தத் தீர்ப்பைப் பற்றிக் குறை கூறுகிற வகையிலோ அல்லது இதுபோன்ற தீர்ப்புகள் ஏற்படுவதற்கான சூழல்கள் ஏன் ஏற்பட்டன என்பதற்கான விளக்கங்களையோ சொல்வதன் காரணமாக இரு தரப்பிலும் அமளி ஏற்படுவதற்கு ஒரு வழிவகை உருவாகிறது. எனவே, அவையில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் மீது அவர் என்ன கூறுகிறார் என்பதை மாத்திரம்தான் இங்கு சொல்லவேண்டுமேயல்லாமல் வேறு விளக்கங்களைச் சொல்வது அவசியமற்றது. அவர்களுக்குள்ளே இருக்கிற தகராறு, மற்றவைகளைப் பற்றி பேசிக் கொள்ள இன்னும் பல்வேறு வாய்ப்புகள் இந்த அவையிலே இருக்கின்றன. கவர்னர் உரை மீதான விவாதத்தின்போதுகூட அந்தக் கருத்துக்களை சொல்லிக் கொள்லாம். ஆனால், தாங்கள் அளித்த தீர்ப்பின் மீது இப்படிப்பட்ட ஒரு அமளி உருவாவதற்குக் காரணமாக யாரும் இருக்க கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு அவர்கள் இதற்கு மேலே பேச வேண்டாம் (குறுக்கீடு). நீங்கள் எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு). இதற்கு மேல் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேச வேண்டாம். (குறுக்கீடு). வாக்கியத்தை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய தீர்ப்பைக் குறை கூறியோ, வேறுவிதமாகவோ உரையாற்றவில்லை. நான் சம்பந்தப்பட்ட உறுப்பினர். நீங்கள் இந்த அவையை ஆரம்பிக்கும்போது படித்த திருக்குறளே, பிறருக்கு வந்த துன்பத்தை, மற்றவர்கள் தனக்கு வந்த துன்பமாகக் கருத வேண்டுமென்று படித்தீர்கள். எனக்கேற்பட்ட துன்பத்தை, ஏற்பட்ட நிகழ்ச்சிகளை நான் சொல்லிக்கொண்டு இருக்கின்றேனே தவிர, நான் வும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு). சீக்கிரம் முடித்து விடுகிறேன். நான் சொல்ல வந்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் நான்கு தடவையாக, என்னைப் பொறுத்தவரையில் நான்காவது தடவையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனைத்

இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய காலத்திலிருந்து, அதற்குப் பின்னால்-1977லே சட்டமன்றத்திலே துணை சபாநாயகராகவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தவரையில் அமைச்சராகவும் வைத் திருந்தார். ** (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்கள் இனி தொடர்ந்து பேச வேண்டாம். நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். உங்கள் கருத்து எதுவானாலும் நீங்கள் எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு) இனிமேல் உங்களைப் பேச அனுமதிப்பது முறையாக இருக்காது. திரு. திருநாவுக் கரசு அவர்களை இனிமேல் பேச அனுமதிக்க முடியாது. நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அதற்குப்பிறகு என்னவென்று பார்க்கிறேன். இப்போது நீங்கள் வேறு எதையும் பேச அனு மதிக்க முடியாது. இனிமேல் யாரையும் இதுபற்றிப் பேச அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இனி மேல் அனுமதிக்கமாட்டேன். இது தொடர்பாகத் தொடர்ந்துப் பேசினால் பிரச்சினை வருகிறது (குறுக்கீடு) நீங்கள் சொல் வதை நான் மறுக்கவில்லை. உங்களுடைய கருத்தை நீங்கள் எழுதிக் கொடுங்கள். பிறகு அவையிலே அதுபற்றி அலசி ஆராய் வோம். அதுகுறித்து நியாயம் என்னவோ அதைப்பற்றிப் பிறகு பார்ப்போம். இப்போது நாம் தீர்ப்பை உறுதிப்படுத்தி, அடுத்த பிரச்சினைக்கு வரலாம். (குறுக்கீடு) அடுத்து, ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். ஆர். இராதா..............(கூச்சல் குழப்பம்) எல்லோரும் உட்கார வேண்டும். இல்லையென்றால் வெளியேற்ற வேண்டிவரும். எல்லோரும் உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்.) திரு. திருநாவுக்கரசு உட்காருங்கள், இல்லையென்றால் வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு உட்காருங்கள், இல்லையென்றால் நான் வெளியேற்ற வேண்டி யிருக்கும் (குறுக்கீடு). விவாதத்திற்கெல்லாம் இடமே கிடை யாது. எல்லோருமே உட்காருங்கள். இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள். (கூச்சல்-குழப்பம்) அந்தப் பிரச்சினையையெல்லாம் பேசக்கூடாது. எழுதிக் கொடுங்கள். அதற்குப் பிறகு பார்ப்போம். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். உட்காரவில்லையென்றால் வெளியேற்ற வேண்டியிருக்கும். திரு. திருநாவுக்கரசு உட்கார வேண்டும். உட்காரவில்லையென்றால் வெளியேற்ற வேண்டி யிருக்கும். இது தொடர்பாக நான் இனிமேல் பேச அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) இனிமேல் நீங்கள் பேசினால் நான் வெளியேற்றுவேன். (குறுக்கீடு). திரு. திருநாவுக்கரசு உட்காரு மாறு வேண்டுகிறேன். (குறுக்கீடு). திரு. திருநாவுக்கரசு உட்காருமாறு கட்டளை இடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் நின்று பேசிக்கொண்டே இருந்தனர்).

10-40 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். திரு. திருநாவுக்கரசு, வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். மார்ஷல், அவர்கள் இரண்டு பேரையும் வெளியேற்றுங்கள். திரு. திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் இரண்டுபேரையும் வெளியேற்றுங்கள். மார்ஷல், வெளியேற்றுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் இரண்டுபேரும், தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட வர்கள். அவர்களுக்கு வாய்ப்பு முழுமையாகக் கொடுக்க வேண்டும். நீதிமன்றத்தில்கூட, யாருக்காவது பாதிப்பான ஒரு தீர்ப்பு வருமேயானால், முழுமையான வாய்ப்பு உண்டு. ஆகவே, அவர்களுக்கு முழுமையான வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களெல்லாம் எனக்குக்கூட துணைக்கு வராதவர்களுக்கு நான் இன்றைக்கு ஆதரவாகச் சொல்கிறேன். நான் தனிமையாக இருக்கும் பொழுது துணைக்கு வரவில்லை. இன்றைக்கு அவர்களுக்கு ஆதரவாகச் சொல்கிறேன்., பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமை யான வாய்ப்புக் கொடுக்க வேண்டும். தீர்ப்பு அவையிலே படிக்கப்பட்டிருக்கிறது; தீர்ப்பு வெளியிலே படிக்கப்பட வில்லை. தீர்ப்பு அவையிலே படிக்கப்பட்டிருக்கிறது. அவர் களை வெளியேற்ற வேண்டாம். அதை நீங்கள் மறு உத்தரவு பிறப்பித்து மூன்று பேருக்கும் பேசுவதற்கான வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவரவர்களே................ (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணித்துளி, எல்லோரும் உட்காருங்கள். நான் பேசிவிடுகிறேன். அனைத்து உறுப்பினர்களும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். நான் ஒரு தீர்ப்பை நீண்ட காலமாக அளிக்கவில்லை என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் திரு. எஸ். ஆர். இராதா ஆகியோர் எழுந்து குறிப்பிட்டார்கள். உடனடியாக அந்தத் தீர்ப்பை இன்றைக்கு அளித்திருக்கிறேன். காரணம், 23—8—1990-க்குப் பின்னால் நம்முடைய அவை 18—1—1991-இல் கூடியது. அன்றைக்கு ஆளுநர் உரை என்பத னாலும், அடுத்தநாள் இரங்கல் தீர்மானத்தின் அடிப்படையிலே

வருவதனாலும் இன்றைக்குத்தான் தீர்ப்பைச் சொல்ல வாய்ப்பிருக்கும். எனவே, அந்தத் தீர்ப்பைத் தயார் நிலையில் வைத்திருந்து இன்றைக்குச் சொல்லியிருக்கிறோம். அது தொடர்பாக, தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்ற வகையிலே — நான் வேறு சொற்களைக் கையாள விரும்பவில்லை — உட்பட்டவர்கள் என்ற முறையில் திரு. திருநாவுக்கரசு, திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. உகம்சந்த் ஆகியவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவைதானே தவிர, மற்றபடி தீர்ப்புக்கு எதிராக அவர்களும் குரல் எழுப்பவில்லை ; நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எங்களுடைய நிலை என்ன என்று அவர்கள் கேட்டார்கள் என்றாலும், தொடர்ந்து இது தொடர்பான பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டிருந்ததாலும் நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்களும், மற்ற உறுப்பினர்களெல்லாம் கூறியதைப்போல, அவையினுடைய நேரம் வீணாகிறது என்பது மட்டுமல்லாமல், பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதையே உணர்ந்து குறிப்பிட்டிருப்பதனாலும், வெளியேற்ற வேண்டும் என்பதை நான் திரும்பப் பெற்றுக்கொண்டு, இனிமேல் இது தொடர்பான பேச்சையும் தொடர வேண்டாம் என்பதையும் நான் குறிப்பிட்டு, இது தொடர்பாக நீங்கள் என்ன சொல்ல விரும்பினாலும், என்னுடைய அறையில் நீங்கள் எழுதிக்கொடுங்கள் ; நான் ஆர அமர அதுபற்றி விசாரித்துத் தக்க தீர்ப்பை அளிப்பேன் என்பதை மட்டும் சொல்லி, இப்பொழுது என்னுடைய தீர்ப்பு இதுவே என்பதைக் கூறி, அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ரமணி :** தலைவரவர்களே, நீங்கள் ஒரு உத்தரவைப் பிறப்பித்த பிறகு, அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல், அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்களை வெளியேற்ற வேண்டுமென்று நீங்கள் ஒரு உத்தரவினையும், அதற்கான தண்டனை நடவடிக்கையையும் நீங்கள் சொன்னதற்குப் பிறகும், அது நிறைவேறவில்லை என்று சொன்னால், இந்த அவையினுடைய எல்லா உரிமைகளும் பறிமுதல் செய்யப்படுகிறது என்பதற்கு நீங்கள் அனுமதிக்கக்கக்கூடாது. ஆகவே, இனிமேல் அது நிகழாமல் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரமணி அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது, வெளியேற வேண்டுமென்று நான் கட்டளையிட்ட பிறகு, அதற்குக் கீழ்ப்படியாவிட்டால் கண்டிப்பாக அவர்களை வெளியேற்றிவிடுவார்கள் என்பதுதான் இறுதியான நிலைமை. என்றாலும், திரு. பி. எச். பாண்டியன் போன்றவர்கள் எழுந்து, அவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள், கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளியுங்கள், மீண்டும் அவர்களை அனுமதிப்பதற்கு வாய்ப்பு அளியுங்கள் என்று கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்கு ஏற்பத்தான்



திரும்பப் பெறுகிறேன். இல்லாவிட்டால் இப்பொழுது நான் இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள மாட்டேன். எனவே, இப்பொழுது திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசினால் வெளியேற்றுவது என்பது தவிர்க்க முடியாதது. திரு. திருநாவுக்கரசு, நீங்கள் உட்காருவதாக இருந்தால் உட்காரலாம் ; இல்லையென்றால் நான் வெளியேற்றி விடுவேன்.

(திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் இருவரும் நின்று பேசிக்கொண்டே இருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் நான் அனுமதிக்கவே மாட்டேன். மார்ஷல், திரு. திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் இரண்டு பேரையும் வெளியேற்றுங்கள்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவரவர்களே, பாதிக்கப்பட்டவன் நான், எனக்கும் வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளியேற்றுங்கள். மார்ஷல், கூப்பிட்டுக் கொண்டு போங்கள்.

10-45 மணி

(திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகியோர், பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்).

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், நாங்கள் கொடுத்திருக்கிற கடிதப்படி, இன்றைக்கு வழங்கிய அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், தீர்ப்புக்குப் பின்னணியில் ஏற்பட்ட ஒரு சூழ்நிலையை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்து இருக்கக்கூடாது. ஆனால்........(கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேறு செய்தி ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற அந்தப் பிரச்சினை எதிர்பாராத வகையிலே நடந்த ஒன்று. எதிர்பாராத வகையிலே தொடர்கிற அனைத்துக் காரியங்களும், சபாநாயகர் அவர்கள் அனுமதித்து நடைபெறுவது என்று கூறும் கருத்து சரியல்ல. அனுமதித்ததாக எண்ணிக்கொண்டு அப்படி ஒரு கருத்தைத் தோற்றுவிப்பதும் சரியல்ல. முறைகேடுகள் நடை

பெறுகிறபோது, எந்தவகையில் அந்த முறைகேடுகளை, அந்தக் காலகட்டத்தில் சமாளிப்பது என்பதைத்தான் சபாநாயகர் அவர்கள் கருத முடியுமே தவிர, முன்கூட்டியே தீர்மானிக்க இயலாது—அது முன்கூட்டியே இசைவைப் பெற்று நடைபெற்ற காரியமாகக் கருதுவது எந்தச் சூழ்நிலையிலும் பொருந்தி வராது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், ** (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் பேசினால், நான் உங்களைப் பேச அனுமதிக்க மாட்டேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அ.இ.அ.தி.மு.க. கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. இராதா அவர்கள் பேசிய—சடைசியில் பேசிய—இரண்டு, மூன்று தொடர்கள் சட்டமன்ற விதிமுறைகட்கு மாறுபட்டது. அப்படிக் குறிப்பிடப்பட்ட அந்த வார்த்தைகள் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று தங்கள் மூலமாக வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னவர் குறிப்பிட்டவாறு, அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

*திரு. உ. ரா. வரதராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு தீர்ப்பை அளித்தீர்கள். தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் விளக்கம் சொல்வதற்கு எழுதிக் கொடுக்கலாமென்று சொன்னீர்கள். தீர்ப்பைக் கோரியவர்கள், தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, இந்த அவையினுடைய நேரத்தைத் தொடர்ந்து வீணடிப்பதற்கு, தாங்கள் அனுமதிக்கக்கூடாது. இந்த அவை, தன்னுடைய நிர்ணயிக்கப்பட்ட அலுவலை மேற்கொள்வதற்கு தாங்கள்தான் இந்த அவைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஒழுங்குப் பிரச்சினையாகக் கிளப்பி, உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக, இனி மேல் யாரும் பேசுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. வேறு செய்தி இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்)........ திரு. உகம்சந்த், உட்காரலாம்........(குறுக்கீடுகள்).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தான். திரு. திருநாவுக்கரசு, திரு. சே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியோரும் அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவே அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் நாங்கள்தான் என்று தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இங்கு நியாயத்திற்குப் புறம்பான முறையில் மற்றவர்கள் செயல்படுவதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. எஸ். டி. உகம்சந்த் வெளிநடப்புச் செய்தார்).

திரு. எஸ். ஆர். இராதா : இந்த அவையைப் பொறுத்தவரையில், தீர்ப்பை ஏற்றுக் கொள்கிற இந்தச் சூழ்நிலையிலும் கூட, கட்சியில் நடைபெறுகிற சம்பவங்களை இங்கு குறிப்பிடுவது சரியல்ல என்பதாலே** **

10-50 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் வேறு ஏதாவது செய்தி இருந்தால் சொல்லுங்கள்.... (கூச்சல்—குழப்பம்). திரு. ராதா அவர்களை, வேறு செய்தி இருந்தால்தான் பேச அனுமதிப்பேன், இல்லை என்றால் பேச அனுமதிக்க மாட்டேன். இவ்வளவுதான் சொல்வேன் (குறுக்கீடு) வேறு ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்றால் சொல்லுங்கள். இல்லை என்றால் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு காரணத்தைக் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்யவேண்டும் என்பதற்காக ஒரு காரணத்தைச் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையில் ** (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டுக்களைச் சொல்ல முடியாது. திரு. இராதா அவர்களுடைய பேச்சை ஏற்றுக் கொள்ள முடியாது. வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்றால் வெளிநடப்புச் செய்யுங்கள். ஆனால் கண்டவற்றையும் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. குற்றச்சாட்டுகளைச் சொல்ல முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா: இன்றைக்கு நடவடிக்கையில் ஈடுபட்டு... ... .... (கூச்சல் குழப்பம்).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டது,** ** என்று சட்டமன்றத்தில் பேசுவது எந்த வகையிலும் சட்டமன்ற நடவடிக்கையில் இடம் பெறக் கூடியதல்ல. ஆகவே சபாநாயகர் அவர்கள், அப்படிப்பட்ட பொருந்தாத கருத்துக்களை சட்ட மன்றத்தில் சொல்லக்கூடாத கருத்துக்களை யாரேனும் சொன்னால் அதைப்பற்றித் தாங்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும். இன்னும் ஒன்று, நான் வெளியேறுவதற்கு ஒரு காரணம் சொல்வேன் என்று எதிர்கட்சியின் முன்னாள் தலைவர், இப்போது அடுத்த கட்சியின் தலைவர் இங்கே குறிப்பிடுகிறார். வெளியேறுவதற்கு ஒரு காரணம், வெளியேறுவதற்கு ஒரு காரணம் என்று தேடிச் சொல்வதும் இந்த அவைக்குப் பொருந்தாது. ஏதேனும் காரணம் இருந்தால், அதன் காரணமாக வெளியேறுவது சட்டமன்றக் கட்சித் தலைவர், உறுப்பினர்களுடைய உரிமை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, வெளியேறுவதற்குக் காரணம் சொல்கிறேன் என்ற ஒரு வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை (குறுக்கீடுகள்) நான் வெளிநடப்புச் செய்வதற்குக் காரணத்தைச் சொல்கிறேன், வெளிநடப்புச் செய்வதற்குக் காரணம் சொல்கிறேன் என்று சொல்லி நீங்கள் அதைக் கேலி செய்து விட்டால் அதனால் நீங்கள் தப்பித்து விடலாம் என்பதல்ல. ஆனால் செய்திருக்கிற தவறுகளைச் சொல்கிறேன். நாங்கள் மூன்று பேர் மீது நடவடிக்கை எடுத்து உங்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். நான்கு பேரில் ஒருவர் ராஜினாமா செய்து விட்டார். பாக்கி மூன்று பேர் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை அதற்கான கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு உங்களிடத்திலே அளித்திருக்கிறோம். அந்தக் கட்சித் தாவல் அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களைச் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் மூலம் பதவி இழந்தவர்களாக அறிவிக்க வேண்டும் ****

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வாக்கியமே அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியேற்றப்பட்டவர்கள் இன்று முழுவதும் அவைக்கு வர முடியாது.(குறுக்கீடுகள்) உட்காருங்கள், அடுத்து சில அறிவிப்புகள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

### 3. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்கள் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் மற்றும் திரு. கொ. மாதப்பன் ஆகியோரின் பதவி விலகல்களை ஏற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. செங்கை அண்ணா மாவட்டம், அச்சரப்பாக்கம் தனிச் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து 2-1-1991 முதல் விலகிக் கொண்டு உள்ளார்கள் என்றும் அரசமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3-பி உட்பிரிவின்படி அப்பதவி விலகல் அந்தத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றப் பேரவைத் தொகுதி உறுப்பினர் திரு. கொ. மாதப்பன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து 18—1—1991 முதல் விலகிக் கொண்டுள்ளார்கள் என்றும், அரசமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு 3-பி உட்பிரிவின்படி அந்தப் பதவி விலகல் அந்தத் தேதியிலிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப் பெற்றது என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி பிரதான எதிர்க்கட்சியாகவும் சட்டமன்றப் பேரவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது குறித்து.

10-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு அடுத்த அறிவிப்பு. திரு. கொ. மாதப்பன் அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொண்டுள்ளதன் விளைவாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சி பிரதானஎதிர்கட்சித் தகுதியினை இழந்து விட்டதன் காரணமாகவும், இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக உள்ளதால் அக்

கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. உரிமைப் பிரச்சினைகள்.

**(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி மீது—பேரவைத் தலைவருடைய செயல்பாடுகள் பற்றி பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளது குறித்து.**

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 220-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையைப்பேரவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலேயும், பொது மக்களிடையே தவறான எண்ணத்தை உருவாக்கும் வகையிலேயும் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி பத்திரிகை நிறுவனத்திற்கு, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் சொன்னச் செய்தி, ''தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது, அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். இதற்கான பத்திரிகை நகல்களை தங்களுக்குக் கொடுத்துள்ளேன். இதைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள தங்கள் அனுமதி வேண்டுகிறேன். திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவர் என்கின்ற வகையிலேயும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயும் ................ (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே வெளியேற்றப்பட்டவர்கள் இன்றைக்கு முழுவதும் அவைக்கு வரக்கூடாது என்று அறிவித்திருக்கிறேன்.

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நடக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளில் தாங்கள் அளித்த தீர்ப்பு நிறைவேற்றப்படாமல், அந்தத் தீர்ப்பை மீறி நடப்பதும், திரும்பவும் அதை மீறி வருபவர்கள் சபையிலே அந்தக் காரியத்தைச் செய்வது என்பதும் சரியல்ல. எனக்கு எந்த உறுப்பினர் மீதும்.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ஏற்கெனவே அவர்கள் 2 பேரும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றி ஆயிற்று. அவர்கள் அவைக்கு ஒரு நாள் வரக்கூடாது என்று சொல்லி ஆயிற்று.**



திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற மரபுகளுக்குரிய மரியாதையைக் கொடுத்து நாட்டுமக்கள் மத்தியிலே ஒரு நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டிய ஒரு தலைவர், அதை இழக்கின்ற வகையில் ஒரு பயங்கரமான, கடுமையான குற்றச்சாட்டைப் பேரவைத் தலைவர் மீதும், பேரவை நடவடிக்கைகள் மீதும், பத்திரிகையிலே செய்தியாகத் தெரிவித்து உள்ளார்கள், அவர்கள் சொன்ன செய்தியில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக....(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. நா. கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. மூக்கன், திரு. ராஜூ, திருமதி லட்சுமி ஆகிய மூன்று உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர் என்பது ஒரு தவறான, உண்மைக்குப் புறம்பான செய்திதான் என்பதைத் தாங்கள் ஏற்கெனவே 20–8–90 அன்று தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இந்தப் பேரவையில் அளித்த தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறீர்கள். அப்படிபட்ட தீர்ப்பு அளிக்கப்பட்டு இருந்தும் வேண்டுமென்றே தாங்கள் தீர்ப்பு வழங்கியது மாதிரியும், அதற்கு ஏதோ உள்நோக்கம் இருப்பது போலவும் உங்களைப் பற்றி ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை அவர்கள் சொல்லியிருப்பது இந்த அவையின் பெருமையை மாத்திரமல்ல, ஜனநாயக மரபுக்கே இந்த அவையிலே களங்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றார் என்பது மட்டுமல்லாமல், வேண்டுமென்று நிலைமையைத் திரித்துக் கூறியது மாத்திரமல்லாமல் வேண்டுமென்றே அவைத் தலைவர் மீது களங்கத்தை உருவாக்கியுள்ளார் என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் கூறி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அளிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர்கள் இப்படிச் சொன்னதற்குப் பிறகு ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பாக வேண்டாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொன்னபோது திரு. வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னதிலே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. இது தொடர்பாகப் பேசாதீர்கள். வேறு செய்தி பேசுங்கள்.

11-00 மணி

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அறிவிக்கும்போது Point of order கூடாது.

1. திரு. சா. சிவசுப்பிரமணியன்.

2. திரு. எம். இராமச்சந்திரன்.

3. திரு. ஆ. நடராசன்.

4. பேராசிரியர் க. பொன்னுசாமி.

5. திரு. பி. வி. இராஜேந்திரன்.

6. திரு. செ. நூர்முகமது.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைப்பற்றி ஒரு குற்றச்சாட்டு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாகப் பேசக் கூடாது. No point of order உட்காருங்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

**(ஆ) அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் உறுப்பினர் பதவித் தகுதியின்மைக்கு ஆளாகியிருப்பதாகச் சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு 19-1-1991 ஆம் நாளன்று அளித்த மனு—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.**

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள்— மாண்புமிகு 3 உறுப்பினர்கள்—நாங்கள், நேற்று, 19 ஆம் தேதியிட்டு 3 பேரை, கட்சியை விட்டு நீக்கப்பட்டவர்களை,



சட்டப்படி நீக்க வேண்டுமென்று ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் அந்த மனுவின்மீது தீர்ப்பு உடனே வரும் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் என்றால் பொதுவாக இப்படிப்பட்ட தீர்ப்புகளில்.... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோல ஒரு மனுக் கொடுத்து, ஏற்கெனவே தீர்ப்பு வந்திருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள் (குறுக்கீடு). இதேபோன்ற ஒரு மனுக் கொடுத்து அதற்கு இந்த அவையில் தீர்ப்பு அளிக்கப் பட்டு இருக்கிறதா இல்லையா ?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மனுவின்மீதுதான் மறுபடியும் உங்களுக்கு மனு தர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தத் தீர்ப்புக்காகத் தான் நாங்கள் மனுக்கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நான் தீர்ப்பு அளித்திருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்திருக்கிறீர்கள். எங்களுக்குக் கிடைத் திருக்கிற ஆதாரங்கள், அவர்கள் கட்சிக்கு விரோதமாகச் செயல் பட்டு................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பேச்சே கிடை யாது. நீங்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில் –19–8–1990 அன்று மனுவை அளித்தீர்கள்— 20–8–1990 அன்று தீர்ப்பு அளித்திருக்கிறேன். என்றாலும், நீங்கள் நேற்று மனுக் கொடுத் திருப்பதால், மீண்டும் ஒரு தடவை அதை...... (குறுக்கீடு) உட்காருங்கள். அதற்கு மேல் விளக்கம் ஒன்றும் வேண்டாம். ஏற்கெனவே நான் அளித்த தீர்ப்பில் வேறுமாதிரி குற்றச்சாட்டு வருவதை விரும்பவில்லை. அதை நீங்கள் படித்துப் பார்க்க வில்லை அல்லது அவையில் இல்லை என்கிற மாதிரி ஆகிவிடும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அப்படி ஒரு தீர்ப்பு அளித்தீர்கள். அதற்கு இடையிலே, நீண்ட இடைவெளி ஏற்பட்ட கால கட்டத்தில், எதிர்க்கட்சியிலுள்ள சிலர் தாங்கள் தீர்ப்பே அளிக்கவில்லை, அந்த 3 பேரையும் பற்றி—திருமதி லட்சுமி, திரு. இராசு, திரு. மூக்கன் ஆகியோர்மீது தாங்கள் எந்தவித மான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தீர்ப்பு அளிக்கவில்லை என்ற பிரச்சாரம் நாட்டில் நடைபெற்று, மிக முக்கியமான பத்திரிகைகள்கூட தாங்கள் தீர்ப்பு அளிக்காதது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் ஏற்கெனவே அதைப்பற்றித் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள்.

பொதுவாக சட்டமன்றத்திற்கு உள்ளேயே, கட்சித் தாவல் சட்டப்படி 'விப்' பை மீறி நடந்துகொண்டால்தான் அவர்களை நீக்க வேண்டுமென்று சட்டம் இருப்பதாகத் தாங்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதாக எனக்கு நினைவு. ஆகவே, தாங்கள் தேவைப் பட்டால் மீண்டும் ஒரு முறை அந்தத் தீர்ப்பை இந்த அவையில் தாங்கள் படித்துவிடுவீர்களானால் இடையில் நடைபெறுகின்ற தவறான பிரச்சாரத்திற்கு விடை கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை அவர்கள் கொடுத்த மனுவின் மீது தாங்கள் தீர்ப்பு அளித்திருந்தாலும், இடையிலே புதிய சூழ்நிலை, புதிய ஆதாரங்கள், மீண்டும் அவர்கள் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் நிச்சயமாக மீண்டும் இப்படி புதிய மனு கொடுக்க இடம் இருக்கிறது. அதுமட்டுமல்ல· 10th Schedule para 2 deals wi h 'disqualification and g ant of defection' "If he has volunta ily giv n up his m mber shlp of such p litical party, not inslbe the House even if he has giv n up his membership of the particular Political party outside the House that amounts to defection.." .. அதுமட்டும் டிபெக்சன் ஆகுமே தவிர........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதுவரைக்கும் எந்தக் கட்சித்தாவல் சட்டத்தின்கீழும், 'out side ல் நடைபெற்ற தின்மீது தீர்ப்பு அளிக்கப்படவில்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, நான் சொல்கிறேன். அது மாதிரி பாரா 3 தான் டிஸ்குவாலிபிக்கேசன் எப்படி வராது என்று சொல்கிறது. ('Disqualification not to apply in case of Split' என்று சொல்வது ஒருவர் ஒருவராகப் பிரிந்து, இருவர் இருவர் ஆக இணைந்து, பிறகு அது 10 பேர் ஆக ஆகிவிடும். எனவே, அது 'ஸ்ப்லிட்' என்று சொன்னால் அது 'ஸ்ப்லிட்' ஆகாது ஏனென்றால் பார்லிமென்டில் நடந்ததை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது எல்லாம் விளக்கம் ஆகாது. அது எல்லாம் ஏற்கெனவே எனக்கும் தெரியும்.

**திரு. எம். அப்துல் லத்தீப்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தாங்கள் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள், ஏற்கெனவே ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால்தான் அதற்கு இடையே அந்த மனுவில் குறிப்பிட்டவர்கள், அவர்கள்



சார்ந்துள்ள கட்சிக்கு மாறாக, அதனுடைய கட்டுப்பாட்டுக்கு மாறாக நடந்திருக்கிறார்கள் என்றால் முதலிலே அந்தக் கட்சி தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11-05 மணி

எனவே உங்களுக்கு எந்த வகையிலே அதிலே பொறுப்பு இருக் கிறது? சபையிலே நடக்காதது, கட்சிக்கு மாறாக வெளியே நடந்திருந்தால் அந்தக் கட்சிக் கட்டுப்கோப்பைக் காக்கவேண்டு மென்றால், அதிலே அவர்களுக்கு அக்கறை இருந்தால், முதல் பொறுப்பு அந்தக் கட்சிக்குத்தான். அந்தக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அது சபாநாயகர் பொறுப்பு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப் பிட்டதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர் களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவர்கள் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் குற்றச்சாட்டாக ஆக்கி, அவர்களுக்குத் தரவேண்டிய நோட்டீஸ் கொடுத்து, அதற்கு அவர்கள் விளக்கம் தராமல், மீண்டும் கட்சி விரோத நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். ஒரு கட்சிக்குத் துரோகம் செய்கிறார்கள். துரோகம் செய்திருக்கிறார்கள் என்று தெரிந்த காரணத்தாலேதான்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதற்கான கால நீட்டிப் புக்கு அவகாசம் கொடுக்கிறீர்களா, இல்லையா என்பது உங்களைப் பொறுத்தது (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர் சொல்வது, கட்சியே நடவடிக்கை எடுத்திருக்கலாமே, உங்களிடம் ஏன் இதைக் கொண்டுவருகிறார்கள்' என்பதுதான். இப்போது எனக்கு அதுவல்ல பிரச்சினை. நீங்கள் கொடுத்த மனுவிற்கு என்னுடைய விடையைச் சொல்லிவிடுகிறேன் (குறுக் கீடு) உட்காருங்கள். அதை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி அலுவலகத்திலே பேச வேண்டியது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : சபாநாயகர் அவர் களே, 3 பேரைக் கட்சியிலே இருந்து நீக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அப்படி நீக்கிய பிறகு, அவர்கள் எந்த நடவடிக்கை எடுத்தால், அதில் இவர்களுக்கு என்ன கவலை? (சிரிப்பு) நம்மை விட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் யாரோடு போனாலும், இவர்களுக்கு என்ன கவலை? **(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஐயா, உட்காருங்கள் குமரி அனந்தன் அவர்கள் ஏதோ சொல்கிறார் (குறுக்கீடு), திரு. குமரி அனந்தன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஒருகட்சியைப்*பற்றி* என்று சொல்வதை நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் சொன்ன அந்தத் தொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : அடுத்து நான் சொல்ல விரும்புவது (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி, இது போன்று நேரடியாகத் தாக்குகிற வேலை எல்லாம் வைத்துக் கொள்ளக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்ன கருத்தையும் கேட்டுக்கொண்டிருந்தோம். தாங்கள் சொன்ன கருத்துக்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் பாராளு மன்றத்திலே ஏற்பட்ட நடைமுறைகளைப் பற்றியும் நீங்கள் சொன்னீர்கள். கட்சியிலேயிருந்து நீக்கப்பட்ட சிலரோடு போய்ச் சேர்ந்து கொண்டு எந்தக் கட்சியினுடைய தலைமை அவருக்குச் சின்னத்தைக் கொடுத்ததோ, அந்தக் கட்சியினுடைய தலைமையை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்லி, அந்தக் கட்சியிலே இருந்து வெளியேற்றப்பட்டவர்களோடு போய்ச் சேர்ந்துகொள்வேன் என்று சொல்கிற நேரத்தில் அவர் தானாக, தன்னிச்சையாக வாலண்டரியாக he gives up his member ship from the original party. அதுதான் இங்கே சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு எழுத்துப்பூர்வமாக வராமல், வெளியிலே நடக்கும் எந்த நிகழ்ச்சியையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இதுபற்றி ஏற்கெனவே தீர்ப்பெல் லாம் அளித்தாகிவிட்டது. அதை மீண்டும் வாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாம். இப்போது கட்சித் தாவல் சட்டம் பற்றி வாதத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை. உட்காருங்கள். என்னுடைய தீர்ப்பைச் சொல்லப் போகிறேன்.

திரு. குமரி அனந்தன் : பத்தாவது ஷெட்யூலிலே, "If he has voluntarily given up his membership of such political party" என்று இருக்கிறது. ஒரிஜினல் பார்ட்டி என்று சொல்லி விடட்டும். எங்களுக்குக் கேள்வியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் வெளியிலே சொல்லிக்கொள்ளுங்கள். வெளியிலே என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். பேரவைத் தலைவருக்கும் அதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. மாரப்பன், கே. பொன்னுசாமி, ஆர். அண்ணா நம்பி மற்றும் க. பழனிச்சாமி ஆகியோர் பத்திரிகையில வந்த செய்திகளை ஆதாரமாகக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கொ. மாதப்பன், திரு. ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும் திரு. வி. இராசு ஆகியோர் 1985ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (ஐம்பத்திரண்டாவது) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலின்கீழ் பேரவை உறுப்பினர் தகுதியின்மைக்கு ஆளாகிவிட்டார்கள் என்று 18—1—1991 ஆம் தேதியிட்ட தங்கள் மனுவில் கூறி, அதனை எனக்குக் கொடுத்துள்ளார்கள்.

இந்த மனுக்கள் நான்கும், இதே உறுப்பினர்கள் 19—8—90 ஆம் தேதியிட்டு என்னிடம் அளித்த மனுக்களிலிருந்தும் மாறுபட்டவையல்ல. எனினும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ. மாதப்பன் அவர்களின் 18–1–1991 ஆம் தேதியிடப்பெற்ற பதவி விலகல் கடிதம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, ஆணையும் பிறப்பிக்கப் பெற்றுவிட்டபடியால் அவர் குறித்த மனு செயலற்றதாகிவிடுகிறது. மற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும் திரு. வி. இராசு ஆகியோரைப் பொறுத்தவரையில் நான் 20–8–1990 அன்று அவைக்கு அளித்த தீர்ப்பே பொருத்தமாயிருக்கும் என்று கூறி இம்மனுக்களைத் தள்ளுபடி செய்கிறேன் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்.)

11–10 மணி

இதற்கு மேலே எந்த விவாதமும் கிடையாது. உட்காரலாம். (குறுக்கீடு). வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்றால் சொல்லி விட்டுக் கிளம்புங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நீங்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின்படி அதனுடைய எதிரொலியாக எங்களுக்கு இங்கே தங்களுடைய கருத்து அமையாத காரணத்தினால், அவர்கள் எந்தக் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனரோ அந்தக் கட்சி பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவதும், வேதனைக்கு உள்ளாக்கப்படுகிற ஒரு சூழ்நிலையும் உருவாகிற காரணத்தினால், நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாளைக்கு எத்தனை தடவை வெளிநடப்புச் செய்யலாம் என்று இனிமேல் ஆராய்ச்சி செய்யலாம்.

[1991 சனவரி 21

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், வெளியிலே நடந்ததை வைத்துத்தான் டிஸ்குவாலிபிகேஷன் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே பாராளுமன்றத்தில் திரு. ஆரிஃப் முகமதுகான் அவர்களும், திரு. வி. சி. சுக்லா அவர்களும் ஜன் மோர்ச்சா என்று ஏற்படுத்திவிட்ட பிறகு கூட, 1½ ஆண்டுக்காலம் பதவியிலே இருந்து இருக்கின்ற......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவு வேண்டாம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவுதானே, சரி.
திரு. எஸ். டி. உகம்சந்த் வெளிநடப்புச் செய்தார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அமைதியாக இருக்கவேண்டும்.

## 5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப் பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள், (மேலாண் மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.



991 சனவரி 21]

(ஆ) பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம். காரணம், இந்தச் சட்டமுன்வடிவுக்கு அவசியம் கிடையாது. இன்றைய தினம் நகராட்சிகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. உங்களுக்குத் தேவையானால் இந்த நகராட்சி உறுப்பினர்களும், தலைவர்களும் மீண்டும் சில காலம் இயங்குவதற்கு சட்டமுன்வடிவு புதிதாகக் கொண்டு வரலாம் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம் ; விவாதத்திற்கு அனுமதிக்கும்போது கருத்துக்களைக் கூறுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின்முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஈ) மாநகராட்சி சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.**

*11-15 மணி*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு, 1991.**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.





**(ஊ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவு, 1991.**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(எ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஐ) நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்புத் திட்ட (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம்

*திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18 ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் ".



திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இத்தீர்மானத்தை வழிமொழிகின்றேன்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்குத் தாங்கள் எனக்கு வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்தில் உள்ள தமிழர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த அரசு, இரண்டு ஆண்டுகளாகச் செய்த நல்ல காரியங்களைச் சொல்லிக் கொண்டே போனால், நேரம் போதாது என்பதால், சிலவற்றை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

11-20 மணி

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில், இந்த அரசினுடைய நிதிநிலைமை எந்த அளவுக்கு இருந்தது என்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம். தமிழக அரசினுடைய நிதிநிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது. எப்படி இந்த ஆட்சியை கலைஞர் அவர்கள் சிறப்பாக நடத்துவார்கள் என்று எல்லாப் பத்திரிகைகளும் எழுதிக் காட்டிய நேரம் உண்டு என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நிதிநிலை நெருக்கடியில் சிக்கியிருந்த மிழகத்தை, உணவுப் பற்றாக்குறையால் தவித்த தமிழகத்தை, மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஒளி இழந்திருந்த தமிழகத்தை கலைஞர் அவர்கள், அவருக்கு இருக்கிற அனுபவத்தால், ஆற்றலால், திறமையால், பொது வாழ்க்கையில் 50 ஆண்டு காலம் தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன்னை அர்ப்டணித்துக் கொண்டிருக்கிற கலைஞர் அவர்கள் நிதியாதாரங்களை எந்த அளவிற்குப் பெருக்கி, மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து, இந்த ஆட்சியைத் திறம்பட நடத்துகிறார்கள் என்பதை. நாம் நன்றாக அறிவோம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் 1988-89 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ. 1,457 கோடியாக இருந்தபோதிலும், திட்டச் சாதனை முடிக்கிற நேரத்தில் ரூ. 1,202 கோடியாகக் குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. இது முன்னால் இருந்த கவர்னர் ஆட்சிக் காலத்தில் இருந்த நிலைமை. ஆனால் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற கலைஞர் அவர்கள் 1989-90 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட

திட்ட ஒதுக்கீடு ரூ. 1,360 கோடி. ஆனால் திட்டச் சாதனை ரூ. 1,466 கோடி. ஏறத்தாழ 106 கோடி ரூபாய்க்கு அதிகமாக நிதியாதாரங்களைத் திரட்டியுள்ளதே இந்த ஆட்சியை மிக நல்ல முறையில் சிறப்பாக நடத்துகிறார்கள் என்பதற்குச் சான்றாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆயத் தீர்வையில் யார் யாருடைய கைக்கோ போய்க் கொண்டிருந்த பணத்தையெல்லாம் அரசினுடைய கஜானாவுக்குக் கொண்டு வருகிற அந்த வகையில் செயல்பட்டும், நெய்வேலியில் கிடைக்கிற பழுப்பு நிலக்கரிக்கு மத்திய அரசாங்கம் தரக்கூடிய ராயல்டி தொகை ரூ. 30 கோடியைப் பெற்றும், கறுப்புக் கல் போன்ற கனிம வளங்களை அரசின் சார்பில் ஏலம் விட்டதன் அடிப்படையில் 20 கோடி ரூபாயைப் பெற்றும், இப்படி அரசாங்கத்தினுடைய வருவாய்களைப் பெருக்குவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அரும்பணியாற்றி இருக்கிறார்கள் எனபதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1990—91 ஆம் ஆண்டில் ரூ. 1,450 கோடி ஏற்பளிக்கப் பட்ட நிதி ஒதுக்கீடாக இருந்தாலும், அதையும் தாண்டும் என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழ் மாநிலத்திற்கு ''தமிழ்நாடு'' என்று பெயர் சூட்டி தமிழ் நாட்டில் வரலாறு படைத்து இருக்கிறார்கள். அதைப் போல சுய மரியாதைத் திருமணங்கள் செல்லும் என்று சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இருமொழிக் கொள்கை இந்த நாட்டுக்குத் தேவையென்று அண்ணா அவர்கள் காலத்தில் இதே மாமன்றத்தில் சட்டமாக இயற்றி நடைமுறைப்படுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு சாதனைகள் படைக்கப்படும் என்பதற்கு எடுத்துக் காட்டாக மீண்டும் தமிழகத்தில் 13 ஆண்டு காலத்திற்குப் பின்னால் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், மண்டல் கமிஷன் அறிக்கை, காவிரி நதி நீர்ப் பங்கீடு, இப்படிப் பல்வேறு பிரச்சனைகள். அதைப் போல இண்டர்-ஸ்டேட் கவுன்சில். அரசியலமைப்புச் சட்டத்தின் 260-வது பிரிவின் படி இண்டர்-ஸ்டேட் கவுன்சில் என்ற அமைப்பை உருவாக்கி சாதனை படைந்த தலைவர் தான், தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் என்பது நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் தெரிவித்து இருந்தோம்.



11–25 மணி

திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய முன்னணியிலே ஒரு அங்கமாக இருந்து அந்தத் தேர்தல் அறிக்கையிலே மண்டல் குழுவினுடைய அறிக்கை இடம் பெற்று இருந்தது என்பதையும், அதை அமல்படுத்த வேண்டும் என்பதற்காக, தமிழக சட்டமன் றத்தில் ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றி, மத்திய அர சாங்கத்திற்கு அனுப்பி, மத்திய அரசாங்கத்தினுடைய முன் னாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் பிற்பட்ட சமுதாயத்திற்கு, 1976 ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் அவர்கள் மத்திய அரசினுடைய பிரதமராக இருந்த நேரத்தில் அமைக்கப்பட்ட அந்த மண்டல் குழு, தன் அறிக்கையை 1980 ஆம் ஆண்டு, முன்னாள் பிரதமராக இருந்த அம்மையார் இந்திரா காந்தி அவர்களிடத்தில் கொடுத்தும் அது பார்த்து, படிக்கப்பட்டு அப்படியே வைக்கப்பட்டு இருந்தது. அதற்குப் பின்னால் நம்முடைய இளம் பிரதமராக இருந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களும், அதைப்பார்த்தும், அப்படியே பெட்டகத் திலே வைக்கப்பட்டு இருந்தது அது. தேசிய முன்னணி அரசு ஏற்பட்ட பின்னாலே தான், அதுவும் வி.பி. சிங் அவர்கள் நாட் டினுடைய பிரதமராக வந்த பின்னாலேதான் நாடாளுமன் றத்திலே மண்டல் குழு அறிக்கையை, அந்தப் பரிந்துரையை ஏற்று, பிற்பட்ட சமுதாயத்திற்கு 27 சதவீதம் ஒதுக்கீடுகளை அறிவித்தார்கள் என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனைப் பட்டியலிலே இடம் பெறக் கூடியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் இந்த நாட்டிலே ஏழை எளிய மக் களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக ஓயாமல் ஆற்றிய தொண்டின் அடிப்படையி லேதான்—நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இட ஒதுக்கீடுகளால் நாம் எந்த அளவிற்கு முன்னேறி இருக் கிறோமோ, அதுபோல், மத்திய அரசாங்கத்திலும் பெற வேண்டும் என்ற அந்த மண்டல் குழு பரிந்துரையை நாடா மன்றத்தில் முன்னாள் பிரதமராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு குறித்து உச்ச நீதிமன்றத்தில் இப்போது தடையைப் பெற் றிருக்கிறார்கள். உடனடியாக உச்ச நீதிமன்றத்திலே உள்ள அந்தத் தடையை அகற்றுவதற்கு நம்முடைய ஆளுநர் உரை யில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி இருப்பதை என்னைப் போன்ற மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள், மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்த வழியில், கலைஞர் அவர்களுடைய வழியைப் பின்பற்றி இந்த நாட்டிலே பொது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக் கிற நாங்கள் எல்லாம் உண்மையாகப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபி கேசன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிறபோது, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளுக்காக இந்த அரசு, என்ன என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி இங்கே சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்தில் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, ஆளுநர் அவர்களுடைய உரையில் இருக்கிற கருத்துக்கள் பாராட்டப்பட வேண்டிய ஒன்று என்று இங்கே சொல்கிறார்கள். எனக்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிற காரணத்தால், கிளாரிபிகேசன் என்ற முறையில் நான் கேட்க விரும்புகிறேன். மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த வேண்டும் என்பதற்காக வீர வரவேற்பைப் பெற்றவர், தமிழகத்தில், திரு. வி.பி. சிங் அவர்கள், ஆனால் மண்டல் கமிஷனுடைய அறிக்கையில் என்ன இட ஒதுக்கீடு இருக்கிறதோ, அப்படிப்பட்ட இட ஒதுக்கீடுகளை எல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலிருந்து நம்முடைய தமிழ்நாடு பெற்றுக் கொண்டே இருக்கிறது. அவைகளைப் பற்றிக்கூட இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி அனுபவித்துக் கொண்டு இருக்கிற நேரத்தில், மண்டல் கமிஷன் அறிக்கைகளை வரவேற்றுக் கொண்டு நாம் இங்கே இருந்து கொண்டிருக்கிறபோது,

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர், 3, 4 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து இருக்கிறீர்கள். ஆளுநர் இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் அல்ல. அவர்கள் பேசியதாகப் பத்திரிகையிலே வந்த பேட்டியை வைத்து '' Clarification '' என்ற முறையில் எழுப்பிப் பேசுவது நல்ல உதாரணத்திற்குரியது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சின்னசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு). This is not a point of Clarification. His Excellency is not a Member of this Assembly. You are referring only his report from the paper.

திரு. குமரி அனந்தன் : கவர்னர் உரை என்று இங்கே அறிவிக்கப்பட்டு படிக்கப்பட்டால், அது ஆளுகிறவருடைய உரை என்று தான் அர்த்தம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இலக்கியச் செல்வர் அவர்கள் ஒன்றைக் கிளப்பி இருக்கிறார் கள். ஆளுநர் அவர்களை ஒரு விவாதப் பொருளாக இந்த மன்றத்தில் எடுத்து வைப்பதை அனுமதிக்கக்கூடாது, இது ஒன்று.

11-30 மணி

இரண்டாவது, பத்திரிகையிலே வந்த செய்தியைத் திடீரென்று எழுப்பி அதன் மீது என்ன உங்கள் விளக்கம் என்று கேட்பதும் முறையாகாது. மூன்றாவதாக, அவர் பேசுகிற போது இதைப்பற்றிப் பேசியிருக்கலாம். மாண்புமிகு உறுப் பினர் பேசுகிறபோது மேதகு ஆளுநரே இப்படிப் பேசியிருக் கிறார் என்று அவரை இந்த மன்றத்திலே விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை இந்த அவைக் குறிப்பிலிருந்து எடுப் பது சாலச் சிறந்தது.

திரு. குமரி அனந்தன் : அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தால் வெளி நடப்புத்தான் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : You have got every rights to go out of the Assembly. ஆனால் அதே நேரத்தில் மேதகு ஆளுநர் அவர்களை பிரச்சினைக்குரிய ஒரு மனிதராகவோ அல்லது அவர் வெளியிலே கூறிய கருத்தை ஒரு பொருளாகவோ, அதை ஒரு மன்ற உறுப்பினர் பேசுகின்ற போது அவரிடமிருந்து அந்த 'Clarification' என்று சொல்கின்ற அந்த எதிர்பார்ப்பினை பார்ப்பது நல்லதல்ல.

திரு. குமரி அனந்தன் : தயவு செய்து எனக்கு ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள். நான் இங்கே ஆளுநரைக் குற்றஞ்சாட் டிப் பேசவில்லை. நான் பேசுகிறபோது சொன்னேன். ஆளுநர் உரை என்று சொல்வது ஆளுபவர் உரை. ஆனால் ஆளுநர் ஒரு இடத்திலே இப்படி உரைத்திருக்கிறார்களே அதனை இங்கே எடுத்துக்கொள்ள வேண்டும் **..............(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் பற்றி குறிப்பிடப்பட்ட அந்த வாசகங்களை சபைக் குறிப்பிலிருந்து விலக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்களைப் பற்றி திருவாளர் குமரி அனந்தன் அவர்கள் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடு கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டிற்கு தாடி வேண்டியதில்லை, ஆளுநர் இந்த மாநிலத்திற்கு வேண்டியதில்லை என்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே இந்த அவையில் ஆளுநரைப் பற்றிப் பேசியிருக்கும்பொழுது இந்த வாசகங்களை ஏன் நீக்கவேண்டும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆளுநர் மாநிலத்திற்குத் தேவையா, இல்லையா என்பது வேறு, அது ஒரு பிரச்சினை, அது வாதத்திற்குரிய ஒன்று. அதைப் பற்றி முடிவு எடுக்கவேண்டியது ஒன்று. ஆனால் இப்போது இருக்கிற அரசியலமைப்புப்படி ஆளுநர் ஒரு மாநிலத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கிறார். அரசியல் சட்டத்தினுடைய நியதி. எனவே, அதன் அடிப்படையில் தான் இப்போது நாம் செயலாற்றுகிறோம். அதன் அடிப்படையில் அதை விவாதப் பொருளாக ஆக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, ** இங்கே மன்றத்தில் விவாதத்தில் எடுத்துகொள்ளப் பட்டிருப்பது மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை. அந்த உரை என்பது தமிழக அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பு என்ற அடிப்படையில்தான, அரசியலமைப்புச் சட்டத்தின்படி தன்னுடைய கடமை என்ற முறையில் ஆளுநர் அவர்கள் இங்கே சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அது தமிழக அரசாங்கத்தினுடைய கொள்கை.

ஆளுநர் என்றால், incidentally he happens to be a Governor. His Excellency Thiru Surjit Singh Barnala incidentally happens to be the Governor of Tamil Nadu. But he may hold his personal view. The authenticity of the news......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்களே, ஒரு பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிட்ட பிறகு மேற்கொண்டு அதைப் பற்றிப் பேச வேண்டாம்.

திரு. எஸ். ஆர். இராதா : கருத்துக்களை எடுப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விதிகளைப் படிக்க வேண்டும். நான் வேண்டுமானால் படிக்கிறேன். (குறுக்கீடு).

''குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரைப் பற்றியோ அல்லது நீதிமன்றம் ஒன்றின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலோ பேசக்கூடாது. மேலும் விவாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் பெயரைப் பயன்படுத்துதல் கூடாது'' என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) அவர்கள் இங்கே பேசக் கூடாது என்று இருக்கும்பொழுது அவருடைய பேச்சிற்கு ''clarification'' கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். உங்களுக்கு உரிய மரியாதையை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்களே ஒரு தவறான முன்னோடித்தனமாக பேசிவிடக்கூடாது. (குறுக்கீடு)

அவருடைய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஏற்கெனவே உத்தரவிட்டாகிவிட்டது. அதைக் குறித்து நீங்கள் பேசக்கூடாது.

11-35 மணி

* **Thiru S. PETER ALPHONSE** : On a point of order.......

**Hon. DEPUTY SPEAKER** : Point of order relating to what?

**Thiru S. PETER ALPHONSE** : It relates to the procedure of the House. Rule 89 says that when, for the purpose of elucidating a point during a discussion, any Member has occasion to ask a question of another Member who is speaking, he may ask the question with the permission of the Speaker. There is also a rule which says that every speech must be strictly relevant to the matter before the House. Now, an Hon. Member is addressing the House and he has made some observations. We would like to get some clarifications on a particular point. The questions we want to put is connected with an issue before the House. அதற்குப் பிறகு துணைத் தலைவர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், "a Member, while speaking, must not reflect upon the conduct of the President or any Governor or any Court of Justice or use the Governor's or President's name for the purpose of influencing a debate" என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் நாங்கள் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றியோ, வேறு எதைப் பற்றியோ விவாதிக்கவில்லை. ** எது இந்த அரசினுடைய கருத்து என்பதை மட்டும் நான் அறிய விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* திரு. உ. ரா. வரதராசன் : இந்த மன்றத்திலே பேசுகிற உறுப்பினர்கள் பத்திரிகைச் செய்தி ஒன்றை எடுத்துக் காட்டுவதாக இருந்தால் அதனை அவைத் தலைவரிடம் காட்டி அனுமதி பெற்றுத்தான் இங்கே படிக்க வேண்டும் என்பது மரபு. அந்த வகையிலே அதை உங்களிடத்திலே குமரி அனந்தன் அவர்கள் காட்டியிருந்தால், ஆளுநர் உரையைப் பற்றி, வெளியே பேசியதைப்பற்றி இங்கே கருத்துக் கேட்கக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பு அளித்திருப்பீர்கள். ஆகவே இதில் எந்த விதமான நடவடிக்கையும் தொடர்வது முறையல்ல.

திரு. குமரி அனந்தன் : பத்திரிகையைக் காட்டவில்லை. செய்தியைச் சொன்னேன். அவ்வளவுதான்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : அதை நீக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கெனவே உத்திரவு இட்டு விட்டேன். திரு. பாண்டியன்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் தெரிவிக்கும்போது. .

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநரைப்பற்றி நாங்கள் எதுவுமே சொல்லவில்லை. நாங்கள் கேட்டது எல்லாம் இப்படி அவர்கள் கூறியிருக்கிறார்களே, அவர்களுடைய உரையைப் படிக்கிறீர்களே என்று, கனம் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப் போல விளக்கம் தான் கேட்டேன். நீங்கள் அதற்கு அது அவருடைய தனிப்பட்ட கருத்து, அரசினுடைய கருத்தல்ல என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட செய்திகள் பூராவையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவது சரியல்ல. அப்படியென்றால் நாங்கள் வெளியேற வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரைப் பற்றிப் பேசியதை மட்டும் நீக்கியிருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு இலக்கியச் செல்வர் அவர்களே, உங்கள் இலக்கு ஏதோ ஒன்றாக ஆகி விட்டது. அதன்படி நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். அதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : அவரைப்பற்றி நாங்கள் எதுவுமே சொல்லவில்லையே.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவர்னரைப் பற்றிப் பேசவே கூடாது என்பது நம்முடைய விதி.

திரு. குமரி அனந்தன் : அப்படி இல்லை. அப்படி என்றால் ஆளுநர் உரை என்றே சொல்லக் கூடாது. அதுவும் தப்பு. அப்படி நீக்குவதாக இருந்தால் நாங்கள் அவையை விட்டு வெளியேற வேண்டியிருக்கும், எனவே நான் கேட்டுக் கொள்கிறேன் நீங்கள் நீக்கக் கூடாது என்று. நீங்களும் இதிலே சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறீர்கள் எங்களைப் பற்றி. மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே எல்லாக் கருத்துக்களும் இருக்கட்டும். இது என்னுடைய வேண்டுகோள். அந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் நாங்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே நீக்கியது பற்றி நான் தீர்ப்பு அளிக்க முடியாது. நீக்கியது நீக்கியதுதான். (கூச்சல் குழப்பம்) சின்னசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம். எல்லோரும் உட்காருங்கள். இன்று மாலை பேப்பரில் உங்களுடைய பெயர் வரும், உட்காருங்கள்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய கொள்கையைத் தான் . . . . . . (குறுக்கீடுகள்,).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலமைச்சருடைய பேரவைச் செயலர்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை மீது அவைத் தலைவர் தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலே, அந்தத் தீர்ப்பையே விவாதப் பொருளாக்கி அதையே திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருப்பது இந்த அவையினுடைய மரபுக்கு முற்றும் முரணானது. அந்தத் தீர்ப்பில் அவர்களுக்கு ஏதாவது அதிருப்தி இருக்குமானால் அவர்கள் தாராளமாக வெளியேறிக் கொள்ளலாம். அதைத் தடுப்பதற்கு இந்த அவைக்கு உரிமை இல்லை. (கூச்சல்-குழப்பம்) ஆகவே அந்தத் தீர்ப்பை மீறுவது என்பது அவை மரபுக்கு முற்றும் முரணானது. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சின்னசாமி அவர்கள்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடு நாட்களாக தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளுடைய பெரும் பிரச்சினையாக இருந்த காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை தீர இந்த அரசு

[திரு. இரா. சின்னசாமி] [1991 சனவரி 21

எந்த அளவிற்குத் திறம்படச் செய்தது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப் பாகச்சொல்ல வேண்டுமென்றால் பல ஆண்டுகளாகக் காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் தஞ்சையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் நாம் நன்கு அறிவோம். தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்கள் உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடர்ந்து இருந்த நேரத்தில், கழக ஆட்சி ஏற்பட்டவுடன் (மணியடிக்கப்பெற்றது). (கூச்சல் குழப்பம்)

11–40 மணி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு மணித்துளி. ஆளுநர் அவர்கள் வெளி மாநிலத்திலே பேட்டி அளித்தது குறித்து, Clarification என்ற முறையில் திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்டார்கள். ஆளுநருடைய பேட்டியையோ வெளிமாநிலத்தில் பேசிய பேச்சையோ, அவர்களை ஒரு வாதத்திற்குரிய பொருளாகவோ, ஒரு பிரச்சினையாகவோ ஆக்கக்கூடாது என்ற விதி இருப்பதினால் ஆளுநர் பற்றிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிட்டிருக்கிறேன். திருப்பித்திருப்பி அந்தப் பொருளைக் குறித்து Point of order Point of Clarification என்று நீங்கள் பிரச்சினையை உண்டு பண்ணி னால் அது நல்லதல்ல. நீங்கள் அனைவருமே அவையினுடைய விதிமுறைகளை, நடவடிக்கைகளை நன்றாகத் தெரிந்தவர்கள் அதை திரு. குமரி அனந்தன் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார் கள். அவர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற வகையில் வெளிநடப்புச் செய்யலாம். அதையே ஒரு காரணமாக வைத்து.............. (குறுக்கீடு) திரு. அல்போன்ஸ் அவர்கள், Interpreation இதிலே செய்ய முடியாது. இது ரொம்பத் தெளிவாக இருக்கிறது. (கூச்சல், குழப்பம்) அவர்கள் ரொம்ப ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை எழுந்து நிற்பதில் காட்டுகிறார்கள். வேறு என்ன செய்ய முடியும்?

**Thiru. S. PETER ALPHONSE :** Give me a chance.

**Hon. Mr. DEPUTY SPEAKER :** What for? Why should I give you a chance? :

**Thiru S. PETER ALPHONSE :** You are here to hear us. Give me a chance.

**Hon. DEPUTY SPEAKER :** You have already stated your grievance. It has been disposed of by me. I have already given my Ruling on that point. You cannot go on raising the same question. I won't allow you.



1991 சனவரி 21]

**Thiru S. PETER ALPHONSE :** It is not correct. It is again Assembly Rules.

**Hon. DEPUTY SPEAKER :** You cannot dictate terms to me.

**Thiru S. PETER ALPHONSE :** I do not dictate. I only request.

**Hon. DEPUTY SPEAKER :** This is not a way of request. You are not requesting me. I have already given a Ruling. That cannot be set aside. My Ruling cannot be set aside by me. Mr. Pandian, you may raise your voice.

**திரு. பி. எச். பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்தத் தீர்ப்பை அளிக்கும்போது ஆளுநர் இந்த அவை யில் உறுப்பினராக இல்லை என்பதைச் சொன்னீர்கள். நீங்கள் தீர்ப்பை அளிக்கும்போது ஆளுநர், அவையில் உறுப்பினராக இல்லை என்று சொன்னீர்கள். அரசியல் சட்ட விளக்கம் 168—

"For every State there shall be a Legislature which shall consist of the Governor............" என்று கூறுகிறது.

Governor is part of the House. He is not an elected Member. Governor is a Member of the House and a part of the House here and the President is the part of the House in Parliament.

**Thiru P. SRINIVASAN :** Can he vote? Don't mislead.

**Thiru S. R. BALASUBRAMANIAM :** What he says is correct.

**Thiru N. GANAPATHY :** He cannot vote. How can be a part?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசப்படுகிற விவாதம் ஒவ்வொன் றும் இன்னொரு கருத்துக்கு மாறாகவே தொடர்ந்து அமைந்து வருகிறது. ஒன்று, மாநில ஆளுநர் சட்டமன்றத்தோடு இணைந் தவர் என்ற கருத்தில் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக் கிறது. உறுப்பினர் அல்ல என்று சொல்வது விவாதத்தில் இடம் பெறக் கூடாது என்ற கருத்தில் ஒரு கவர்னர் எப்போதுமே விவாதத்தில் இடம் பெற மாட்டார். He will not be Participant in the debate of the Legislature. ஆகவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னது, இங்கே பேசப்படுகிற வாதம் எதற்கும் ஆளுநர் பதில் சொல்கிற இடத்தில் இல்லை என்ற அந்தக் கருத்திலே அவர்கள் தெரிவித் தார்கள். எல்லாவற்றையும் விட ஆளுநர் உரை என்பது அரசியல் சட்டத்திலே இடம் பெற்ற ஒன்று. அது அரசாங்கத்தினுடைய கொள்கையை ஆளுநர் உரைப்பது. ஆளுநருடைய தனிப்பட்ட

கொள்கையை உரைப்பது அல்ல. எனவே அரசின் கொள்கையை ஆளுநர் ங்கே உரைப்பதற்கும் வெளியிலே அவர் பேசியதாகச் சொல்லப்படுவதற்கும், அது உண்மையா, அல்லவா, அது முழுவதும் சரியா, தவறா என்பது வேறு. சொல்லப்படுகிற கருத்தை இணைத்து இங்கே பேசப்படுகிற கருத்துக்குத் தொடர்புப் படுத்திப் பேசுவது இந்த அவை முறைகட்குச் சரியானது அல்ல. எனவே ஆளுநரைப் பற்றி இங்கே ஏற்பட்ட விவாதத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எந்த நோக்கத்தில் சொல்லப்பட்டன என்பதை அவை உறுப்பினர்கள் எண்ணிக் கொள்ள வேண்டுமே தவிர, வெறும் சட்டப் பிரச்சினையாக மட்டும் கருதக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஆளுநர் வெளியில் பேசியதாக, சட்டமன்றத்தில் எதையும் பேசுவதற்கு நமக்கு உரிமையில்லை.

*11-45 மணி*

சட்டமன்ற வாதத்தில் ஆளுநரைப் பற்றியோ, ஒரு நீதிபதியைப் பற்றியோ, தனிப்பட்ட தீர்மானம் ஏதாவது இருந்து, அந்த முறையில் வாதிக்கலாமே தவிர நம்முடைய பேச்சில் "as a reference" ஆளுநருடைய பேச்சு, கருத்து இடம் பெறுவது வழக்கம் அல்ல, மரபு அல்ல, அது மரபை மீறியது என்பதை நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உணருவார்கள். ஏன் என்றால் கவர்னரைப்பற்றி இங்கே பேசுவது இல்லை. கவர்னர் இங்கே அவர் உரையில் பேசியதைப் பற்றி இங்கே பேசலாமே தவிர வெளியே நடந்த நடவடிக்கை பற்றி, அவருடைய பேச்சு பற்றி, அது சரியா, தவறா என்று எனக்கு இப்போதும் தெரியாது. அது வேறு; அந்தக் கருத்து சொல்லப்பட்ட சூழ்நிலை என்ன என்பது எனக்குத் தெரியாது. அதை இங்கே குறிப்பிட்டுப் பேசுவது இடம் பெறக் கூடியது அல்ல. அது சட்டமன்ற மரபு அல்ல.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, முற்றிலும் மாறுபட்ட ஒரு கருத்தைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழக்கம் போல் நீங்கள்எப்போதும் சொல்வது தான்.

**திரு. இரா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ....

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** Point of order. நீங்கள் அனுமதித்த பின்னால் எனக்கு மைக் வராமல் அங்கே மைக் போவது என்பது அது நல்ல மரபு அல்ல. இந்த மரபு தொடர்ந்து நாட்களாக இங்கே பின்பற்றப்படுகிறது. இது தவறானது. அதாவது ஆளுநர் கான்டக்ட் பற்றி, ஆளுநர் வெளியே பேசியதைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்,When y.u say that he cannot send any message to the House and hence he is not in a position to defend himself in the House I would like to quote Art. I75(2) of the constitution



"175 (2)...The Governor may send messages to the House or Houses of the Legislature of the State whether with respect to a Bill then pending in the Legislature or otherwise and a House to which any message is so sent shall with all convenient despatch consider any matter required by the message to be taken into consideration."

Supposing the Governers conduct is discussec and the Governor is aggrieved he can definitely send a message saying that I am sending such and such message through a messenger. Thus he can participate. The explanation that the Governor cannot participate in the House is not correct.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு கன்டின்ஜென்சிக்காக, எதிர்பாராத ஒரு நிலை ஏற்பட்டால் அப்போது ஆளுநர் எதை வேண்டுமானாலும் அவர் இந்த அவைக்குத் தெரிவிக்கலாம், அது வேறு. இந்த அவை தனியாக எடுத்துக் கொண்டு கவர்னரைப் பற்றி அவர் வெளியே பேசியதை இங்கே பேசலாம் என்றால் அப்படிப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதற்குக் காரணம், கவர்னர் இந்த அவையில் ஒரு participant ஆக முடியாது. சட்டப்படி அவர் இந்த அவையோடு இணைந்த ஒருவராகக் கருதப்படுவது என்பது அரசியல் இலக்கணம். ஆனால் participant என்று சொல்லக் கூடிய நிலையில் ஆளுநர் இல்லை என்பதோடு கூட ஆளுநரைப்பற்றி இங்கே விவாதிப்பது இல்லை என்பதுமரபு. ஆளுநர் உரையிலே இங்கே பேசப்பட்டதைப் பற்றிப் பேசுவது, அரசாங்கத்தினுடைய கொள்கையை ஆளுநர் பேசுவது என்ற அந்த முறையிலே தவிர, he is no. an individual அவர் ஒரு தனிப்பட்டவராகக் கருதப்படவில்லை. (மணியடிக்கப் பெற்றது).

**திரு. இரா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை நடுவர் மன்றத்திற்கு இன்றைய தினம் சென்றிருக்கிறது என்றால் அது இந்த அரசின் சாதனை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்களின் வாடிக் கொண்டிருக்கிற அந்த நெல் பயிருக்கு உடனடியாக, மத்தியில் இருக்கின்ற நம்முடைய பிரதமர் திரு. சந்திரசேகர்

அவர்கள் கர்நாடக மாநிலத்தோடு தொடர்பு கொண்டு, உடனடியாக அந்த வாடுகின்ற பயிர்களைக் காப்பாற்றுவதற்குத் தண்ணீர் விடுவதற்கு முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கழக ஆட்சி ஏற்பட்ட பின்னால் இந்த 2 ஆண்டுகளில் கூட்டுறவுக் கடன்கள் ஏறத்தாழ 615 கோடி ரூபாய் அளவில் தள்ளுபடியை (மணியடிக்கப் பெற்றது) (கூச்சல்-குழப்பம்).

**திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் :** " "Procedure of the House" பற்றி நான் சொல்லுகிறேன்.

*11.50–மணி*

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, நாங்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் கேட்டதை மரபுகள் என்றும், சட்ட நுணுக்கங்கள் என்றும் நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் எங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்களுடைய ஒழுங்குப் பிரச்சினைகளை நீங்கள் இங்கே அனுமதிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் நாங்கள் தவறாக எதுவும் சொன்னதாகக் கருதவில்லை. ஆதலால், அவை, அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்றே விரும்புகிறோம். அவைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீங்கள் நீக்குவீர்களேயானால், நாங்கள் நல்ல நோக்கத்தோடு சொன்ன கருத்து, விளக்கத்திற்காக் கேட்கப் பட்ட கேள்வி, ஆளுநர் உரை என்ற வகையிலேதான் ஆளுநரை சொல்லப்பட்டதே தவிர அவருடைய நடத்தையைப் பற்றியோ, அவருடைய செயலைப் பற்றியோ எந்தக் குறையும் சொல்லாத காரணத்தினாலே, செய்யாத குற்றத்தைச் செய்ததாகச் சொல்கிற காரணத்தினாலே, எங்களுடைய கருத்துக்கு மதிப்பளிக்காத காரணத்தாலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரைக் குறித்து, அவர் பேசியதாக ஒரு கருத்தை இந்த அவையில், வெளியில் பேசியதாகச் சொன்ன ஒரு கருத்தை இங்கே சொல்வது இந்த அவையினுடைய முறைக்கு ஏற்றதல்ல. எனவே அதை நீக்குவது, ஆளுநரைப் பற்றி தாங்கள் பேசியதை எடுப்பது எங்களுக்கு விருப்பம் இல்லாத காரணத்தால் என்பது முறையன்று. இது அரசியல் சட்ட முறைப்படி



ஏற்றுக் கொள்ளப்படுகிற கருத்தே தவிர, தனிப்பட்ட முறையில், ஆளுங்கட்சி; எதிர்க்கட்சி என்ற முறையில் உள்ள கருத்தல்ல. அது அரசியல் சட்ட மரபு. எனவே, அந்த மரபை மதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் சொல்லப்படுகிற கருத்துக்கள் அத்தனையும் பதிவாக்க வேண்டுமென்பது தான் சட்ட விதி. பொதுவாக.. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதை சபைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டுமென்று திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சொன்னார்கள். இப்போது, இந்த மன்றத்திலே பேசப்படுவதெல்லாம் சபைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கேட்கிறார்கள். நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது நாங்கள் பேசியதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று சொன்னீர்களா? காலையிலே ஒன்றைச் சொல்லிவிட்டு, இப்போது, பேசுவதெல்லாம் சபைக் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்; இது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆரம்பிக்கும்போது அந்தக் கருத்தை மாற்றுகின்ற வகையிலே, தொடர்புடைய பேச்சைப் பேசிக் கொண்டிருக்கும்போது, காலையிலே நடந்த சம்பவத்தைச் சொல்லி, இதற்கு முன்னால் ஆட்சியிலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், எதிர்க்கட்சியாக இருந்தபோது நீங்கள் என்னென்ன செய்தீர்களோ, அதையெல்லாம் நாங்கள் செய்ய முடியாது. பொதுவாக, அப்படிப்பட்ட நடைமுறைகளை அனுமதிப்பது சரியல்ல. சில கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் அந்தக் கருத்துக்கள் பதிவாக வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அக்கருத்துக்கள் வலியுறுத்திச் சொல்லப்படுகின்றனவே தவிர, அந்தக் கருத்தையே நீங்கள் எடுத்து விடுவீர்களானால், எதிர்க்கட்சி என்ற முறையிலே சொல்லப்படுகிற எந்தக் கருத்தையும் அனுமதிக்காத நிலை ஏற்படும். அதிலே நான் உரிமை மீறல் பிரச்சினையே கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பாக மேலும் விவாதம் வேண்டாம். திரு. சின்னசாமி தொடரலாம். (குறுக்கீடு) இனிமேல் இதையெல்லாம் பேசக்கூடாது. ஏற்கெனவே முடிந்து விட்டது. இதே வேலையாக இருக்கக் கூடாது.

திரு. சின்னசாமி, நீங்கள் பேசுங்கள். காலையிலேயிருந்து இது
தானா வேலை? (குறுக்கீடு) திரு. சின்னசாமி, நீங்கள் தொடர்ந்து
பேசுங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கழக ஆட்சி ஏற்பட்ட பின்னால் விவசாயப் பெருங்
குடி மக்களுடைய பிரச்சினைகளையெல்லாம் எப்படி இந்த அரசு
அணுகியது என்பதை இந்த நாடு அறியும். குறிப்பாகச் சொல்
லப்போனால், முன்னால் இருந்த அரசு விவசாயிகளுடைய 67
கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்து விட்டு,
அந்தப் பணத்தைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தாமலேயே
போனது என்பதை இந்த நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள்
நன்றாக அறிவார்கள். அதையும் இந்த அரசுதான் கூட்டுறவுக்
கடன்களை, முன்பிருந்த அரசு நீக்கியதை அரசு நிதியிலிருந்து
கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தியது என்பதையும் நான் இந்த
நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குப்
பின்னாலே டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக்
கொண்டு 39 கோடி ரூபாய்க்கான விவசாயிகளுடைய, சிறு விவ
சாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்தார்கள். அதற்குப்
பின்னாலே நம்முடைய தேசிய முன்னணி அரசு மத்தியிலே
அமைந்த பின்னால் பிரதமர் வி. பி. சிங் அவர்களுடைய பெரு
முயற்சியோடு, கழக ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில்..

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்.
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் பேசுகிறபோது பிரதமர் வி. பி. சிங் என்று
குறிப்பிட்டார். முன்னாள் பிரதமர் வி. பி. சிங் என்று குறிப்
பிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையின் ஒவ்
வொரு சொல்லையும் மிகுந்த கவனத்தோடும், பொறுப்போடும்
கவனித்துக்கொண்டிருப்பதற்காக உங்களுக்கு நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசு அறிவித்த சலுகைகளையொட்டி ஏறத்
தாழ 508 கோடி ரூபாய் வரையில் விவசாயிகளுக்கும் கைவினை
ஞர்களுக்கும் கூட்டுறவு வங்கிகளின், குறிப்பாக தேசிய மயமாக்
கப்பட்ட வங்கிகளுடைய கடன்களையும் தள்ளுபடி செய்ததால்
விவசாயப் பெருங்குடி மக்கள் ஏறத்தாழ 20 இலட்சம் பேருக்கு
மேலாக அதிலே பயனடைந்து இன்றைக்கு விவசாயப் பெருங்குடி
மக்களெல்லாம் இந்த அரசையும், நம்முடைய தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டிக் கொண்டு இருக்
கிறார்கள் என்றால் அது மிகையாகாது.



11-55 மணி

அதேபோலத்தான், இன்னும் பல்வேறு திட்டங்கள் பற்றி,
தேர்தல் அறிக்கையிலே ''சொல்வதைச் செய்வோம்'' செய்வதைச்
சொல்வோம்''. என்று சொல்லியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா
அவர்கள் சொன்னார்கள், ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
காண்போம்'' என்று. பேரறிஞர் அண்ணாவினுடைய அந்தக்
குரலுக்கு ஏற்பத்தான், அந்தச் சொல்லுக்கு ஏற்பத்தான் கூட்
டுறவுக் கடைகளில், நியாயவிலைக் கடைகளில், 1967ஆம் ஆண்
டாக இருந்தாலும் சரி, உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட காலத்
திலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே, கழக
ஆட்சி அமைந்து ஒரு மாபெரும் பசுமைப் புரட்சியை உண்டாக்கி,
உணவு உற்பத்தியைப் பெருக்கி, இந்த நாட்டு மக்களுக்கு, ஏழை
எளிய மக்களுக்கு உணவு வழங்கிய அரசு பேரறிஞர் அண்ணா,
கலைஞருடைய அரசு. அதற்குப் பின்னாலே, 13 ஆண்டுக்காவ
மாக இருந்த ஆட்சி, அந்த ஆட்சி போன பின்னால், திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பின்னாலே, கலைஞர் அவர்கள்
வருகின்ற நேரத்தில், களஞ்சியம் காலியாக இருந்தது. மீண்டும்
ஒரு பசுமைப் புரட்சியை இந்த நாட்டிலே உருவாக்கி, கடந்த
ஆண்டு வரலாறு காணாத அளவிற்குத் தஞ்சை மாவட்டத்தில்,
62 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்கிற சாதனையைப் புரிந்து
மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு இன்றைக்கு நியாய
விலைக் கடைகளில் ஏழை எளிய மக்களுக்கு அரிசி வழங்குகின்ற
சூழ்நிலையைத் தமிழ்நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்
கிறார்கள்.

குறிப்பாகச் சொல்லப்போனால், கொஞ்சம் சற்று விலை
அதிகம் என்று எதிர்க்கட்சியிலே இருக்கின்ற பல நண்பர்கள்
பல நேரங்களில் இதே மாமன்றத்தில் எடுத்துச் சொன்னதன்
அடிப்படையில்தான், ஆளுங்கட்சியிலும் சொன்ன காரணத்தாலே
தான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே
எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு மதிப்பளிக்கக்கூடியவர்
கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையிலே
பேச விரும்புகின்றவர்களுக்கு வேறே இடமெல்லாம் நிறைய இருக்
கின்றன. அவையிலே யாரும் பேசக் கூடாது என்பதை உறுப்
பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. சின்னசாமி : அப்படிப்பட்ட முதல்வர் அவர்
கள் இன்றைய தினம் நியாய விலைக் கடைகளில் வழங்குகின்ற
அரிசியினுடைய விலையைக் குறைத்து, மோட்டா ரக அரிசி
2 ரூபாய் அளவிலும், சன்ன ரக அரிசி விலை 2 ரூபாய் 50 காசு
என்ற அளவிற்கு, ஏறத்தாழ 256 கோடி ரூபாய் இழப்பை இந்த
அரசு ஏற்றுக்கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளித்துக்
கொண்டிருக்கின்ற அரசுதான் இந்த அரசு என்பதை நான் இந்த
மாமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் இருக்கின்ற ஊழியர் களுக்கு ஊதியம் குறைவாக இருக்கிறது என்ற குறைபாடு இருந் தது. 250 ரூபாய் என்று இருந்ததை 100 ரூபாய் உயர்த்தி, அதற்குப் பின்னாலே வருகின்ற 1—2—1991ஆம் தேதியிலிருந்து 500 ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு ஊதியம் வழங்குகின்ற அந்த உத்தரவையும் ஆளுநர் உரையிலே முதல்வர் அவர்கள் இந்த அரசின் சார்பிலே குறிப்பிட்டிருப்பதை வரவேற்க, பாராட்ட, நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் என்ற அடிப்படையில் உலக வங்கியினுடைய நிதி உதவியைப் பெற்று ஏறத்தாழ 310 கோடி ரூபாய்க்கு, தமிழ்நாட்டிலே 7, 8 மாவட்டங்களில் விதை உற்பத்தி, நீர் வரத்து மேம்பாட்டுப் பணிகள், காடு வளர்ப்பு, கிராமப்புறக் குடிநீர்த் திட்டம், கிரா மப்புறச் சாலைகள் இவைகளெல்லாம் நல்ல முறையிலே செய் யப்படுவதற்காக உலக வங்கியினிடத்திலே 310 கோடி ரூபாயைப் பெற்று, இந்த ஏழை எளிய மக்களுக்குத் தேவையான காரியங் களைச் செய்யக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோலத்தான், கிராம அதிகாரிகள்—முன்னாள் கிராம அதிகாரிகளாக இருந்தவர்களை இரவோடு இரவாக அவர்க ளுடைய புத்தகங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டு, வேலை இல்லை என்று சொன்ன ஆட்சியை நாம் கண்கூடாகக் கண் டோம். ஆனால், கலைஞர் அவர்கள், அந்த வயதானவர்கள் அதையே நம்பி அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்த நிலையை உணர்ந்துதான் அந்தக் கிராம அலுவலர்களை யெல்லாம் மீண்டும் பணியிலே அமர்த்துகின்ற உத்தரவை வழங்கி யிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிடர்களைப் பொறுத்தவரையில், ஆதி திராவிடர் குடியிருப்புகள் 1974ஆம் ஆண்டுச் சட்டமன்றத்திலே நாங்களெல் லாம் இருந்த நேரத்தில் கலைஞர் அவர்கள் ஒரு அற்புதமான திட்டத்தைத் தீட்டி, கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தர வேண்டு மென்று முயற்சியெடுத்து 30,000 வீடுகளைக் கட்டி முடிக்கும் நேரத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கடந்த 13, 14 ஆண்டுக் காலங்களில் ஆதி திராவிட மக்களைப் பற்றி எண்ணி பார்த்தார்களா என்றால், பார்த்தார்கள்: எப்படி என்றால் எல்லாம் ஓட்டு வீடுகள்—அவர்கள் மழைக் காலங்களிலே அந்த இடங்களிலே இருக்க முடியாத ஒரு சூழ்நிலை.

**12-00 மணி**

பல கிராமங்களில், பல வீடுகளில், அந்த ஓட்டு வீடுகளிலே குடி யிருக்க முடியாத சூழ்நிலை, நான் தொகுதியிலே போய்ப் பார்க் கின்ற நேரத்தில், பல வீடுகளிலே அவர்கள் குடியே இல்லாமல்



இருந்தார்கள். அந்த நிலையை மாற்றி, கலைஞர் அவர்கள் இந்த இரண்டாண்டுக் காலத்தில், கடந்த ஆண்டு 42 ஆயிரம் வீடுகளும், இந்த ஆண்டு 47 ஆயிரம் வீடுகளும், மீண்டும் ஏப்ர லுக்குள்ளாக 11 ஆயிரம் வீடுகளும், ஏறத்தாழ ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி, ஆதி திராவிட மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இன்றைய தினம் பணிகளை மேற்கொண்டுள்ளார் கள் என்பதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அதேபோலத்தான் கான்கிரீட் வீடுகளோடு மட்டுமல்ல: (மணியடிக்கப் பெற்றது)........நிறைய இருக்கிறது. தயவு செய்து—...என்னுடைய நேரத்தை நிறையப் பேர் எடுத்துக் கொண்டார்கள். பேரவைத் தலைவர் அப்போது இல்லை. ஆகையினால், கொஞ்சம் நேரம் அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவையிலே இல்லா விட்டாலும், என்னுடைய அறையிலே இருந்தேன்.

**திரு. இரா. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அடுத்து, ஊரக அடிப்படை வசதிகள். குறிப் பாகச் சொல்லப்போனால், அரசின் சார்பிலே நல்ல பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத கிராமங்கள் எதுவாக இருந்தாலும், பள் ளிக் கட்டிடங்களைக் கட்டித் தருகின்ற ஒரு சிறப்பான திட் டத்தை, ஒரு முறைப்படுத்தி, ஒரு வகைப்படுத்தி, அதற்கு ஓர் அளவுகோல் நிர்ணயித்து, இந்த, இந்தக் காலத்திற்குள் இவைகள் எல்லாம் முடிவடைய வேண்டுமென்று இந்த உணர்வோடு, இந்த ஆட்சி செயல்படுவதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டு. குறிப்பாக, புதிய பள்ளிக் கட்டிடங்கள்.

அதே நேரத்தில், வெள்ளையடிக்காத பள்ளிக்கூடங்கள் கிராமத்திலே சொல்வார்கள், சாவடி போல என்று அவ்வாறு காட்சி தருகின்ற பாடசாலைகள்—அதிலே படிக்கின்ற குழந்தை களினுடைய நிலை என்ன? மழை, காற்றிலே எப்பொழுது இடிந்து விழுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த நிலைமை, கலைஞர் அவர்களுடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, அந்தப் பள்ளிகளிலெல்லாம் சீரமைக்கப்படுகின்ற அந்த நிலைமையை இன்றைக்குக் கிராமங்களிலே போய்ப் பார்க்கின்றபோது—எவ் வாறு காட்சியளிக்கின்றன என்ற நிலையைப் பார்க்கின்றபோது —நாமெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

அதேபோலத்தான் கிராமப்புறச் சாலைகள். கிராமப்புறச் சாலைகள் இந்த இரண்டாண்டுகளில் எந்த அளவுக்கு வேகமாக செப்பனிடப்படுகின்றன, செய்யப்படுகின்றன என்றால் அந்த சாலைகளிலே நல்ல பஸ் வசதிகளை ஏற்பாடு செய்து, கிராம மக்கள் எல்லாம் நகரங்களை நோக்கி வருவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கின்ற அரசுதான் இந்த அரசு. அந்த பஸ்களிலே

பள்ளிக் குழந்தைகள் எட்டாவது வகுப்பு வரையில், இலவசமாக இன்றைய தினம் செல்வதற்கு அனுமதிக்கின்ற சூழ்நிலையை தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் வரவேற்றிருக்கிறார்கள்.

குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், ஏறத்தாழ கடந்த ஆண்டு 10 ஆயிரம் குடியிருப்புகளுக்கு, ஆழ்துளைக் கிணறுகள் அல்லது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஐந்தாயிரம் கிராமங்களைத் தேர்வு செய்து, அதுவும் இந்த ஆண்டிலேயே அந்தப் பணி முடிக்கப்படுமென்று அரசினுடைய சார்பிலே ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் இன்றைய தினம், இந்த அரசு பொறுப்பேற்ற 45 நாட்களில்—நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினையை, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் 45 நாட்களிலேயே—20 விழுக்காடு வன்னியர் மற்றும் சீர்மரபினருக்கு ஒதுக்கீடு செய்து, அந்தப் பெருங்குடி மக்களுடைய மாபெரும் வாழ்த்தைப் பெற்றிருக்கிறவர்தான் கலைஞர் அவர்கள். அதேபோல், ஆதி திராவிடர்களைப் போல வன்னியர் சீர்மரபினருக்கும், மிகவும் பிற்பட்ட சமுதாயத்தினருக்கும் இலவசமாக வீட்டு மனைகள், பட்டாக்கள், வீடுகள் கட்டித் தருகின்றத் திட்டம் ஆகியவற்றைக் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் போது, குறிப்பாகச் சொல்லப்போனால், மாவட்டத்திற்கு ஒரு அலுவலர், மிகவும் பிற்பட்டோர் நல அலுவலர் என்றும், தாலுக்கா அளவிலே தனி தாசில்தார்களையும், நியமித்தால்தான், ஏழைத் தொழிலாளிகள், கூலி வேலை செய்கிற தொழிலாளிகள், நடுத்தர மக்கள் ஆகியோருக்கு அந்த வாய்ப்பு இல்லாத குறையை நாம் போக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே என்னுடைய தாழ்மையான கருத்தாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான், இன்றைய தினம் பெண்களுக்காக பல வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, 30 சதவிகிதம் பெண்களுக்காகவும் ஒதுக்கி, குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் 1ஆவது வகுப்பிலேயிருந்து, 5ஆவது வகுப்பு வரையில், தாய்மார்களையே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தையும், திருமண உதவிக்காக ரூ. 5 ஆயிரமும், மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூ. 200–ம், இப்படிப் பல்வேறு திட்டங்களையும் மகளிருக்காகச் செய்து வருகின்ற தலைவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பெண்களுக்கு இன்றைக்கு சொத்து உரிமையிலே சம பங்கு உண்டு என்ற சட்டத்தை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றி அதை அமல்படுத்துகிற அரசும் இந்த அரசுதான் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





12-05 மணி

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தொழிற்சாலை சாலைகள் வளர்ந்தால்தான் நாட்டின் வளம் பெருகும், அரசின் வருவாய் பெருகும், கிராமப்புறங்களில் இருக்கிற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை நம்மால் உருவாக்க முடியும் என்ற உணர்வின் அடிப்படையில்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் 107 வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்களாகவும், 30 வட்டங்களை மிகவும் பின்தங்கிய வட்டங்களாகவும் அறிவித்து பல தொழிற்சாலைகளை மாதம் ஒன்று என்ற விகிதத்தில் துவக்கி இன்றைக்குத் தொழில் துறையில் முன்னோடியாக விளங்குகிற அரசும் இந்த அரசுதான் என்பதை நான் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அரோமேட்டிக் தொழிற்சாலை வருவதற்கு இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும், மத்தியில் இருக்கின்ற நம்முடைய பிரதமர் மாண்புமிகு திரு. சந்திரசேகர் அவர்களை வற்புறுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்களுக்கும் மிச்சம் வையுங்கள், பேசுவதற்கு.

திரு. இரா. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் முழுவதையும் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளில் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும், நம்முடைய பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்களும் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு இலவச மின்சாரம் வழங் கப்படுகிறது. ஒரு பைசாவுக்குத்தான் கட்டை வண்டிப் போராட்டம் நடத்தினார் நாயுடு. அவ்வளவு பெரிய போராட் டம் எல்லாம் நடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு யாரும் கேட்காமலேயே, 12 இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எல்லாம் இலவச மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியா வில் எந்த மாநிலமும் இதைச் செய்யவில்லை. அதைச் சிறப் பாகச் செய்திருப்பது நம்முடைய அரசுதான் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதே போல் மக்கள் நலப் பணியாளர்கள், நகர நலப் பணியாளர்கள் ஆகியோரை நியமித்திருக்கிறோம். அவர்களை பகுதி நேர ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் என்பது என்னு டைய கோரிக்கை. அதேபோல் என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் தர்மபுரியில் பெண்களுக்குக் கல்லூரி

வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கை. இந்த நிதியாண் டிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களும், பேராசிரியர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் இதை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். இப்போது கடுமையான வறட்சி இருக்கிறது. எனவே, அதற்கும் கொஞ்சம் நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல் கிறார்களே, சட்டம்-ஒழுங்கு எங்கே கெட்டுவிட்டது என்று நான் பார்க்கிறேன். எங்கே கெட்டிருக்கிறது? நான் தர்மபுரி ஜில்லாவைச் சேர்ந்தவன். பக்கத்திலே ஆந்திரா. அதற்குப் பக்கத்திலே கர்நாடகா. ஆந்திராவின் நிலைமை என்ன? ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையே கடத்திக்கொண்டு போகிறார்கள். அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களையும் கடத்திக்கொண்டு போகிறார்கள். அப்புறம், பஞ்சாயத்து சமிதி தலைவர்களை யும், ஜில்லா போர்டு தலைவர்களையும் கடத்திக் கொண்டு போகிறார்கள். நிர்வாகமே இல்லாத சூழ்நிலை ஆந்திராவில். ஹைதராபாத்தில் இனக்கலவரம். செகந்திராபாத்தில் துப்பாக்கிச் சூடு; ஊரடங்கு உத்தரவு. அங்கெல்லாம் சட்டம்-ஒழுங்கு எப்படி இருக்கிறது என்று, சட்டம்-ஒழுங்கு இங்கே கெட்டு விட்டது என்று சொல்கிறவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் போலீஸ், ஊரடங்கு உத்தரவு இவ்வளவும் இருக்கிறது—ஆந்திராவில். இதைத் தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் பக்கத்தில் இருக்கின்ற கர்நாடகத்தில் என்ன நிலைமை? அது எங்களுக்கு பார்டர். எனவே பக்கத்திலே என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். தாவண்கரே, குல்பர்கா போன்ற இடங்களில் கடுமையான துப்பாக்கிச் சூடு, இனக்கலவரம், ஊரடங்கு உத்தரவு. இந்த நிலைமை கர்நாடக மாநிலத்தில். உத்திரப்பிரதேசத்தில் சொல்ல வேண் டியதே இல்லை. அங்கேயும் இனக் கலவரம், ஊரடங்கு உத்தரவு பத்து மாவட்டங்களில்,. ஆக்ரா, அக்கொலியா, ஜஹாங்கீர்பூர், கான்பூர், அலிகார், மீரட், வாரணாசி, ராஞ்சி போன்ற பகுதி களில் எல்லாம் ஊரடங்கு உத்தரவு, துப்பாக்கிச் சூடு. எவ் வளவு பேர்கள் செத்தார்கள் என்பதே தெரியவில்லை. சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று இங்கே சொல்லிக் கொண்டிருப்ப வர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்த இடங்களில் எல்லாம் சட்டம்-ஒழுங்கு இருக்கிறதா? குஜராத்தில் என்ன நிலைமை குஜராத்தில் ஊரடங்கு உத்தரவு, ஆமதாபாத்திலும் பரோடாவிலும் துப்பாக்கிச்சூடு, இறந்தவர்களின் எண்ணி கைக்குக் கணக்கே இல்லை. எனவே, தயவுசெய்து இவை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இராஜஸ்தானில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி நடக்கிறது. ஜெய்ப்பூரில் கலவரம் நடக்க வில்லையா? பஞ்சாபில் என்ன நிலைமை? காஷ்மீரில் என்ன நிலைமை? அஸ்ஸாமிலே என்ன நிலைமை? அங்கெல்லாம் மாபெரும் கலவரங்கள் நடக்கின்றன. அப்படி இருக்க, தமிழ் நாட்டிலே மட்டும் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டதா? சட்டம்-ஒழுங்கைத் திறமையாக நிர்வகிப்பது தமிழ்நாட்டு மாநில காவல் துறை அதிகாரிகள்தான். இந்தியாவிலேயே நம்முடைய காவல்துறை அதிகாரிகளுக்கு இணையானவர்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்று என்னால் சொல்ல முடியும். ஒரு சின்ன உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

12-10 மணி

திஹார் சிறையிலே கைதிகள் பூராவும் வெளியிலே வர வேண்டும் என்று சொன்னார்சள். அவர்களை அடக்குவ தற்கே, நம் போலீஸ் தான் போய் அடக்கி கைதிகளை உள்ளே வைத்து இன்றைக்கு அந்த ஜெயில் ஜெயிலாக இருக்கின்றது. திஹார் சிறைக் கைதிகளை அடக்கியதே தமிழ்நாடு போலீஸ் தான். இதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு நம்முடைய காவல்துறை சிறப்பாகச் செயல்படுகிறது. அப்படி இருக்கின்ற நிலையிலே தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு கெட்டுப் போயிற்று, கெட்டுப் போயிற்று, என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி அவர்கள் முடிக்க வேண்டும். நேரம் ஆகிவிட்டது. மற்ற உறுப்பினர்கள் பேச வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

திரு. இரா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்ச நேரத்தில் முடித்துவிடுகிறேன். 5 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, விடுதலைப் புலிகள் முகாம், விடுதலைப் புலிகள் முகாம் என்று சொன்னார்கள். இங்கே பத்திரிகை நிருபர்களை தமிழ்நாட்டில் இருப்பவர்களை எல்லாம் பஸ் வைத்துக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். கடலோரப் பகுதி பூராவும் காட்டினார்கள். அங்கே ஏதாவது விடுதலைப் புலிகள் முகாம்கள் இருக்கிறதா என்றால் இல்லை. அப்படி எந்தப் பத்திரிகையாவது எழுதியுள்ளதா? இல்லை. இந்த ஆட்சி பேரிலே ஏதாவது சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லுகின்றார்கள். இங்கு விடுதலைப் புலிகள் முகாம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

அப்புறம் இன்னொன்று சொன்னார்கள். உல்பா என்று சொன்னார்கள். சி.எம்.சி. ஆஸ்பத்திரியிலே யாரோ ஒரு நோயாளி அஸ்ஸாமிலே இருந்து வந்து ஆஸ்பத்திரியிலே

படுத்து இருந்தான். அவன் '' உல்பா '' என்று சொல்லிவிட்டார்கள். '' உல்பா '' என்பது யாருக்குமே தெரியாது. இப்போது 10, 15 நாட்களாக '' உல்பா '' இருப்பதாக சொல்கிறார்கள். இந்த '' உல்பா '' என்ற விஷயம் என்னவென்றால் பிரதமர் சந்திரசேகர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அவரை நிருபர்கள் பேட்டி கண்டார்கள். அஸ்ஸாமில் ராஷ்டிரபதி ஆட்சி–குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு அந்த '' உல்பா '' பூராவையும் அடக்கிவிட்டோம் என்று இவர்களுக்கு பதிலை பிரதமரே சொல்லிவிட்டார்கள்—இப்போது கிடையாது. '' உல்பா '' எல்லோரையும் பிடித்தாகிவிட்டது என்று சொல்லிவிட்டார்.

விடுதலைப் புலிகள் பற்றிக் கேட்டார்கள். அதை தமிழ்நாடு முதலமைச்சர் பார்த்துக்கொள்வார்கள். அது தமிழ்நாட்டுப் பிரச்சினை என்று அங்கே சொல்லிவிட்டார்கள். யார்? பிரதமர் சந்திரசேகர் அவர்களே சொல்லிவிட்ட பின்னாலே இங்கே ஏன் சட்டம்-ஒழுங்கு பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்? இன்னொன்று சொல்கிறேன். நமது முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவரெட்டி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப நேரம் ஆகிவிட்டது. மற்ற உறுப்பினர்கள் வாய்ப்புப் பெறமுடியாமல் போய்விடும்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு வந்தார்கள். இங்கே ஒரு விழாவிலே பேசும்போது என்ன சொன்னார்கள் என்றால், வெளிச்சத்திலே இருக்கின்ற தமிழகத்தை இருட்டறையாக்காதீர்கள் என்று சொன்னார்கள்.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. நீலம் சஞ்சிவ ரெட்டி அவர்கள் சொன்னார்கள். அவர் வகிக்காத பதவியே இல்லை. அவர் அரசியல் வாழ்வே எவ்வளவு காலம் இருந்தது என்று நமக்கு எல்லோருக்கும் தெரியும். அவர் சொல்கின்றார். வெளிச்சத்திலே இருக்கின்ற தமிழகத்தை இருட்டறை ஆக்காதீர்கள் எனகின்றார்கள்.

அப்புறம் நம்முடைய கேரளத்தினுடைய சுலைமான் சேட் இந்திய முஸ்லீம் லீக்கினுடைய தலைவர், எம். பி. சொல்கிறார்கள். வகுப்பு, இனம், சட்டம்-ஒழுங்கு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. இந்திய ஒருமைப்பாடு சீர்குலைவு மறற மாநிலங்களிலே இருக்கிறது. தமிழ் மாநிலத்திலேதான் அமைதி நிலவுகிறது என்று சுலைமான் சேட் சொல்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்றவர்கள் சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போயிற்று கெட்டுப் போயிற்று என்று சொல்கிறார்கள். யார் சொல்கிறார்கள் என்றால் நாடாறு மாதம், காடு ஆறு மாதம் என்று இருப்பவர்கள் சட்டம்-



ஒழுங்கு கெட்டுப்போயிற்று என்று சொல்கிறார்கள். அப்புறம் அறையில் இருந்து அரசியல் நடத்துகிறார்கள். அவர்கள் சட்டம்-ஒழுங்கு கெட்டுப் போயிற்று என்று சொல்கின்றார்கள். இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் இப்படி எழுந்துகொள்கின்றார்கள். நாடு ஆறு மாதம், காடு ஆறு மாதம் என்று இருப்பவர்கள் இந்த ஆட்சியைப்பற்றிக் குறை சொல்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதிலே என்ன தவறு? அவர் கட்சியைச் சொன்னாரா? தலைவருடைய பெயரைச் சொன்னாரா? இதுகூடப் பேசக் கூடாது என்றால்........(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். திரு. சின்னசாமி, பேசி முடியுங்கள்.

திரு. இரா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவர்கள் ஆட்சியைக் கலைக்கவேண்டுமென்று சொல்கின்றார்கள். நாங்கள் கலைக்கக்கூடாது என்று சொல்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கக்கூடாது என்று சொல்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது. பெரியவர் தீட்சிதர் கலைக்கக்கூடாது என்று சொல்கிறார். திரு. லத்தீப் கலைக்கக்கூடாது என்று சொல்கின்றார்கள். இவர்கள் கலைக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். நாங்கள் கலைக்கக்கூடாது என்று சொல்கிறோம். இதற்கு யார் முடிவு கட்ட வேண்டும் என்று சொன்னால் பிரதமர் தான் சொல்லவேண்டும். அவர் சொல்லிவிட்டார். ஆட்சியைக் கலைக்கிறதில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது முடிந்து போன விவகாரம் தானே, இதற்கும் பின்னாலே ஏன் பேசிக் கொண்டிருக்க வேண்டும்? இன்னொருவர் சொல்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடுங்கள். திரு. சின்னசாமி பேச்சை முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. இரா. சின்னசாமி : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவரைப் பற்றி, முதலமைச்சர் அவர்களைப்பற்றிச் சொன்னபோது இந்த அவையில் நாங்கள் அவ்வளவு பேரும் உட்கார்ந்து கொண்டிருந்தோம் அல்லவா? தேசத் துரோகி என்று சொன்னார்கள் அல்லவா? அதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டுதானே இருந்தோம்? இந்த அவையிலே அத்தனை பேரும் இருந்தோம். அவர் ஒன்றும் சொல்லவில்லை. பெயரைச் சொல்லவில்லை. ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லாததிலே என்ன தவறு? அதை எதிர்ப்பது என்றால் என்ன அர்த்தம்? தேசத் துரோகி என்று சொன்னதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டு இருந்தோமே. என்ன வந்துவிட்டது? தேச விரோதி என்று சொன்னதைக்கூட—இந்த அவையிலே உள்ள ஆளுங்கட்சி மெஜாரிட்டி தானே—அத்தனை பேரும் கேட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டு இருந்தோமே? இதைக்கூட விவாதிப்பதற்கு இல்லை என்றால் இந்த இடத்திலே எதற்காக நாங்கள் உட்கார்ந்துகொண்டு இருக்க வேண்டும்? தேச விரோதி என்று சொன்னதையே கேட்டுக்கொண்டிருந்தோமே. . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள்.

12-15 மணி

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் யாருடைய பெயரையோ, கட்சியையோ சொல்லாமல் பொதுவாக இப்படிப்பட்டவர்கள் எல்லாம் மக்கள் நம்பிக்கையைப் பெற்று, நல்ல அரசியல்வாதிகளுடைய நல்லெண்ணங்களைப் பெற்று நடைபெறுகிற இந்த ஆட்சியைக் கலைக்கச் சொல்கிறார்கள், அவர்கள் எல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்று கோடிட்டுக் காண்பித்தார்கள். அதற்கு உடனே ஆத்திரப்பட்டு அவர்கள் எழுந்து பேசுகிறார்கள் என்றால் 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்று காட்டுவதுபோலத்தான் இருக்கிறது. நான் சொல்கிறேன் அ.தி.மு.க. வினுடைய தலைவி என்பவர் தான் தமிழ்நாட்டில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து அதற்குமேல் அமைச்சர் விளக்க வேண்டாம். (குறுக்கீடு) முதலில் திரு. இராதா உட்பட மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். ஒவ்வொரு பிரச்சினைக்கும் எழுந்து எழுந்து பேசுவது, சத்தம் போட்டுக் கொண்டு இருப்பது என்று இருந்தால் அவையை நடத்த நான் வேறுவிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டி யிருக்கும். பொதுவாகப் பேசுவதற்கு இங்கே ஒவ்வொரு உறுப் பினருக்கும் வாய்ப்பு உண்டு. யாரையும் பெயர் குறிப்பிடாமல் பொதுவாகப் பேசும்போது நேரடியாக எதிர்ப்புத் தெரிவித்து



சத்தம் போடுவது என்று தொடர்ந்து கடைப்பிடித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைச் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன கருத்தை முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதை மறுக்க எங்களுக்கு உரிமை உண்டு. ஆளும் கட்சியினர் மறுக்கக் கூடாது என்று எந்த விதி முறையும் இல்லை. அதுகுறித்து முடிவு தெரிய வேண்டும்.

(திரு. எஸ். ஆர். இராதா இருக்கையிலிருந்து எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். விளக்கம் ஒன்றும் வேண்டாம். விவகாரத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அடுத்து, திரு. சிங்காரம், வேறு யாரும் பேசக் கூடாது. இனி யாராவது குறுக்கிட்டுப் பேசினால் கண்டிப்பாக வெளியேற்றி விடுவேன். தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டேன். திரு இராதா உட்காருங்கள்.

*__திரு. இரா. சிங்காரம் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் எனக்கு பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்களாவது நன்றியைத் தெரிவிப்பதற்கு என்னுடைய நன்றி, (சிரிப்பு).

**திரு. இரா. சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசும்போது காவல் துறையினர் சரியாகச் செயல்படுகிறார்கள் என்று சொன்னார்கள். போலீசைப் பொறுத்தவரை, நம்முடைய காவல் துறை சிறந்த துறை என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதில் ஆட்சேபணையில்லை, மறுக்கவில்லை. ஆனால் காவல் துறையை, கையை கட்டிப் போட்டுக்கொண்டு இயங்கவிடாமல் தடுப்பது யார் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

உதாரணத்திற்கு அறந்தாங்கிக்குப் பக்கத்தில் அரசர்குளம் என்ற ஊர். அங்கே இரண்டு முஸ்லீம் மக்களைக் கொன்றார்கள். அதற்கான வழக்குப் போடப்பட்டு, விசாரணையும் தொடங்கப்பட்டது. மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன. குற்றவாளியைக் கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க

முற்படப்போகிற அதேநேரத்தில், குற்றவாளியைக் கைது செய்ய
இருந்த சம்பந்தப்பட்ட டி.எஸ்.பி. ஓயர்லஸ் மூலம் மாற்றப்
பட்டிருக்கிறார். இன்ஸ்பெக்டர் ஒயர்லஸ் மூலம் மாற்றப்பட்டி
ருக்கிறார். சம்பந்தப்பட்ட எஸ்.ஐ.யும் ஒயர்லஸ் மூலம் மாற்றப்
பட்டிருக்கிறார். ஒயர்லஸ் மூலம் அவர்களை மாற்றியது யார்?
அங்கே கொலைக் குற்றவாளியைக் கைது செய்கிற நேரத்தில்,
குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நேரத்தில் சம்பந்தப்பட்டவர்
கள் கையைக் கட்டினால் எப்படிச் சட்டம் ஒழுங்கு நடக்கும்?
எப்படி ஐயா, சட்டம் ஒழுங்கு கெடாமல் இருக்கும்? நான்
கேட்கிறேன், கொலை நடக்காதா? அதைப்போல இன்னும்
பல்லாயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடக்கின்றன.
விடுதலைப் புலிகள் பற்றிச் சொன்னார்கள். விடுதலைப் புலிகள்
நடமாட்டம் அதிகமாக இருக்கிற பகுதியில் வாழ்ந்துகொண்டி
ருப்பவன் நான், என்னுடைய பேராவூரணிப் பகுதியில்....

12-20 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் ஒருவன்.

திரு. இரா. சிங்காரம் : நானும் ஒருவன், அருமை நண்பர்
திரு. இராமசாமியும் ஒருவர், அருமை நண்பர் திரு. பி.வி.
இராஜேந்திரனும் ஒருவர். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே
கஷ்டமான நிலைமை இருப்பதை மாண்புமிகு சபாநாயகர்
அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிங்காரம், திசை திருப்
னால் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.

திரு. இரா. சிங்காரம் : அந்தத் தொகுதியிலே இருக்கிறீர்கள்
என்று சொல்கிறீர்கள். நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை
நான் சொன்னேன், விடுதலைப் புலிகள் அதிகமாக நடமாட்டம்
இருக்கிற பகுதியில் வாழ்பவர்களில் நானும் ஒருவன் என்று
சொன்னேன். நீங்கள், 'நானும் ஒருவன்' என்று சொன்னீர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால் என்ன?

திரு. இரா. சிங்காரம் : அதை ஒன்றும் நான் கிரிட்டிகல்
ஆக்கவில்லை. நான் தப்பாகச் சொல்லவில்லை. அது காமன்.
பேராவூரணிப் பகுதியிலே விடுதலைப் புலிகள் நடமாட்டம்
மிக அதிகமான அளவுக்கு இருக்கிறது என்பதையும், பட்டுக்
கோட்டைப் பகுதி, வேதாரண்யம் பகுதி, இராமநாதபுரம்
பகுதி, நம்முடைய திரு. இராமசாமி அவர்களுடைய பகுதி
போன்ற பகுதிகளில் எல்லாம்....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நான் சொல்ல
லாம் அல்லவா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் இராம
நாதபுரம் பகுதியைச் சேர்ந்தவன். அதனாலே தவறாகச்
சொல்ல வேண்டாம்.

திரு. இரா. சிங்காரம் : நான் தவறாகச் சொல்லவில்லை.
இங்கே விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது
ஆனால் விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள் என்று
கேட்டார்கள். அவருக்குச் சொல்கிறேன், நண்பர்களுக்குச்
சொல்கிறேன், அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன்,
விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தாலே பல்வேறு விதமான
கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில்
விடுதலைப் புலிகள் இல்லவே இல்லை, இல்லவே இல்லை என்று
முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர
வர்களே, விடுதலைப் புலிகள் முகாம்கள் இருக்கின்றன என்று
சொல்லப்பட்ட போது, முகாம்கள் எங்கேயும் கிடையாது என்று
சொல்லப்பட்டது. ஏற்கனவே இருந்தது உண்மை அப்படி
இருந்ததை அரசு சார்பிலே ஆதரித்திருக்கிறார்கள் அது ஒரு
காலகட்டம், இப்போது முகாம் என்று சொல்லப்படுகிற நிலை
யில், விடுதலைப் புலிகள் எந்த இடத்திலும் இருக்க அனுமதிக்கப்
படவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் என்று யாராவது
இருப்பார்களேயானால், விடுதலைப் போராளிகள் என்று யாரா
வது இருப்பார்களேயானால் அவர்களைக் கட்டுப்படுத்துகிற
அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து உரிய
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முகாம்கள் என்பதையும்,
விடுதலைப் புலிகள் என்ற தனிப்பட்டவர்கள் என்பதையும்
குழப்பிக்கொள்ளும் வகையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள்
இருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, முகாம்கள் இல்லை என்று சொன்னார்கள். விடுதலைப்
புலிகள் இல்லை என்று சொன்னார்கள். ஒன்றை ஆதாரத்தோடு
சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : விடுதலைப் புலிகள்
தங்கள் நாட்டிற்கு வெளியிலே இருக்கிறபோது, அவர்கள்
விடுதலைப் புலிகளாகக் கருதப்படும் நிலை இங்கேயில்லை.
அவர்கள் அகதிகள் என்ற பெயரிலோ வேறு பெயரிலோ யார்
யாரோ, எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை
எல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது
விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும் கட்டுப்
படுத்தி எந்த வகையிலே அவர்கள் வைக்கப்பட வேண்டுமோ,
அந்த வகையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த விவரங்கள்
பத்திரிகையிலே வந்திருக்கின்றன. வேறு விவரங்கள் தேவை
யில்லை.

திரு. இரா. சிங்காரம் : அப்படியானால் திருச்சியிலே
மாவட்ட தி.மு.க. செயலாளர் செல்வராஜ் அவர்கள் வீட்டுக்கு
அருகிலே, ஒரு இல்லத்திலே 11 பேர்களைக் கைது செய்தார்
களே, அது முகாம் இல்லையா? அது நடமாட்டம் இல்லையா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுக்கு, முகாம் என்பதற்கும், விடுதலைப் புலிகள்
வந்து இங்கே தங்கியிருக்கும் குடியிருப்புகளுக்கும் வேற்றுமை
தெரியவில்லை என்று கருதுகிறேன். முகாம் என்பது பயிற்சி
முதலான வசதிகளை வழங்கி, போர்க் கருவிகள்கூட சில கால
கட்டத்திலே அவர்கட்கு வழங்கப்பட்டு, அவர்கள் ஊக்கப்படுத்
படுத்தப்படுகிற நிலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்
துள்ள அந்தக் கட்சியைச் சார்ந்தவர் பிரதமராக இருந்தபோது
நடைபெற்ற காரியம் அது. அந்தக் காலகட்டத்திலே அது
சரியான கொள்கையாகக்கூட இருக்கலாம். அது வேறு.
கொள்கை அடிப்படையிலே அதை மறுத்து, ஏன் செய்தார்கள்
என்று கேட்பதாகக் கருதலாகாது. கொள்கை அடிப்படையிலே
ஒரு காலகட்டத்திலே ஆளுங்கட்சியாக மத்தியிலே இருந்த ஒரு
கட்சியே அதற்குப் பெரும் ஆதரவு வழங்கியது. வெவ்வேறு
விதமாக வழங்கியது. அதற்குப் பிறகு வெவ்வேறுவிதமான
விளைவுகள் ஏற்பட்டன. அண்மைக் காலத்தில் வேண்டுமென்றே
இந்த அரசு மீது சொல்லப்பட்ட பழி, விடுதலைப் புலிகள்
முகாம்களை இந்த அரசு ஆதரித்தது என்பதுதான். விடுதலைப்
புலிகள் முகாம்கள் இல்லை என்று சொன்னதை நிலைநாட்ட
இந்த அரசால் முடியும். ஆனால் முகாம் இல்லாமல் தனிப்பட்ட
வர்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் இப்போது வைக்கப்
பட்டுள்ள இடத்தைப் போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

12-25 மணி

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு அதிகமான
அளவு எல்லா உதவிகளையும் செய்தது பேரவைத் .தலைவர்
அவர்களுக்கு அப்போதே தெரியும்; மறுக்கவில்லை. ஆனால்
தமிழகத்தில் இருக்கின்ற தமிழ் மக்களுடைய உணர்வுகளை
எடுத்துக் காட்டவும், இலங்கையில் இருக்கின்ற இலங்கைத்
தமிழர்களைப் பாதுகாக்கவும், ஈழத்தை வென்று வரவும்,
தமிழர்களுடைய உணர்வுகள், உங்களுடைய உணர்வுகள், எங்
களுடைய உணர்வுகள்—அத்தனையையும் இணைத்து அங்கே
வென்று வா மகனே என்றுதான் அனுப்பினோம் இங்கே கொன்று
வா மகனே என்றா அனுப்பினோம்? நான் கேட்கிறேன், ஒரு
போலீஸ் இன்ஸ்பெக்டரை செக் போஸ்ட்டிலே சுட்டார்கள்.
யார் சுட்டது? ஏன் சுட்டார்கள்? எதற்காகச் சுட்டார்கள்?
விடுதலைப் புலிகள் ஏன் வந்தார்கள்? அவர்கள் மீது நடவடிக்கை
எடுக்கிறீர்களா?





மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடவடிக்கை என்றால் என்ன
என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு அரசாங்கத்தினுடைய
காவல் துறையைச் சார்ந்தவர்கள் தங்களையே அழித்தபோது
எதுவும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்களா? ஒருவேளை
அது வெற்றிகரமாக அமையவில்லை என்று கருதப்படுமானால்
அதற்கு அவர்களுடைய நிலை காரணம். அப்போது யார், யார்
கையில் என்னென்ன ஆயுதங்கள் இருந்தன என்பது, மற்ற
விவரங்கள் எல்லாம் தனியாக அவைபற்றி வேண்டுமானால்
தெரிந்து கொள்ளலாம். எனவே அவரவருக்குக் கிடைத்த
வாய்ப்பு என்ற முறையில் காவல் துறை வேண்டுமானால்
ஏமாந்து இருக்கலாம். அது அரசாங்கத்திற்குத் தெரியாமல்
போய் இருக்கலாம்; அதுவே குற்றச்சாட்டாக ஆகமுடியாது.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படியானால், சென்னையில், இங்கே இருக்கிற
பகுதியிலே பத்மநாபனை 10 பேர் சுட்டுக் கொன்றார்களே.
அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா ?
யாரையாவது கைது செய்து இருக்கிறீர்களா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,
அப்படிப்பட்ட விவாதத்திலே ஈடுபட வேண்டுமானால்,
யார் இங்கே சுட்டுக்கொல்வதற்காக வருகை தந்தார்கள்
என்பதோ, எங்கிருந்து வந்தார்கள் என்பதோ அரசாங்கத்
துக்குத் தெரியாது. இன்னும் சொல்லப்போனால் யார் யார்
எங்கெங்கே இருந்தார்கள் என்ற நிலையும் தெரியாது. அப்படி
ஒரு நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் முதலமைச்சர்
அவர்கள்—ஈழத் தமிழர்கள் மீது அனுதாபம் இருந்தாலும் கூட,
ஒரு சாரார், இன்னொரு சாரார் என்று பகை கொண்டு
ஒருவரையொருவர் அழிக்கிற காரியத்தில் ஈடுபடக் கூடாது
என்பதற்காகத்தான்—தமிழகத்தில் கப்பலிலே வந்த ஈழப்
போராளிகளில் ஒரு சாராரை இங்கே குடி இருக்க வைக்க
வேண்டாம் ; இங்கே தங்க வைக்க வேண்டாம் ; உயிருக்கு
ஆபத்து வரும் என்று தெரிந்து முன்கூட்டியே எச்சரித்து வேறு
மாநிலத்துக்கு அனுப்பினார்கள். மத்திய அரசு ஏற்றுக்கொண்டு
அவர்களை வேறு மாநிலத்தில் தங்கச் செய்தது. ஆனால்
பத்மநாபனே அரசாங்கத்துக்குத் தெரிவிக்காமலேயே இங்கே
தமிழகத்துக்கு வந்து, ஓர் இடத்திலே தங்கி இருந்ததும்கூட,
அரசுக்கே தெரியாத நிலையில் தங்கி இருந்தார்கள். அது
அவர்களுடைய எதிராளிகளுக்குத் தெரிந்த காரணத்தால்
ஏற்பட்ட ஒரு விபரீதமான நிலை. அரசுக்குத் தெரியக்
கூடிய வாய்ப்பே இல்லாமல் நடைபெற்று இருக்கிற அந்தக்
காரியத்திற்கு அரசாங்கத்தின் மீது பொறுப்பைச் சுமத்தி,
குற்றச்சாட்டுச் சொல்வது பொருத்தம் இல்லாதது.

[1991 சனவரி 21

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய பேராவூரணித் தொகுதியில் இரண்
டாம் புலிக்காடு அருகில் பத்மநாபனைக் கொலை செய்தவர்
கள் தங்கி இருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,
தெரிந்த உறுப்பினர் முதலமைச்சருக்குத் தெரிவித்து இருக்கலாம்.
இதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு தெரிவிக்காமல்
இருப்பது பெரிய குற்றம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
கப்பலிலே வந்த அகதிகள் தமிழ் மண்ணிலே இறங்காமல்
ஒரிசாவுக்கு அனுப்பப்பட்டார்கள். அதற்கான காரணங்களை
அவை முன்னவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால்
நாம் எல்லாம் அவர்களைத் தமிழ் மண்ணிலே இறக்காமல்
ஒரிசாவுக்கு அனுப்பி இருக்கக் கூடாது. நம்மை நம்பி வந்தவர்களை
......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாதம்,
நம்முடைய சிங்காரம் செய்தி தெரிந்தும் தெரிவிக்காதது பற்றி''
பேராசிரியர் சொன்னார். நேரடியாக அதற்குப் பதில்
சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, விளக்க உரை
எல்லாம் அப்புறம் கடைசியாக நீங்கள் ஒரு முறை ஆற்றப்
போகிறீர்கள்.

திரு. குமரி அனந்தன் : ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திசை
திருப்ப வேண்டாம். இப்போது திரு. சிங்காரம், 'என்னுடைய
தொகுதியில் அவர்கள் தங்கி இருந்தார்கள்' என்று சொன்
னார்கள். 'நீங்கள் ஏன் தெரிவிக்கவில்லை? தெரிவிக்காதது
குற்றம்.' என்று அவை முன்னவர் பேராசிரியர் சொன்னார்.
அதற்கு என்ன பதில்?

திரு. குமரி அனந்தன் : அதே நேரத்தில், அவை முன்னவர்
சொன்னதின் தொடர்பை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமானதைமட்டும்
சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : அதற்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று, அதற்கு வாருங்
கள் அல்லது அவரைச் சொல்ல விடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்ன சொன்னேன் என்றால்,
சந்திரகாசனையும், பாலசிங்கத்தையும் வெளிநாட்டுக்கு அனுப்பிய
போது நாம் எல்லாம் சேர்ந்து திருப்பி இங்கே கொண்டு



[1991 சனவரி 21] [திரு. குமரி அனந்தன்]

வந்தோம். அந்த உணர்வுகளை ஏற்படுத்திய மண்ணில்,
திரு. சிங்காரம் சொன்னது என்னவென்றால், பத்திரிகையில்
வந்த செய்தியைத் தான், அவர்கள் சுப்பையா பிள்ளைத்
தோட்டத்தில் தங்கி இருந்தார்கள்; கோழிக் கறி சாப்பிட்டார்
கள்: அங்கே ஓடினார்கள்; இங்கே தங்கினார்கள் என்ற
பரபரப்பான செய்தி மட்டும் அல்லாது, சில நேரங்களில் அவர்
களைக் கைது செய்துவிட்டோம்; பிடித்துவிட்டோம் என்று
குறிப்பாகச் சொல்லவில்லை என்பதைத்தான் இப்பவும் அவர்
சொல்லுகிறார்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, விவரங்கள் பத்திரிகையில் வருகிறபோது அந்த
விவரங்களிலிருந்து தப்புவதற்கு இப்படிப்பட்ட போராளிகள்
அத்தனை பேருக்கும் தெரியும். வெளிப்படையான செய்தி
களுக்கு அவர்கள் இரையாகிவிடமாட்டார்கள். ஆகவே
அதே முறையில் அரசாங்கத்துக்குத் தெரிந்தால் தான். இரக
சியச் செய்தி கிடைத்தால் தான் நடவடிக்கை எடுக்க முடியும்.
பத்திரிகையில் வரும் போது ஏதேனும் ஒரு வகையில்
அரசாங்கத்தால் தேடப்படக்கூடியவர்கள் தொடர்ந்து அதே
இடத்தில் அரசின் காவல் துறையின் பிடியில் சிக்கிக்கொள்
வதற்குக் காத்துக் கொண்டு இருக்கமாட்டார்கள். ஆகவே
விபரங்கள் பல ரகசியமாகத் தெரிந்து, தெரிந்த ரகசியத்தை
அவர்கள் தெரிவிக்காமல் இருந்தால்தான் குற்றமே தவிர
பத்திரிகைச் செய்திகளைப் பேசினால் எப்போதும் பேசிக்
கொண்டே இருக்கலாம். செய்திகள் வெளியில் பரவுவதற்கு
முன்பே எவ்வளவோ மாற்றங்கள் நடந்துவிடும்.

12–30 மணி

திரு. இரா. சிங்காரம் : நான் சொல்வதைத் தயவுசெய்து
கேட்டுவிட்டுப் பிறகு நீங்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.
நான் ஆதாரப்பூர்வமாகச் சொல்கிறேன். சின்னமனையில்
விடுதலைப் புலிகள் தான் தங்கியிருந்தார்கள். அங்கே
சுப்பையா பிள்ளைத் தோட்டத்தில் தங்கியிருந்தார்கள்.
அவர் ஆர். டி.ஓ.விடம் சொன்னார். போலீசிடம் சொல்லிப்
பார்த்தார். முதலமைச்சர் அவர்களுக்குக் கூடத் தெரிவித்
தார்கள். தந்தி கொடுத்தார்கள். எந்த நடவடிக்கையும்
எடுக்கவில்லை. போலீசும் நடவடிக்கை எடுக்கவில்லை;
ஆர்.டி.ஓ.வும் ஏன் என்று கேட்கவில்லை. பின்னர் அவர்கள்,
சுப்பையா பிள்ளையைப் பார்த்து சுட்டுவிடுவோம் என்று
மிரட்டினார்கள். ஆகவே அவர் வீட்டுக்குப் போய்விட்டார்.
எல்லாம் வெளியில் வந்திருக்கிறது. பிறகு இரண்டாம்
புலிக்காட்டில், செக்போஸ்டில் போலீஸ் அவர்களைக் கைது
செய்தது. பிடித்துவிட்டார்கள். கோர்ட்டில் ஆஜர் செய்
தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால்,
உன்கிட்டே பேசத் தயாராக இல்லை. கோபால்சாமியைக்
கூப்பிடு, முதல்வர் கலைஞருக்குக் கனெக்ஷன் கொடு நாங்கள்
பேசிக் கொள்கிறோம் என்றார்கள். அதோடு மட்டுமல்ல,

ஒரு பாஸைக் காட்டினார்கள். ஆனால் அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் போல்டாகப் போலீசார் பிடித்துவிட்டார்கள். கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எழுதப்பட்ட ஆவணத்தின் வாயிலான செய்தியா, அல்லது பத்திரிகைச் செய்தியா ? (குறுக்கீடு). எழுதப்பட்ட ஆவணம்தானா ?

திரு. இரா. சிங்காரம் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால், பேசுவதற்கு முன்பு ஏன் என்னிடம் காட்டவில்லை ? (கூச்சல்-குழப்பம்) அது எழுதப்பட்ட ஆவணமா ? இல்லை செய்தித்தாள்களில் வந்த செய்தியா என்று கேட்டேன். எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னார். இது தொடர்பான. . . . . . . (குறுக்கீடு). . . . . . . எழுதப்பட்ட ஆவணம் என்றால் பேரவைத் தலைவருடைய இசைவைப் பெற்றிருக்கவேண்டும். அவரிடம் காட்டியிருக்கவேண்டும். அவரிடம் தெரிவிக்காமல் பேசக் கூடாது.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதப்பட்ட ஆவணம் அல்ல. (கூச்சல்) நான் சொன்னது. விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டது, ஆதாரபூர்வமாக(குறுக்கீடு).கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது தொடர்பாக. . . . . .

4. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. இரா. சிங்காரம் மீது—விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் பற்றி முரண்பட்ட தகவல்கள் தெரிவித்துள்ளது குறித்து.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவைத் தலைவராகிய தாங்கள் கேட்ட நேரத்தில், 'எழுதப்பட்ட ஆவணம் என்று இந்த மன்றத்தில் அவர் உரைத்தார். மீண்டும் அது எழுதப்பட்ட ஆவணம அல்லவென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, முதலில் மாண்புமிகு பேரவைத் தலைவர் கேட்டபோது 'எழுதப்பட்ட ஆவணம்' என்றார் மாண்புமிகு உறுப்பினர். இப்போது அது எழுதப்பட்ட ஆவணம்தானா என்று தெரியாது என்கிறார் இப்படி, உண்மைக்கு மாறான தகவலை இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் தெரிவித்த காரணத்தால், அவர்மீது உரிமைப் பிரச்சினையை நான் கொண்டு வருகிறேன்". அதை ஏற்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் சிங்காரம் அவர்கள் குறிப்பிடும்போது ஒன்றைச் சொன்னார். கடிதம் எழுதினோம். தந்தி கொடுத்தோம், முதலமைச்சருக்கு எல்லாம் தகவல் அனுப்பினோம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படி அனுப்பியதற்கான நகல்கள் அவர்களிடம் இருக்கும். அந்த நகல்களை உங்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கவேண்டும். அதை நீங்கள் பெற்று இந்தச் சபைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சுப்பையா பிள்ளை அவர்கள் எனக்குக் கடிதம் எழுதவும் இல்லை. தந்தி கொடுக்கவும் இல்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தங்களிடத்தில் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். உண்மைக்கு மாறான ஒரு தகவலை ஒரு நொடியில் மாற்றிச் சொல்கிறார். ஆகையினால் அவர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு மன்றத் தலைவருடைய தீர்ப்பு எனக்குத் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றிக் கவனித்து நான் பின்னால் சொல்கிறேன். திரு. லத்தீப் அவர்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் பேசும்போது விடுதலைப் புலிகளையும் அவர்கள் சொன்ன கருத்துக்களையும் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், கோபால்சாமி அவர்களிடமும் தெரிவிப்பதாகச் சொன்னதாகவும் சொன்னார்கள். அதற்கான ஆதாரங்களை அவர்கள் சொல்கிறார்களா ? இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்கவேண்டும்.

12—35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லும்போது ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தார். இது பத்திரிகையில் வந்த செய்திகளின் அடிப்படையிலா அல்லது எழுத்து ஆவணமா என்று கேட்டேன். அவர் எழுத்து ஆவணம் என்று சொன்னார். அடுத்த கேள்வி எழுதப்பட்ட ஆவணம் என்றால் பேரவைத் தலைவரிடம் காட்டாமல் சொல்லக் கூடாது, அவர் ஒப்புதல் பெறாமல் சொல்லக்கூடாது என்றுதான் நான் சொன்னேன். உடனே அவர் சொன்னார், இது எழுதப்பட்ட ஆவணம் அல்ல என்று. பக்கத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரே இதற்கு ஒரு தீர்வைக் கண்டுவிடுவது நல்லது. செய்திகள் முன்னுக்குப் பின் முரணாக வராமல் நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அதற்கு அரசு பதில் சொல்லும் எனக்கு அதில் பொறுப்பு இல்லை. . .,

திரு. இரா. சிங்காரம் : தலைவர் அவர்களே, இரண்டாம் புலிக்காடு செக் போஸ்ட்டில் பிடித்த அந்த விடுதலைப் புலிகள் கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டு, ரெக்கார்டு..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். நீங்கள் எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னீர்களா ?

திரு. இரா. சிங்காரம : நான்]அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) சொன்னார், சொன்னார். நானே அதைக் கேட்டேனே..................

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தன்னிடத்தில் இருப்பதாகச் சொல்லவில்லை........ (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால் மேற்கோள் காட்டும்போது காட்டி விட்டுப் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். வேறு யாரும் பேசக்கூடாது. எழுதப்பட்ட ஆவணம் என்று உறுப்பினர் சொல்லிவிட்டார் என்றால் எழுதப்பட்ட ஆவணத்தை பற்றி எந்தச் செய்தியைச் சொன்னாலும் என்னிடம் காட்டி விட்டுப் பேசவேண்டும். அதற்கு என்ன பதில்?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர் தன்னிடம் இருப்பதாகச் சொல்லவில்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏன் விளக்கம் சொல்கிறீர்கள் ? அவர் சொல்லட்டும். எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால் நீங்கள் எதை வைத்துக்கொண்டு பேசுவீர்கள்? (குறுக்கீடு) எழுதப்பட்ட ஆவணம் என்று சொல்லிவிட்டால் ஆவணத்தை என்னிடம் காட்ட வேண்டும். நீங்கள் அதை வைத்துக்கொண்டு இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அதற்கு எனக்குப் பதில் சொல்ல வேண்டும். அதற்குப் பதில் சொல்லாமல் அடுத்த செய்திக்குப் போக முடியாது.

திரு. இரா. சிங்காரம் : எழுதப்பட்ட ஆவணம் என்றால் கோர்ட்டில் எழுதப்பட்ட ஆவணம். கோர்ட்டில் பார்ட்டியைப் புரடியூஸ் பண்ணியிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் அடுத்த பிரச்சினை வரும். நீதிமன்றத்தில் பிரச்சினை இருந்தால் அதை நீங்கள் இங்கே பேசவே கூடாது. அடுத்த விதியை மீறுவது இது,





(குறுக்கீடு) அந்த வளர்ப்பெல்லாம் வேண்டாம். எனக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் முரண்பாடாகச் சொல்லியிருந்தால், முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லி அதைத் தவிர்த்து விடுங்கள். அவ்வளவுதான். எழுதப்பட்ட ஆவணம் என்று சொல்லிவிட்டு, அங்கே சொன்னேன், இங்கே சொன்னேன் என்று சொல்லக் கூடாது.

திரு. இரா. சிங்காரம் : எழுதப்பட்டதா, படாததா என்று தெரியாது...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
நீதிமன்றத்தில் அப்படி ஒரு ஆவணம் இருந்தால் இங்கு பேசும்
போது அதன் நகலையாவது வைத்துக்கொண்டு பேசவேண்டும்..
அதையாவது தங்களிடத்தில் காட்டியிருக்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுமட்டுமல்லாமல், நீதி
மன்றத்தில் பிரச்சினை வந்து விட்டாலே அதுபற்றி இங்கே
பேசவே கூடாது. உறுப்பினர் இப்போது நீதிமன்றத்தில் இருக்
கிறது என்று சொல்கிறார். அதுவே அடுத்த விதி மீறல்.
அப்புறம் இன்னும் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும்.
எனவே, உறுப்பினர் அவர்கள் இனிமேல் இதுமாதிரி தவறு
களைச் செய்யாமல் தொடர்ந்து பேசுமாறு அனுமதிக்கிறேன்.
(குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
நீதி மன்றத்தில் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொன்ன
தாக ஒவ்வொன்றாகச் சொல்லி வந்தார்.................
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு யாரும் பேசக் கூடாது.

திரு. குமரி அனந்தன் : குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம்
கேட்ட கேள்விகளையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்
னிடம் இந்த மாதிரி பாஸ் இருக்கிறதென்று சொன்னதையும்
அவர் சொல்கிறபோது நீதிமன்றத்திலே பதிவு செய்யப்பட்டி
ருக்கிற காரணத்தால் அது ஆவணம் என்று சொன்னார் (குறுக்
கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு ஒரு முடிவு கட்டிவிட்டுத்தான் அடுத்த பேச்சு..........

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப்
ஆர்டர். திரு. சிங்காரம் அவர்கள் சொன்னது சரியல்ல என்று
அவருக்கே தெரிந்திருந்தாலும், அவருக்கு நீங்கள் ஒரு சந்தர்ப்பம்
கொடுத்து அவர் என்ன சொன்னார் என்பதை மறுபடியும்

சொல்லும்படியாகக் கேட்டு, அவர் ஒரு விஷயத்தைச் சொன்னார். அதோடு அந்தப் பிரச்சினை முடிந்தது என்று நீங்கள் திருப்தியடைந்து மறுபடியும் அவரைப் பேசச் சொன்னீர்கள். அதற்கு மேல் திரு.குமரி அனந்தன் அவர்கள் அதன்பேரில் விளக்கம் சொல்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) நான் பாயின்ட் ஆப் ஆர்டரில் பேசுகிறேன். அதுவும் இல்லையென்றால் சபையை நடத்த முடியாது. பிரச்சினை முடிந்த பிறகு மறுபடியும் அதன்பேரில் பேசுவதென்றால் நாங்கள் எல்லோரும்கூட அதைப்போலப் பேசலாம். நம்முடைய சபையினுடைய டைம் போய் விடும். இன்றைக்கு டிஸ்கஷனுக்கு இருந்த நேரமே போய்விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப நேரத்திற்கு முன்னாலேயே போய் விட்டது.

திரு. கே. ரமணி : டிஸ்கஷனுக்கு டைம் கொடுத்தேயாக வேண்டும். வேறு என்ன வழி? டைம் கண்டுபிடித்தாக வேண்டும் அந்த இன்டன்ஷனில் தான் சொல்கிறேன். அவர் பேசக்கூடாது என்பதல்ல என்னுடைய பிரச்சினை. எந்த இடத்தில்முற்றுப்புள்ளி வைப்பது? இந்தச் சபையை எப்படி நடத்திக் கொண்டு போவது? நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அப்படியில்லையென்றால் நமக்கே நியாயம் கிடைக்காது. முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்துத் தெரிவித்தாகி விட்டது. நீங்களும் திருப்திப்பட்டு உறுப்பினரைப் பேசச் சொல்லியாகி விட்டது. அவர் பேசட்டும். மேற்கொண்டு விளக்கம் எதற்கு? தேவையில்லை என்பதால் நீங்கள் தான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

12.40 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது என்னுடையக் கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். திரு. சிங்காரம் மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்களும் கவனிக்க வேண்டும். அவையில் பேசுகிறபோது நீதிமன்றத்திலே ஒன்று இருக்கிறது என்று நீங்கள் மேற்கோள் காட்டினாலேயே நீங்கள் தவறு செய்தவர்களாக ஆகிவிடுவீர்கள். அதுவிதியை மீறுகிற மாதிரிதான். அப்படி ஏதும் காட்டக்கூடாது. அப்படி நீதிமன்றத்திலே இருக்கிற பிரச்சினை பற்றிப் பேசக் கூடாது என்கிறபோது, எழுதப்பட்ட ஆவணம் என்ற ஒரு சொல்லை நீங்கள் பயன்படுத்தினால், எழுதப்பட்ட ஆவணத்தை மேற்கோள் காட்டுவதற்கு உங்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் முன் கூட்டியே என்னுடைய பேச்சில் அதைப் படித்துக் காட்டப் போகிறேன், எனக்கு இசைவு கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். அப்படி எழுதப்பட்ட ஆவணத்தை நானும் பார்க்க வேண்டும். நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு முன் உதாரணத்திற்காகச் சொல்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு சில கட்டங்களில் பதில் சொல்கிறபோதும், மானியக் கோரிக்கைகளில் பதில் சொல்கிறபோதும் கூட அவர்கள் எழுதி, அவருக்கு ''இசைவு அளித்த கடிதத்தையும் கூட நான் வைத்திருக்கிறேன். Illutsrated Weekly'' மற்றும் சில இதழ்களை அவையில் படித்துக் காட்டுவதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் என்னை அனுமதிக்க வேண்டுகிறேன் என்று எழுத்துப்பூர்வமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே எழுதி வாங்கிக்கொண்டு, அதற்குப் பிறகு அவையில் பேசுகிறார் என்று சொன்னால், திரு.சிங்காரம் அவர்களே, இது நீதிமன்றத்திலே இருப்பதாக இருந்தாலும், நீங்கள் பேசி இருக்கக் கூடாது; எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னாலும் என் முன்இசைவைப் பெறாமல் பேசியிருக்கக் கூடாது. அதனால்தான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதன்மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருவேன் என்று சொன்னார்கள்.

அது போக, இங்கே முன்னுக்குப் பின் மாறாக ஒரு சொற்றொடரைக் கையாளக் கூடாது என்றாலும் நீங்கள் தவறான நோக்கத்தோடு செய்திருக்க மாட்டீர்கள் என்ற எண்ணத்தோடு, உங்களுடைய பேச்சில், வேறு அடுத்த பகுதிக்குப் போகலாம். (குறுக்கீடு) முரணாகப் பேசிய அந்தப் பேச்சுக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே இருக்கக் கூடியதை இங்கே பேசக் கூடாது என்று சொன்ன வார்த்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். அப்படி என்றால் உச்ச நீதிமன்றத்திலே மண்டல் கமிஷனைப் பற்றி, ஒரு வழக்கு இருக்கும்போது, இங்கே ஆளுநர் உரையிலே எப்படி மண்டல் கமிஷனைப் பற்றி குறிப்பாக எடுத்து உரைக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கும் நீங்கள் பதில் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு, மண்டல் கமிஷனைச் செயல்படுத்துவது பற்றி மத்திய அரசாங்கத்திற்கும், ஏற்கனவே அதற்கு எதிர்ப்பாகஇருப்பவர்களுக்கும் உள்ள வழக்கே தவிர, இந்த அவை, மண்டல் கமிஷனைப் பற்றிப் பேசக் கூடாது என்றோ, நாம் ஏற்கனவே தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம், அதன் மீது ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிப் பேசுகிறோமே தவிர, நீதிமன்றத்திலே உள்ள வழக்கைப் பற்றி அல்ல. அதற்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது. இதற்குப் பெயர்தான் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும்.......................(சிரிப்பு).

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக சில சூழ்நிலைகளில் வழக்கு மன்றங்களிலே இருந்தாலும் கூட......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே சில சூழ்நிலைகள் எல்லாம் இல்லை. (குறுக்கீடு) If it is irrelevant I cannot allow you (குறுக்கீடு). உரிமை இருக்கிறது. என்பதற்காக நீங்கள் சும்மா பேசிக் கொண்டே இருக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அவையை நடத்திச் செல்கிற பெரிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிற காரணத்தால், எந்த ஒரு பேரவைத் தலைவருக்கும் உள்ள உரிமை என்ற முறையில் ஒரு தீர்ப்போ அல்லது ஒரு ஆலோசனையோ வழங்கினால் உடனே அது குறித்து விவாதம் நடத்துவது என்பது அவையினுடைய முறைக்கு ஏற்றது அல்ல. இது ஒன்று. மற்றொன்று, நீதிமன்றத் தீர்ப்பு என்று சொல்கிற போது ஒரு தீர்ப்பு, ஒரு கட்டளை பிறப்பித்தால் கூட, கொள்கை அடிப்படையில் பேசலாம். கொள்கை வேறு, நடை முறை வேறு. நடை முறையில் தடுக்கப்பட்டு இருக்கிற காரியத்தைக் கூட கொள்கை அளவுக்கு மட்டும் வாதிக்கலாம். நீதிமன்றம் தடுத்தது தவறு என்றோ, நீதிமன்றம் உத்தரவிட்டு இருப்பது த்வறு என்றோ, ஒத்தி வைக்க வேண்டும் என்றோ, அப்படி வாதித்தால் அது தவறு. மண்டல் இந்த ஆண்டு பிறந்தார், இந்த ஆண்டு மறைந்தார் என்று சொன்னால் கூட, அதுவும் தவறு, மண்டலைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது என்று வாதிடக் கூடாது. (குறுக்கீடு). கொள்கை அடிப்படையில் கொள்கை மட்டும் பேசப்படுகிறபோது, அந்தப் பிரச்சனைகள் எத்தனை நீதிமன்றத்திலே இருந்தாலும், அது வேறு. நீதி ம்ன்றத் தீர்ப்பு சம்பந்தமாக அதனால் ஏற்படுகிற முடிவுகள் ச்ம்பந்தமாக, அந்த நீதிமன்றத் தீர்ப்பைப் பாதிக்கும் வகையில், அந்த வழக்கை விளக்கிப் பேசுகிறபோது தான் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்ற கருத்து வருவது ஏற்றது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அவையை நடத்திச்செல்கிற த்லைவருடைய முன்னுரிமைகள் பாதிக்கப்படாத வகையில் இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் நடந்து கொள்ள என்னுடைய வேண்டுகோள் பயன்படும் என்று எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்ந்து இப்படியே பேசிக் கொண்டிருந்தால், 1 மணிக்கு அவையை முடித்து விட்டு அப்படியே போய்விடலாம்.

*திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உரிமைப் பிரச்சினையை எழுப்பியது, அங்கே கைதானவர் நிதியோடு பேசுவேன், நான் திரு. கோபால்சாமியோடு பேசுவேன், திரு. கருணா திருக்கிறேன் என்று சொன்னார்கள் என்பது பற்றி. அடையாள அட்டை, பாஸ் வைத் ஆவணம் இருக்கிறதா என்று நீங்கள் கேட்டீர்கள். அதற்கு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆவணம் பின்னாலே இல்லை என்று





சொன்னார்கள். பிறகு நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, தாங்கள் நீதிமன்றத்திலே இப்படிச் சொன்னதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறதா, இல்லையா என்பதைத் தருவித்து, அல்லது உறுப்பினர் தருவிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து, அதனுடைய அடிப் படையிலே உரிமைப் பிரச்சனைமீது தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

12–45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆளுக்கு ஆள் பேச வேண்டாம். நம்முடைய உறுப்பினர் அவர்கள் இது தொடர்பாகச் சொன்னதை, திரு. வரதராசன் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். நான் மறுபடியும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். திரு. சிங்காரம் அவர்கள் சொன்னது முரணானது என்பதுதான் கருத்து. அதனால்தான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஒரு உரிமைப்பிரச்சினையை எழுப்பினார்கள். நம்முடைய சிங்காரம் அவர்கள் இந்த ஆவணம் நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னார். அது எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அதை நீங்கள் அவைக்கு அளிக்க முடியுமா? அளிக்க வேண்டும் என்பது ஒன்று. இல்லையென்றால், அளிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று சொன்னால், இங்கேயே தெளிவுபடுத்திவிட வேண்டும். (குறுக்கீடு) திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் தாங்கள் முன் கூட்டியே விளக்கம் அது சம்பந்தமாக தொடர்புடைய உறுப்பினருக்குத் தெரிவித்து, முடிவு செய்து விட்டீர்கள். முடிவு செய்துவிட்டு, மீண்டும் அதற்கு நீங்கள் கிளாரிபிகேஷன் கேட்பது நியாயம்தானா என்பதைப் பரிவோடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு மட்டும் ஒரு விடை அளிக்க விரும்புகிறேன். அதாவது நீதிமன்றத்தில் இது சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், எழுதப்பட்ட ஆவணம் என்று சொன்னால், அதை நீங்கள் இங்கே வரவழைத்துத் தரவேண்டும். இல்லையென்றால், அதில் அப்படி ஒன்றும் இல்லையென்றால், திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. கா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டீர்கள். அதற்குப் பிறகு "there cannot be an explanation on words which are non-existent. There is nothing on record (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அந்த வார்த்தைகளின்மேல் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு உரிமைப்பிரச்சினை எழுப்பினார். அதற்குப் பதில் அளிக்கின்ற வகையில் நீங்கள் you have expunged. There is no cause of action விளக்கத்தைச் சொல்லிவிட்டு, நீங்கள் அந்த வார்த்தைகள் முழு

வதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று சொல்லிவிட்டீர்கள். How can you ask for explanation on words which are not on record? The issue is already dead. You cannot give life to it. You have to close the chapter. We have to proceed further with the debate.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, என்னுடைய உரிமைப் பிரச்சினைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிறபோது அதைப் பற்றிய தீர்ப்பை நான் பின்னாலே சொல்கிறேன் என்று சொன்னார். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கியிருக்கிறார், தன்னுடையத் தீர்ப்பை அவர் பின்னால் அளிக்கிறேன் என்று மாண்புமிகு தலைவர் சொல்லி இருக்கிறார். எனவே பொதுப்பணித் துறை அமைச்சரின் உரிமைப் பிரச்சினைக்கான தீர்ப்பு உரைக்கப்படவில்லை. ஆகவே அதுபற்றிய தீர்ப்பை சபாநாயகர் இன்னும் பெண்டிங்கில் வைத்திருக்கிறார். ஆகவே இந்தப் பிரச்சினை இத்தோடு தீர்ந்து விட்டது.

திரு. குமரி அனந்தன் : இதுபற்றி ஏதாவது முடிவிற்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறியது போல் இந்தப் பிரச்சினையை ஒரு முடிவிற்குக் கொண்டுவர நான் ஒரு யோசனை கூறுகிறேன். அது சரியாக இருந்தால் அதனைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு, அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களுக்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர் பேசியவைகள் எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது என்று தாங்கள் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை சிங்காரம் அவர்கள் ஏற்றுக்கொண்டு நான் பேசியது அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம் என்று அவரே சொல்வாரேயானால் இது தீர்ந்து விடும்.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஜனநாயகத்திற்கு முரணான ஒரு கோரிக்கை, நியாயமற்ற கோரிக்கை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவருடைய கோரிக்கையை சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பான தீர்ப்பு நாளைக்கு முறையாக அளிக்கப்படும். முறையான தீர்ப்பு. அடுத்து, சிங்காரம் அவர்கள் தொடர்ந்து பேசலாம். 3 மணித் துளிகள்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அப்படியானால், அவர் இங்கே சொன்ன குற்றச்சாட்டுகளும், அதற்கு தாங்கள் அளித்திருக் கின்ற மறுப்புக்களும், அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டும். அப்போதுதான் தாங்கள் தீர்ப்பு அளிப்பதற்கு வசதியாக இருக் கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்தும் அவைக் குறிப்பில் இடம் பெறுகின்றன. தம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறைஅமைச்சர் எழுப்பியஉரிமைப் பிரச்சினைக்கு நாளை தீர்ப்பு அளிக்கப்படும்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்,—விவாதம்—
—தொடர்ச்சி.

12-50 மணி

திரு. இரா. சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25—11—1990 ஆம் நாளன்று பட்டுக்கோட்டையில் இரவு 11 மணிக்கு கடைத் தெருவில் ஓரகடம் நடராஜன் என்பவரைக் கொலை செய்துவிட்டு 3 லட்சம் ரூபாயைக் கொள்ளை அடித்துச் சென்றிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டு விசாரணையும் துவங்கப்பட்டிருக்கிறது. இது வரையில் எந்தவிதக் குற்றவாளியும் பிடிக்கப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் விடுதலை புலிகள் தான் அங்கே நடராஜனைக் கொன்று விட்டார்கள் என்று எங்கு பார்த்தாலும் மக்கள் எல்லோரும் பேச ஆரம்பித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், (குறுக்கீடு) மறுநாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பட்டுக்கோட்டை வந்தார்கள். அங்கே இருந்த மக்களைச் சந்தித்து, வியாபாரிகளைச் சந்தித்துவிட்டு தஞ்சாவூர் வந்தவுடன் இந்தக் கொலைக்கும், கொள்ளைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று அவர் சொன்னார்.

அதே நேரத்தில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மறுநாள் ஒரு அறிக்கையில் கடல் ஓரப் பகுதிகளில் நடப்பதற் கெல்லாம் விடுதலைப் புலிகளைக் காரணமாகச் சொல்வது முறையாகாது என்று சொன்னார். ஆகவே ஒரு வழக்கைப் பதிவு செய்து விட்டு, சம்பந்தப்பட்டவர்கள் ஆக்ஷன் எடுக்க இருக்கும்போது, குற்றவாளி யார், யார் இல்லை என்று சொல்வதற்கு எந்த உரிமையும் யாருக்கும் கிடையாது என்பதை இந்த அவையிலே சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆகவே இன்வெஸ்டிகேஷன் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில்தான் குற்றவாளி யார் என்பது புரியும். அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் குற்றவாளிகள் அல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவரே சொல்லியிருக்கிறார்கள். இறந்து விட்ட நடராஜன் என்பவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில்

பிறந்து வளர்ந்தவர், நியாயமானவர். அவர் சுட்டுக் கொல்லப்
பட்டிருக்கிறார். அவர் விடுதலைப் புலிகளால் சுடப்பட்டு
இருக்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்
களுடைய குடும்பத்திற்கு நம்முடைய முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம்
ரூபாய் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பட்டுக்கோட்டை நகரம் என்பது மிகவும்
பெரியதாக வளர்ந்து கொண்டிருக்கக் கூடிய நகரமாகவும்,
வியாபார ஸ்தலமாகவும் இருக்கிறது. அங்கே ஒரே ஒரு
போலீஸ் ஸ்டேஷன்தான் இருக்கிறது. அந்த இடத்தில்
சாமியார் மடத்திற்கு அருகிலே ஒரு காவல் நிலையம்
துவக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்
முயற்சிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி
விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் எங்கள் பகுதியிலே நடைபெறும் சம்பவம்
ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்வதைக் குற்றச்
சாட்டாகவோ அல்லது யாரையும் குற்றம் கண்டுபிடிக்கும் வகை
யிலோ சொல்லவில்லை. அது எங்கள் மரபும் அல்ல. எங்க
ளுடைய பகுதியில் இரவு 12 மணிக்கு மேலாக டீசல், பெட்ரோல்,
காய்கறி, மளிகைச் சாமான்கள் என்று அத்தனையும் கடத்தப்படு
கின்றன. இன்று வந்தாலும் அதை நான் காண்பிக்கத் தயாராக
இருக்கிறேன். 12 மணி, 1 மணிக்கு மேலாக ஸ்டீமர் வருகிறது.
அதில் விடுதலைப் புலிகள் வந்து இப்படிப்பட்ட பொருள்களைக்
கடத்திச் செல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை
தொடர்ந்து நடைபெறுகிறது. அங்கே இரவு 12 மணிக்கு அல்லது
1 மணிக்கு மேலே போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது.
ஆனாலும் மல்லிப்பட்டினம், அதிராமப்பட்டினம், புதுப்
பட்டினம் போன்ற அந்தக் கடலோரப் பகுதிகளில் இரவு ஒரு
மணிக்கு மேல் இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை
யும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கி
றேன். இதனால் மீனவர்கள் கடலுக்குப் போக முடியவில்லை.
மீன் பிடிக்க முடியவில்லை. இரவு எந்த நடமாட்டமும் செய்ய
முடியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் மீது
நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் கடந்த 6—12—1990-இல் தஞ்சை மருத்துவக்
கல்லூரியில் பெண்கள் ஹாஸ்டலில் ஒரு பெண் கொலை செய்யப்
பட்டுள்ளார். அதேநேரத்தில் 3 பெண்களை அடித்து நொறுக்கிக்
காயம் அடையச் செய்திருக்கிறார்கள். மிகப் பெரிய அளவிலே
காயம் அடைந்த நிலையில் அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்
பட்டு, ஒரு சிலர் இப்போது தேறி வருகிறார்கள். அப்படிப்பட்ட
நடவடிக்கைகள் நடந்திருக்கும்போது அதற்குக் காரணமாக, சில



அப்பாவிகள் மாட்டப்பட்டிருக்கிறார்கள். உண்மையான குற்ற
வாளி இதுவரை கைது செய்யப்படவில்லை. அதற்கும் உடனடி
யாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

5—12—1990-ஆம் நாள் அன்று தஞ்சை மாவட்டம் வல்லம்
பகுதியில் ராஜப்பா என்பவர் வீட்டில் புகுந்து அடித்து நொறுக்கித்
தரைமட்டம் ஆக்கியிருக்கிறார்கள். வீட்டினுள் இருந்த வெற்றிச்
செல்வி என்னும் கர்ப்பிணிப் பெண்ணை, பெண் என்று கூடப்
பார்க்காமல் வயிற்றிலே கம்பாலும், கட்டையாலும் கதறக் கதற
அடித்து, அந்த வெற்றிச் செல்வியை ஒரு டாக்சியிலே கடத்திச்
சென்று, நீடாமங்கலத்திற்குக் கொண்டு போய் அங்கேயும்
காயம் அடையும் அளவில் தாக்கியிருக்கிறார்கள். இதுவரை
அதற்கும் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்து நட
வடிக்கை எடுத்து யாரும் கைது செய்யப்படவில்லை. ......

திரு. எம். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வல்லம்
என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே
சொல்லுகிறேன். 15 பேர்களைக் கைது பண்ணி அவர்கள்
எல்லாம் அதற்குப் பின்னாலே ஜெயிலிலே அடைக்கப்பட்டு
ஜாமீனில் வெளி வந்திருக்கிறார்கள். அதிலே முதன்மை என்று
கருதப்பட்டவர் கூட முன் ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்.
ஆகவே கைது செய்யப்படவில்லை என்று * உண்மைக்கு
மாறான ஒரு கருத்தை, தவறான ஒரு கருத்தைச் சொல்ல
வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12-55 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்ற சொல்லை
பயன்படுத்தக்கூடாது ; " உண்மைக்கு மாறான " என்று சொல்ல
வேண்டும்.

திரு. எம். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, " உண்
மைக்கு மாறான " என்று திருத்திக் கொள்கிறேன்.

திரு. இரா. சிங்காரம் : மெயின் குற்றவாளி கண்டுபிடிக்கப்
படவில்லை என்றுதான் நான் சொன்னேன். உரிய நடவடிக்கை
எடுத்து, அவரையும் உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும்.
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
மாறி, மாறிப் பேசுவது இந்த அவையின் மரபுக்கு நல்லதல்ல.
யாரையும் கைது செய்யவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றி
அமைக்கப்பெற்றது.

என்று அவரே சொன்னார். உடனே அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அதை மறுத்து, இவ்வளவு பேர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் ; இன்னின்னார் முன்ஜாமீன் பெற்றிருக்கி றார்கள் என்று சொன்னவுடனே ''நான் அப்படிச் சொல்ல வில்லை ; சிலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன் '' என்று சொல்கிறார். இப்படி முன்னுக்குப் பின் முரணாகச் சொல்வது முறையல்ல ; இந்த அவையின் மரபும் அல்ல.

திரு. இரா. சிங்காரம் : மெயின் குற்றவாளி கைது செய்யப் படவில்லை என்றுதான் சொன்னேன். இதைத்தான் முதலிலே சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு மணித் துளிக்கு முன்னாலே பேசியதை எப்படி மறுக்கிறீர்கள் ? நீங்களே சொந்தமாக ஒரு பட்டிமன்றம் நடத்துகிறீர்களா ? அந்தமாதிரி எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) அப்படிப் பேசக்கூடாது. மீண்டும் நீங்கள் பேசும்போதாவது கவனமாகப் பேசவேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கனம் சபாநாயகர் அவர்களே, அன்பிற்குரிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் பல கேஸ்களில் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை, கைது செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதிலிருந்து உண்மையான குற்றவாளிகள் அவருக்குத் தெரிந்திருந்து, ஏதோ நடந்திருப்பது போலத்தெரி கிறது அப்படியானால் அவரே அந்தப் பெயர்களை எழுதிக் கொடுக்கலாம் இல்லையா? உண்மையான குற்றவாளிகள் இவர்கள் தான்என்று எழுதிக்கொடுத்துவிட்டு அல்லது சொல்லிவிட்டு, நீங்கள் நடவடிக்கை எடுங்கள் அல்லது அவர்களைப் பிடியுங்கள் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம். பல கேஸ்களில் உண்மை யான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை, கண்டுபிடிக்கப் படவில்லை என்று சொல்கிறார். அப்படியானால் அவருக்குத் தெரிந்திருக்கும் இல்லையா ? தெரியாமல் சொல்லியிருக்க மாட்டார். (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஏதோ குற்றவாளிகளை எல்லாம் தெரிந்து வைத்திருப்பது போலவும், அவர் மறைப்பது போலவும் பேசுகின்ற ஒரு எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் உருவாக்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் உருவாக்க வில்லை ; திரு. சிங்காரம்தான் உருவாக்குகிறார். (குறுக்கீடுகள்) குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை ; Main குற்றவாளி





கண்டுபிடிக்கப்படவில்லை ; யாரையும் கைது செய்யவில்லை என்று சொன்னார். உடனே சம்பந்தப்பட்ட தொகுதி உறுப் பினர் 15 பேர்களைக் கைது, செய்திருக்கிறார்கள் என்று சொல்லி விட்டார். அதற்குப் பின்னர் Main குற்றவாளி கைது செய்யப் படவில்லை என்றுதான் சொன்னேன் என்று மீண்டும் சொன்னால் என்ன அர்த்தம் ? இப்படி முன்னுக்குப்பின் முரணாகப் பேசக்கூடாது. (குறுக்கீடு)

திரு. இரா. சிங்காரம் ; தலைவரவர்களே, அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலே கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெற்றது. அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பொறுத்தவரையில் 'ஜனநாயக முறையில் மிகப்பெரிய வெற்றியைக் கண்டிருக்கிறது இந்த அரசு' என்று பெருமிதத்தோடு அறிக்கை விட்டார்கள். ஆனால் இங்கே ஒரு குற்றச்சாட்டை நான் சொல்லியாக வேண்டும். ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது உண்மையானால்— திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளான தினகரன், முரசொலி ஆகிய இரண்டு பத்திரிகைகளில் மட்டும் தான் விளம்பரம் கொடுத்தார்கள். வேறு எந்தப் பத்திரிகைக்கும் விளம்பரம் கொடுக்கவில்லை. இதுதான் ஜனநாயகமா ? அதே நேரத்தில் நாங்கள் உறுப்பினர் களைச் சேர்க்கப்போனால், நேரம் இல்லை, காலம் இல்லை, புத்தகம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர் களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ அந்தப் புத்தகத்தை எடுத்து வீட்டிலே கொண்டு வைத்துவிட்டு, உறுப்பினர்களை எல்லாம் சேர்த்துவிட்டு, நேரம் முடிந்த பின்னால், காலம் முடிந்த பின்னால், புத்தகத்தைக் கொடுத்துவிட்டு, ஓட்டைப் போட்டு தேர்தலிலே வெற்றிபெற்றிருக்கிறார்களே தவிர, உண்மையான ஜனநாயக முறைப்படி தேர்தல் நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. சிங்காரம் அவர்கள் தொடர்ந்து தவறான கருத்துக்களை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண் டிருக்கிறார்கள். சட்டத் திருத்தம் இந்த மன்றத்திலே ஏகமன தாக நிறைவேற்றப்பட்டு, எல்லாப் பத்திரிகைகளிலும் அறிக்கை கொடுத்த பின்னால், நீங்களே கூட தேர்தல் நடத்தவில்லை, தேர்தல் நடத்தவில்லை என்று சொன்ன பின்னால், நடத்து கிறோம் என்று வாக்குறுதி கொடுத்து 31-12-1990-க்குள் ஆரம்பச் சங்கங்களின் தேர்தலை நடத்துகிறோம் என்று அறிக்கை விட்டு, இந்த மன்றத்திலும் பலமுறை அறிவித்துவிட்டு, எல்லாப் பத்திரிகைகளுக்கும் அறிக்கை கொடுத்த பின்னால் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அதிலே குற்றச்சாட்டு ஏதாவது இருந் தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு சொல் வார்களானால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் இன்னும் ஒரு மணித் துளிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து பேராவூரணியில் சுமதி என்கிற ஒரு பெண்ணை அந்த ஊராட்சித் தலைவர் கற்பழித்தார் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : அவர்தான் கற்பழித்தார் என்று உங்களுக்குத் தெரியுமா ? அதை நீங்கள் பார்த்துக் கொண்டே இருந்தீர்களா ? (குறுக்கீடுகள்) அந்தக் கதை எல்லாம் நடக்காது. அவர் கற்பழித்ததை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்களா? இல்லை என்றால் எப்படிச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. சிங்காரம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். உடனடியாக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்து ராமலிங்கம் அவர்கள் அதை மறுத்துக் குறிப்பிட்டு, ''ஏதாவது ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன், பதில் சொல்கிறேன்'' என்று சொன்னார்கள். உடனடியாக அதை விட்டுவிட்டு ஏதோ கற்பழிப்புச் சம்பவத்திற்கு அவர் திடீரென்று தாண்டுகிறார். இவைகள் எல்லாம் முறையான பேச்சுக்கள் தானா என்பதை அவருடைய கட்சியிலே உள்ள மூத்த தலைவர்கள் சிந்திக்க வேண்டும் என்றுதான் நான் என் னுடைய பணிவன்பான வேண்டுகோளாக இங்கே வைக்க விரும்புகிறேன்.

(13-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அவையினுடைய அலுவல் ஒரு மணித்துளி நீட்டிக்கப்பட்டிருக்கிறது. திரு. சிங்காரம் அவர்கள் பேச்சை முடித்துவிடலாம்.

திரு. இரா. சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுமதி என்ற பெண் விவகாரமாக நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் நான் தெளிவாகச் சொன்னேன். நம்முடைய முதல்வர் அவர்களும் அதை விசாரித்துச் சொல்வதாகச் சொன்னார்கள். உடனடியாக விசாரித்தார்கள். உண்மை என்று தான் தெரிகிறது என்று நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். நடவடிக்கை எடுத்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் சிங்காரம் என்னிடம் சொல்லும்போது, அது சம்மதத்துடன் நடைபெற்ற கற்பழிப்பு என்று தான் சொன்னார். (சிரிப்பு)

திரு. இரா. சிங்காரம் : நம்முடைய முதல்வர் அவர்கள் மீது நான் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறேன். உண்மைக்கு மாறான ஒரு தகவலை முதல்வர் அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி நான் சொல்ல



வும் இல்லை. முதல்வர் அவர்கள் தமாஷாகச் சொல்கிறார்கள். அவ்வளவுதான். முதலமைச்சர் இண்ட்ரஸ்டட் கேஸ் என்று பி.ஏ. சொன்னார், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எஸ்.பி.-யே சொன்னார் என்று சொன்னார்கள். அதன் பிறகு அந்தக் கேஸ் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு அமைச்சர் கோ. சி. மணி அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். ஏன் அவர் கோபித்துக் கொள்கிறார் ? எதற்காகக் கோபித்துக் கொள்ள வேண்டும் ? ஒரு அமைச்சருக்கு ஏன் கோபம் வருகிறது ? எப்படி வருகிறது ? சம்பந்தப்பட்ட....(கூச்சல்-குழப்பம்). முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டார். சாதாரண ஒரு ஏழைப் பெண்ணை, ஒரு அப்பாவிப் பெண்ணைக் கற்பழித்து நடு ரோட்டில் விட்டுவிட்டு.....

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல், தஞ்சை மாவட்டத்தில் அவர் தனித்து வெற்றி பெற்று வாகை சூடிய காரணத்தால், அன்றிலிருந்து அவர் மீது வீண் பழி சுமத்த வேண்டும் என்று ஒரு பொய்க் குற்றச்சாட்டைப் பலமுறை சுமத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அதிகாரிகளே எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். பொது மக்கள் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சில கட்சிக் காரர்கள் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதனால் தான் நான் ஆத்திரப்பட்டுச் சொன்னேன். ஊராட்சி மன்றத் தலைவர் கற்பழித்தார் என்று சொன்னால் அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர், எப்படித் தாங்கிக் கொண்டிருக்க முடியும் ? (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் பேச்சை முடித்துவிடலாம்.

திரு. இரா. சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சிங்காரம் சொல்வது பொய் என்று சொல்லட்டும் அல்லது உண்மைக்கு மாறானது என்று சொல்லட்டும். நான் என்ன வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் முதலமைச்சர் அவர்களே தலையிட்டு நேரடி நடவடிக்கை எடுக்கச் சொன்ன பிறகு அதற்கு மேலே உள்ள முதலமைச்சரா அவர் ? (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் , சீக்கிரம் பேச்சை முடித்துவிடலாம். (கூச்சல்-குழப்பம்).

திரு. இரா. சிங்காரம் : நான் முதலமைச்சர் அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். நடவடிக்கை எடுத்து ஆவன செய்வாரா என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அவர் மீது நம்பிக்கை உண்டு. (கூச்சல்— குழப்பம்) இந்த மாதிரிப் பேசக் கூடாது. மரியாதையாகப் பேச வேண்டும். (கூச்சல் — குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். சிங்காரம், பேச்சை முடியுங்கள்.

திரு. இரா. சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக, கடந்த 17-12-1990 ஆம் நாள் அன்று முத்துப்பேட்டை கோயிலூரில் ஒரு தகராறு நடைபெற்றது. அதை விசாரிக்கச் சென்ற நிருபர்கள் தினமலர் நிருபர், தினந்தந்தி நிருபர் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு நியாயம் தானா? என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். அதே நேரத்தில், தமிழகத்தில் தினமலர் உண்மைக்குப் புறம்பாக எழுதியதாகச் சொல்லி பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஜுனியர் விகடன் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. தராசு மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. மதுரையிலே இருக்கின்ற தினமணி மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திற்கு மாறாக இந்த அரசு நடந்து கொண்டிருக்கிற காரணத்தால் தயவு செய்து மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக அரசை உடனடியாக டிஸ்மிஸ் செய்து (கூச்சல் — குழப்பம்) மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

13-05 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-1-1991) 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

70. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-5-1990 ஆம் நாளிட்ட 272 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. சென்னை கிரிமால்டஸ் ரெபிரள் மருத்துவமனை மற்றும் தொழுநோய் நிலையத்திற்கு சொந்தமான 6 மோட்டார் வண்டிகளுக்கு சலுகை வீத வரி குறித்து உள் (போ.அ.) துறையின்





26—7—1990 ஆம் நாளிட்ட 1755 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

72. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 9—7—90 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் ஒரு திருத்தம் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 10—5—90 ஆம் நாளிட்ட 540 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

74. பிராணிகள் வதை தடுப்புச் சங்கம், திருவாளர்கள் சென்சூரி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் —இடமிருந்து மோட்டார் வண்டி வாங்குவதற்கு விற்பனை வரி விலக்கு அளித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—10—90 ஆம் நாளிட்ட 587 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

75. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.) (தமிழ் மற்றும் ஆங்கிலம்].

### ஆ. அறிக்கைகள் அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

13. தமிழ்நாடு விழிப்புப் பணிக்குழுவின் 1—4—1987 முதல் 31—3—1988 வரையிலான இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

14. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

[1991 சனவரி 21

15. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

16. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

17. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

18. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

19. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

20. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (முதலாவது பட்டியல்).

21. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாம் பட்டியல்).

---

144895

D

V2N,3N,91

N91.36.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sithuraman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirapalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Anantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director Stationery and Printing Madras.

©